# மனிதனின் சமயம்

மூல ஆசிரியர்:

ரவீந்திரநாத டாகுர்

தமிழாக்கம்:

த. நா. ஸேனாபதி, எம். ஏ.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.

First Edition, June 1959—5000 Copies.

# மனிதனின் சமயம்

# THE RELIGION OF MAN

By

RABINDRANATH TAGORE

Tamil Translation

T. N. SENAPATI, M.A.

*Copyright* :
M/s. George Allen and Unwin Ltd., Museum Street, London

Published under the auspices of
The Southern Languages Book Trust, Madras.

Copyright of this Tamil Edition belongs to
Kalaimagal Office, Madras-4

Price Rs. 1-40

Printed at the M. L. J. Press Private Ltd., Mylapore, Madras-4

# அணிந்துரை

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு, தன்னுடைய முன் அநுபவங்களாலும், பொதுமக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும் இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பலதிறப்பட்ட சுவைகளுக்கு ஏற்பவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையின் பலவகைக் கூறுபாடுகளையும் பற்றிய பலபல பொருள்கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந்தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கறை கொண்டு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவும், நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப்பெருந்தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப்பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்துகொள்வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் என்பனவும் இவ்வரிசையில் இடம் பெற்றுள்ளன. சிறு கதைகளுக்கும் பண்டைய கலைகளைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வது நலமாகும். நடநாடகக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்றென்றும் வியத்தகு பொருள்களாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவையும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன. இப்போது வெளியிடப்பெறும் இந்த நூல் வரிசை படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப்பட்ட

பொருள்களை வழங்கும் என்பது என் துணிபு. பொதுமுறைக் கல்விக்குரிய பொருள்களைக் கொண்ட இத்தகைய வெளியீடுகள் மேன்மேலும் பெருகும் பெருந்தொகையினராகிய வாசகர்களைக் கவர்ந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் வெளியீட்டுத் திட்டத்தில், தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழிபெயர்க்கும் அம்சம், பாராட்டுத் தகுதி யுடையதாகும். இவ்வரிசை முற்றுப் பெற்றதும், எழுதப்படிக்கமட்டும் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ள ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்துவரும் தொகையினருடன் இணைத்து, இவ்வாற்றால் அவர்கள் தாங்களாகவே மிக்க திறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிவு. தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங்களோடு தொடங்கப்பெற்றதோ அந்த நோக்கங்கள் அஃது ஆற்றிவரும் அரும்பணியால் மேன்மேலும் நிறைவேறிவரும் என்று நான் நம்புகிறேன்.

சென்னை.

ஏ. எல். முதலியார்,
துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

# முன்னுரை

பாரதநாட்டு மக்களுக்கு ரவீந்திரநாதரை அறிமுகப் படுத்தவேண்டியது தேவையில்லை. இவர் நம் தேசீயக் கவிகளில் முதலிடம் பெற்று விளங்குகிருர். இன்று இந்தியாவில் அந்த அந்தப் பிராந்திய மொழிகளில் கவிஞர்களாகச் சிறப்புற்றிருக் கும் எவருமே மொத்தத்தில் இந்த விசுவகவியினிடமிருந்து ஊக்கமும் உணர்வும் பெற்றவர்களே; ஏன், இவருடைய அடிச் சுவட்டைப் பின்பற்றி நடப்பவர்கள் என்றும் சொல்லலாம். ரவீந்திரர் மகாகவி என்று புகழ்பெற்றவர்; மதிப்பரிய நோபல் பரிசும் பெற்றவர். இருந்தாலும், ஒன்றை நாம் மறப்பதற் கில்லை. இவருடைய கவிதைக்கு உயிரூட்டியவை, இசைக்கு உணர்வு தந்தவை உபநிடதங்களே; உலகிலேயே மிகப் புனித மாக விளங்கும் ஆதி இலக்கியமான வேதங்களின் சிகரம் அல்லவா இந்த உபநிடதங்கள்! மனித தருமம் என்று இவர் குறிப்பிடும் இவரது சமயமே கவியுணர்வின் ஆழத்திலிருந்து எழுந்த ஊற்றுத்தான். 'எல்லாக் கலைகளுக்கும் நிலைக்களனுக இருப்பது உணர்வதற்கரிய ஒருவகைத் தத்துவந்தான்' என்பதை உலகம் இன்று ஏற்றுவருகிறது. இந்த உண்மையைக் கண்டறிந்தால்தான் ஆக்க வழியில் வளரும் கலைகள் எல்லாம் என்றென்றும் நிலையானவை என்பதை உணர்ந்துகொள்ள முடியும். நம் அதிருஷ்டவசமாகத் தம் காவியக் கனவுகளுக்கும் அநுபவங்களுக்கும் அடிப்படையாக உள்ள தத்துவத்தை ரவீந் திரர் தாமே விளக்கியிருக்கிருர். 'சத்தியம்' என்பதன் இயல்பை அவர் சௌந்தரியம் அல்லது அழகைப் போற்றுவதன் மூலமும் கற்பனைக் கனவுகளைக் காணுவதன் வாயிலாகவும் உய்த் துணர்கிருர். உயிரின் பரிணும வளர்ச்சி, உருவங்களிலிருந்து படிப்படியாகப் பண்பு அல்லது தன்மை என்ற முறையில் முன்னேறிவருவதையும் அதில் அமைந்த சிறந்த தத்துவப் பொருளையும் அவர் உணர்த்தும்போது மனிதனுடைய பரிணும

வளர்ச்சியையும், நிலையாக மதித்துப் போற்றும் ஆழ்ந்த பண்புகளையும் பற்றி எவ்வளவு கவர்ச்சியாகச் சொல்லியிருக்கிறார்! வேதத்திலே புருஷசூக்தத்தில் காணும் 'புருஷன்' என்பதும் சரி; பகவத் கீதையில் வரும் 'புருஷோத்தமன்' என்பதும் சரி; ஆக்க வழியில் உயிர் வளர்ச்சிபெற்றதைத்தான் உணர்த்தும். எல்லாம் அந்தப் புருஷனுடைய பேரருஞ்செயலைத்தான் குறிக்கின்றன. அவனே சாந்தி, அவனே சிவம் (மங்களம்), அவனே சுந்தரம் (அழகு). ரவீந்திரர் எல்லாவற்றிலும் அந்தப் பரமனின் அழகு வெளிப்படுவதையும், அளவில் பெரியது சிறியது எல்லாப் பொருளிலும் அற்புதம் மிகுந்த உள்ளங் கவரும் அவனுடைய திருவிளையாடல்களையுமே காண்கிறார். கருமம் அல்லது செயலினாலும் ஞானத்தாலும் ஆண்டவனை அறிந்து போற்றினாலும் பிரேமை அல்லது பேரன்பினால்தான் எல்லாப் பொருள்களுக்குள்ளும் மறைவில் அடங்கியிருக்கும் அழகை ஆழ்ந்து உணரமுடியும். பிரகிருதி அல்லது இயற்கையும் மனிதனும் தெய்விகம் பொருந்திய பரமபுருஷனின் அங்கந்தான். அவனே எல்லாப் பொருள்களிலும் நிறைவுற்று விளங்குகிறான். இந்த நிறைவின் தன்மையை எவ்வகையிலும் எடுத்துரைக்க முடியாது. அனைத்தையும் பரிபூரணமாக்குவது, சிறப்புறச் செய்வது இந்த நிறைவே; தெய்விக சௌந்தரியம் ஆக்கமுற நிறைவெய்துவது இதனாலேயே. பரமசத்தியத்தின் ஆக்கவுணர்வே சௌந்தரியமாகும். அந்தச் சத்தியம் பரமபுருஷனோடு சம்பந்தமற்றது என்றோ நிர்க்குணமானது என்றோ சொல்வதற்கில்லை. அது புருஷனுடன் தொடர்புள்ளது தான்; மனிதப்பிறவிகளுடன் அது பொருந்தமுடியும்; இந்த உறவு சிறப்பாகவும் அமையும். உண்மையான கவிஞனுடைய தத்துவம் இதுதான்; நிலைபெற்ற தத்துவமும் இதுவே. ஒரு சமயம் ரவீந்திரர், "துறவறம் என்பது எனக்கில்லை" என்று எழுதினார். ஆண்டவன் படைத்த இந்த உலகமே சௌந்தரியமயமானது என்பதை ஏற்றுத் தமக்கு அவ்விதம் ஏற்பட்ட அநுபூதி மூலமாகத்தான் - ஆண்டவனின் அழகே எல்லாப் பொருள்களிலும் இருப்பதைக் கண்டு உணர்ந்ததால்தான் - இவருக்கு இந்தப் பேரின்பம் கிட்டியது; எல்லாச் செயல்களிலும் அந்த ஆனந்தத்தையே இவர் கண்டார். இதனாலேயே, இந்தியாவில் ஆக்கவுணர்வை உணர்த்த வந்த கவிஞராகவும், கல்வித்துறையில் ஆற்றல் மிகுந்தவராகவும் விளங்கினார்.

ஆண்டவனுடைய சௌந்தரியத்தில் மற்ற எல்லா உண்மைகளும் அடங்கியிருப்பதை உணர்ந்து, ஆத்மிக விடுதலையே உண்மையானது என்று கண்ட தீர்க்கதரிசி அவர்.

ரவீந்திரருடைய நூல்களைச் சிறிதளவேனும் படித்தவர்களுக்குக் கூட, நிரந்தர சத்தியமான இந்த அழகுணர்ச்சியில் நிச்சயம் ஈடுபாடு ஏற்படத்தான் ஏற்படும். இதனால் இம்மையிலும் மறுமையிலும் எல்லாப் பொருள்களிலும் அவர்கள் அந்தத் தெய்விக சௌந்தரியத்தையே நாடுவார்கள் என்று சொல்லலாம். ஆகவே, ரவீந்திரர் எழுதிய இந்த நூலைப் பாரத நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியே. இன்றைய பாரதத்தில் தோன்றிய இந்தத் தவப் பெரும் புதல்வருடைய நூல்களை மேன்மேலும் படித்தறிய இது ஊக்கம் அளிக்கும் என்று நம்புகிறேன்.

திருப்பதி

**கே. ஸி. வரதாசாரி,**
**(தத்துவப் பேராசிரியர்,**
**வேங்கடேசுவரா பல்கலைக் கழகம்)**

# ஆசிரியர் முன்னுரை

ஆக்ஸ்போர்டில் உள்ள மான்செஸ்டர் கல்லூரியில் 1930 மே மாதம் நான் செய்த ஹிப்பர்ட் பிரசங்கங்கள் இந்த நூலில் அடங்கியுள்ளன. ஏற்கனவே என் வாழ்நாளில் இந்தப் பொருள்பற்றி நெடுங்காலமாக நான் நிகழ்த்திய பிரசங்கங்களில் வரும் என் கருத்துக்களும் கோவையாக இதில் அமைந்திருப் பதைக் காணலாம்.

இவற்றில் எல்லாம் ஒரு முக்கியமான கருத்துத் தொடர்ந்து அமைந்திருப்பதிலிருந்து மனிதனின் சமயம் என்பது என் சிந்தனையிலே வெறும் தத்துவமாக மட்டும் இராமல் அறநெறியில் நான் கண்ட அநுபவமாகவும் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அநுபவம் இராத இளைஞனாக இருந்தது தொடங்கி இன்றுவரை நான் எழுதி வந்துள்ள நூல்களில் எல்லாம் பெரும்பாலும் இந்த மனித சமயத்தின் வளர்ச்சியே இடைவிடாமல் தொடர்ந்து வந்திருப் பது தெரிகிறது. நான் தொடங்கிவைத்த காரியங்களிலும் பேசிய பேச்சுக்களிலும் ஓர் ஆழ்ந்த ஒற்றுமை உணர்வு இருப்பது புலனாகிறது; வெகுகாலமாக எப்படி விளக்குவதென்று எனக்கே புலப்படாமல் இருந்த விஷயம் இது.

இந்த நூல் தொகுப்பில் என் சொந்த வாழ்வின் அநுபவத் தையே இதற்குச் சான்றாக எடுத்துக் காட்டியிருக்கிறேன். வாசகர்களில் சிலருக்கு இது மனத்தத்துவ ரீதியில் பயன்படும். மற்றவர்கள் சமயம் அல்லது அறநெறி என்ற முறையில் ஒரு தனிச் சிறப்பு இதில் இருப்பதை உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

ஹிப்பர்ட்டின் பெயரால் நிறுவப்பெற்ற இந்தத் தரும ஸ்தாபனத்தின் பொறுப்பைக் கவனித்து வருவோருக்கு என் மன மார்ந்த நன்றி; அதிலும், டாக்டர் டபிள்யூ.எச். டிரம்மண்டு அவர் களுக்கு என் விசேஷ நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்

கிறேன். இந்தப் பிரசங்கம்பற்றி அவருடன் அடிக்கடி கடிதப் போக்குவரத்து நடந்திருக்கிறது. 1928-ஆம் ஆண்டிலேயே நிகழ்த்தவேண்டிய ஹிப்பர்ட் பிரசங்கம் இது; அப்போது ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுச் செல்ல முடியாதபடி பெரிதும் உடல்நலம் குன்றிக் கிடந்தேன்; 1930 வேனில் வரைக்கும் இதை ஒத்திவைக்க அவர் இசைந்தார். அதோடு நான் செய்த பிரசங்கத்தில் வரும் விஷயத்தை அப்படியே பிரசங்க வடிவில் இராதபடி மொத்தத்தையும் விரிவாக்கி அத்தியாயங்களாகப் பகுத்திடத் தயை கூர்ந்து எனக்கு அநுமதி தந்ததற்கும் ஹிப் பர்ட் தருமஸ்தாபனப் பொறுப்பாளர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். இன்னும் ஒன்றையும் குறிப்பிடவேண்டும்: ஆக்ஸ் போர்டில் நான் டிரம்மண்டுகளோடு தங்கியிருந்தபோது, இந்தப் பிரசங்கத்துடன் நெருங்கிய சம்பந்தம் உள்ளவர் என்ற முறையில் திருமதி டிரம்மண்டு அவர்கள் என்னிடம் பெரிதும் பரிவுடன் நடந்துகொண்டதும் எப்போதும் என் நினைவில் இருக்கும்.

ரவீந்திரநாத டாகுர்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மனிதப் பிரபஞ்சம் | .. | 1 |
| 2. | படைப்புத் தெய்வம் | .. | 15 |
| 3. | மனிதனிடமுள்ள நிறைவு | .. | 46 |
| 4. | யோகம் | .. | 64 |
| 5. | தீர்க்கதரிசி | .. | 74 |
| 6. | நான் கண்ட அநுபவம் | .. | 80 |
| 7. | என் உள்ளத்தில் உறைபவன் | .. | 87 |
| 8. | கீதம் இசைப்போன் | .. | 92 |
| 9. | கலைஞன் | .. | 96 |
| 10. | மனித இயல்பு | .. | 99 |
| 11. | முக்தி | .. | 115 |
| 12. | நான்கு ஆசிரமங்கள் | .. | 128 |
| 13. | முடிவுரை | .. | 142 |

# மனிதனின் சமயம்

## 1. மனிதப் பிரபஞ்சம்

படைப்பில் எங்கும் பரவி நிற்கும் சக்தி, ஒளி; அது. குறுகிய ஆகாச வெளியிலே அணுக்களை வட்டமிட்டு ஆட்டுவிக்கத் தொடங்கியது; காலம், இடம் என்ற தனித்த, அகன்ற அரங்கிலே, விண்மீன்களை ஆட்டிவைக்க ஆரம்பித்தது. தீயில் குளித்துக் கிரகங்கள் யுகம் யுகமாகச் சூரிய வெப்பத்தில் காய்ந்தன. மௌன மான, ஏகாந்தமான ஜடப்பொருளின் ஆசனங்களாக அவை நின்றன. தன் குருட்டு விதியைப்பற்றி அந்த ஜடப்பொருள் அறியவில்லை; தன் தனியாட்சிக்கே ஆபத்து விளைவிக்கப் போகும் எதிர்காலத்தைக் கம்பீர மாக உறுத்து நோக்கியது அது.

பிறகு இந்தப் பெரிய நாடக அரங்கில் தானுகவே சுழலும் மிகச் சிறிய அணுக்கூறு (Cell) ஒன்று உயிர் பெற்று எழுந்தது. தனக்கே இயல்பாக அமைந்த வளர்ச்சி, சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை மாற்றி அமைத் துக் கொள்ளும் சக்தி - இவை காரணமாக இந்த அணுக் கூறு பெரிய உருவம் கொண்ட ஜடப்பொருள்களை எதிர்த்து நின்றது. அவை அவ்வளவு பருமனுகவும் கன மாகவும் இருப்பது வீண் என்பதை எடுத்துக் காட்டி யது; 'பெரிய உருவமோ கனமோ உயர்வு ஆகாது; நின்று நிலவுவதில்தான் உயர்வு உண்டு, சிறப்பு உண்டு' என்பதை உணரும் சக்தி பெற்றது இந்த அணுக்கூறு. இயற்கை விதிக்கு அடங்கி, இயற்கையின் ஜடமான

எதிர்ப்புச் சக்தியைக் கடந்து, படைப்பின் பல வழிகளில் இந்த உயிரைப் பெருக்கவும் இது முயன்றது.

எவரும் அறியாத ஒரு நிலையை நோக்கிக் கிளம்பிய நுண்மையான இத் தனி உயிர்க்கூருேடு படைப்பின் அற்புதம் நிற்கவில்லை; சிறு உயிர்க்கூறு பல இணைந்து பெரிய உயிர்க்கூறு ஆயின. ஒரே மொத்தமாகக் கூடிய தால் இவை இப்படி இணைந்துவிடவில்லை; தம் வினைகளைச் செவ்வனே கூட்டி நிலை பெறுத்தும் பலவகைத்தான உள்ளுறவால் இவை இணைந்தன.

ஐக்கியம் அல்லது இணைப்பு ஏற்பட்டது இப்படித் தான். உயிர்கள் வாழ்வதற்குக் காரணமாக உள்ள, ஆராய்ந்து அறிய முடியாத ஒரு தெய்விக ரகசியம் இது. இப்படி ஒன்ருேடு ஒன்று ஒத்து நடக்கக் கூடிய நிலையில், இந்தப் பெரிய உயிர்க் கூறுகள் தம் விருப்பத்திற்கு ஏற்பச் செயற்படும் சுதந்தரத் தன்மை பெற்றன. இப்படியே இவை தம் உடம்பில் சக்தி பொருந்திய புதிய உறுப்புக்களையும், திறமையாக வேலை செய்யும் புதிய கருவிகளையும் அமைத்துக்கொண்டன; அவற்றை வளர்த்தன. உயிருக்கு உள்ள ஆற்றல் எத்தன்மையது என்பதை விளக்கும் இந்தத் தத்துவமே பரிணும முறை (Evolution) ஆகும்.

ஆனுல் இப்படித் தொடர்ந்து நடந்துவரும் பரிணுமவளர்ச்சி ஓர் அளவுக்குத்தான் இயலும். இதை மீறிப் போனுல் இதுவே பெரும் பாரமாகி வாழ்வில் இயற்கையாக அமைந்த சீரைக் (Harmony) கெடுத்து விடும். இவ்விதம் உடலிலுள்ள ஊனை வளர்க்க முற்பட்ட பிராணிகள், அளவுக்கு மிஞ்சின தம் உடற்பருமனுலேயே அழிந்து ஒழிந்தன.

இந்த மாதிரி அவை அழிவதற்கு முன்பே மனிதன் தோன்றிவிட்டான். கட்டுப்பாடு இல்லாமல் உடற் பருமன் வளரும் நிலையிலிருந்து, நுட்பமாகவும் சீராகவும் உடல் அமையும்படி பரிணுமமுறையை அவன் மாற்றி விட்டான்; அதன் சுதந்தரப் போக்குத் தடைப்படாத

படி வழி வகுத்தான். இதனால் அவனும் தங்கு தடை இல்லாமல் முன்னேற முடிந்தது; தனக்குள்ள எல்லை யற்ற ஆற்றலையும் அவன் இதிலிருந்து அறிந்து கொண்டான்.

தீ மூட்டியிருக்கிறது; சம்மட்டிகள் வேலை செய்கின்றன. பல நாள் இரவு பகல் தும்பு, தூசி, அடி, முழக்கம் இவற்றினிடையே உழைத்து இசைக்கருவி செய்யப் படுகிறது; இதைத் தனிப்பட்ட ஓர் உண்மையாகக் கொண்டு இதன் பரிணாமத்தைக் கவனிக்கலாம். ஆனால் இந்தக் கருவியிலிருந்து இனிமையான இசை வெளியாகும் போது, 'இசைக்கு மாறான தன்மையிலிருந்து இது உருவாகியிருந்தும் இதுவும் இசையின் ஒரு தோற்றமே' என்பதை உணருகிறோம். பல யுகங்களாகப் பரிணாம முறை வளர்ந்து, மனிதப்பிறவி வரை வந்திருக்கிறது. மனிதப் படைப்பின் மூலம் ஒரு புது மதிப்பு ஏற்பட்டு, பரிணாமம் வேறு வழியில் முன்னேறினாலும் மனிதனுக்கும் அதற்கும் ஓர் ஒற்றுமை இருந்தே வருகிறது; இந்த ஒற்றுமையிலிருந்து பரிணாமவளர்ச்சியை நாம் உணரவேண்டும். தொடர்ந்து நிகழ்கிற இந்த வளர்ச்சியின் தத்துவம் மனிதப்படைப்பின் மூலம் புலப்படுகிறது. விஞ்ஞானத்தில் கூறும் பரிணாமமுறை மனிதப் பிரபஞ்சத்தைப் பற்றியது என்றுதான் நாம் கொள்ள வேண்டும். புத்தகத்தின்மேல், தோலால் அமைந்த அட்டையும் தலைப்புப் பக்கமுங்கூட அந்தப் புத்தகத்தின் பகுதிகளே. அதைப்போலவே நாம், புலன்களாலும் மனத்தாலும் வாழ்க்கை அநுபவத்தாலும் கண்டறியும் உலகமும் நம்மோடு இணைந்ததுதான்.

ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் அகத் தொடர்பு உண்டு என்பதே ஒற்றுமையின் அடிப்படையான தத்துவம்; இது தெய்விகமானது. இந்தப் பூமியில் பல உயிர்க்கூறுகள் கொண்ட பிறவிகள் தோன்றியபோது சில பரிணாம நிகழ்ச்சிகள் ஏற்பட்டன; அவற்றிலிருந்து இத்தகைய ஒரு தொடர்பு இருப்பது

புலப்படும். இன்று மனிதன் தன் உடலிலேயே மிகவும் சீரான ஓர் உள்ளுணர்வைப் பெற்றிருக்கிறான். ஆனால் அதையும்விட முக்கியமானது, 'அவன் தன்னுடைய பூத உடலுக்கு வெளியில் சூட்சும உடல் பெற்றிருக்கிறான். மனிதப்படைப்பின் தத்துவம் இப்படி நிறைவு பெற்றிருக்கிறது' என்ற விஷயந்தான். தனியாக இருக்கும் போது மனிதன் தன்னை இழந்துவிட்டதாக உணருகிறான். பல மனிதர்களோடு பழகுவதனால் தான் எங்கும் பரந்திருப்பதையும், தான் யார் என்ற உண்மையையும் உணருகிறான். பல உயிர்க்கூறுகள் கொண்ட அவனுடைய உடல் பிறந்து, மடிகிறது. ஆனால் பலரோடு பழகிய அவனுடைய மனிதப் பண்போ என்றும் நிலைத்திருக்கிறது. ஒற்றுமை என்ற லட்சியத்தின் மூலம், நிலைபெற்ற வாழ்வையும் அளவற்ற அன்பையும் அவன் உணருகிறான். இந்த ஒற்றுமை என்பது வெறும் கற்பனைக் கருத்து என்று கொள்வதற்கில்லை; இது வலிமை ஊட்டும் உண்மை உணர்வாகும். இதற்கு என்ன பெயர் இட்டாலும் சரி, இது என்ன உருவத்தை உணர்த்தினாலும் சரி, இப்படி ஓர் ஒற்றுமை இருப்பதை அறிந்துகொள்வதே ஆத்மிகமாகும்; இந்த லட்சியத்திலிருந்து பிறழாமல் இருப்பதே நம் தருமமாகும். மேலும் மேலும் திருந்திய முறையில், தெள்ளத் தெளிவாக இந்த ஆத்மிகம், மனித வரலாற்றில் வெளிப்படும் நிலையில் இருக்கிறது; இதை நாம் காணலாம்.

நம் கண்களால் பூதப் பிரபஞ்சக் காட்சியைப் பார்க்கிறோம். நமக்கே உரிய பிரக்ஞை (Consciousness) அல்லது உள்ளுணர்வு என்பதும் உண்டு. இதுவே பரமாத்மன் அல்லது பிரபஞ்சம் எங்கும் பரவி விளங்கும் (பரம)புருஷனுக்கும் நமக்கும் உள்ள உறவை நாம் உணர உதவுகிறது. சுடர்விடும் சிந்தனைசக்தியே இந்த உள்ளுணர்வு. உயர்ந்த நிலையை அடையும்போது இது மனிதனுக்கே சிறப்பாக உள்ள ஒரு பண்பாகிறது.

பிரபஞ்சம் முழுதும் ஒன்றே என்ற உண்மையறிவு தோன்றுவதற்கு இந்த உள்ளுணர்வே காரணம். ஜீவதத் துவம் என்ற உயிர் இயலின்படி, 'உடல் வாழ்வதே அவசியம்; இந்த உள்ளுணர்வெல்லாம் மிகை' என்றா லும், நாம் சீரான நிலையை அடைந்தோம் என்பதை உணர்த்துவது இந்த உள்ளுணர்வின் தொழிலாகும். 'நாம் அமரர்கள்; என்றும் வாழ்கிறோம்' என்ற உண்மை யுணர்வே பிரக்ஞை. இறவாத ஒருவனிடம் இந்நிறை யுணர்வு என்றும் நிலைத்துள்ளது. அந்த உணர்வே தனிப் பட்ட மனிதனையும் இந்த லட்சியத்தின்மேல் பற்றுக் கொள்ளும்படி செய்கிறது; உண்மையறிவு அல்லது மெய்ஞ்ஞானத்தை அவன் உணரும்படி தூண்டுகிறது.

மனித இனம், விலங்கு இனம் இரண்டுக்குமே அறிவு வளர்ச்சியும், உடல் வலிமையும் பெருகுவது அவசியந் தான். ஆனால், தான் என்ற உள்ளுணர்வு மனிதனிடம் வளர்ச்சி பெற்றிருப்பதுதான் அவனுக்கே உரிய சிறப்பான தன்மை. இதுவே, போகப் போக, 'நானே அந்த நிறைவெய்திய, நிலையான, அழிவில்லாத பரம் பொருள்' என்பதை அவன் ஆழ்ந்தும் பரந்தும் உணரச் செய்கிறது. மனிதனிடம் அமைந்துள்ள தெய்விகத் தன்மை - இதுவே உயர்வான மனிதப் பண்பாகும் - அவன் படைத்த பொருள்களின் மூலம் வெளியாவதற்கு, இந்த உள்ளுணர்வே காரணம். உண்மை (சத்தியம்), செம்மை (சிவம்), அழகு (சுந்தரம்) இப்படிப் பல விதமாகவும், சுதந்தரமாகவும் அவன் செயல் புரிவதில் இது வெளியாகிறது. இப்படிச் செயல் புரிவது அவனுடைய சொந்த நன்மைக்காக அன்று; 'தான்' இன்னான் என்பதை உணர்ந்து வெளியிடுவதற் காகத்தான். பரமபுருஷனை அறியத் தனிப்பட்ட மனிதன் இருந்துதான் ஆகவேண்டும்; பயன் கருதாத செயல் களிலும் விஞ்ஞான வேதாந்தங்களிலும், இலக்கியம், கலை இவைகளிலும், தொண்டு, வழிபாடு ஆகியவற்றிலும் தன்னைத் தான் உணர்ந்துகொண்டதை அவன் வெளியிட

வேண்டும்; இதுவே மனித தருமம் அல்லது சமயம். பல பெயரால், பல உருவங்களில் வழங்கும் அவனுடைய மதக் கொள்கைகளுக்கெல்லாம் மூலம், இந்தத் தருமந்தான். இதனுல் மனிதன், தான் எல்லேயற்று விளங்கும் ஒரு நிலையை அறிந்துகொள்கிருன்; அதன் வழியாக உயர்வை அடைகிருன்; அதே சமயத்தில் பூரணமான உண்மை உணர்வும் இன்னதென்பதைத் தெரிந்துகொள்கிருன்.

தெய்வத்தினிடம் உள்ள மனிதப்பண்பு அல்லது நித்தியபுருஷனுடைய தெய்விகப் பண்பே இந்நூலின் முக்கியப் பொருள். தத்துவ ஆராய்ச்சியினுல் இந்தத் தெய்வசிந்தனே என்னிடம் தோன்றி வளர்ந்துவிட வில்லே; அதற்கு மாருக, சிறு வயதிலிருந்தே இது என் இயல்போடு ஒட்டி வளர்ந்து வந்திருக்கிறது; பிறகு திடீ ரென்று உள்ளுணர்வு மூலம் இதை அறிந்துகொண் டேன். பின்வரும் அத்தியாயம் ஒன்றில் இந்த அநுபவத்தை விளக்கியிருக்கிறேன். மேல்வாரியாகப் பார்க்கும்போது, தனி ஆத்மாவைப் பொறுத்தவரையில் எப்போதும் மாறுதல் இருந்துவருவதாகத் தோன்ற லாம்; 'ஆனுல், நாம் நேரில் கண்டறிவதற்கு அப்பால், உள்ளத்தினுள்ளே, எல்லா உயிர்களும் இணேந்த அந்தப் பரம்பொருளே நிலவுகின்றது' என்பதைத் தெளிவாக அன்று உணர்ந்தேன். இதுவே நம் வாழ்வில் தினந் தோறும் நிகழ்கிற சிறுவினேகளே மறுத்தும், தனிப் பட்ட பழக்கங்கள் எளிய வழக்கங்கள் என்று நமக்கென அமைத்துக்கொண்ட ஏற்பாடுகளேயெல்லாம் குலேத்தும் வருகிறது. பிரபஞ்சம் எங்கும் பரவிய பரம் பொருளின் செயல்களேச் செய்ய இந்த உள்ளுணர்வே நம்மைத் தூண்டுகிறது. நாமே முக்கியம் என்று எண்ணிவரும் இந்த வாழ்விலே, எதிர்பாராதபடி நாம் பெருந் தியாகம் புரியத் தூண்டுவதும் இதுவே. லட்சியச் சிறப்புக்களின் உண்மை ஆக்கத்தை நாம் நம்ப மறுக்கலாம்; ஆனுலும் இந்த உள்ளுணர்வின் - அந்த ராத்மாவின் - குரல், நம் காதுகளில் விழுகிறபோது,

உண்மை, அழகு இவைகளுக்காகவும், பயனை விரும்பாத படி பிறருக்குத் தொண்டுபுரிவதற்கும் நம் வாழ்வையே அர்ப்பணம் செய்ய முன்வருகிறோம்.

என் தார்மிக அநுபவத்தைப்பற்றி ஆராயும்போது, நான் இயற்கையோடு நெருங்கிப் பழகியபோதுதான் முதல் முதலாக இந்த மகத்தான உண்மையை உணர்ந்த தாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இயற்கை என்றால், மனத்தில் பதியும்படி பல விவரங்களை நமக்கு உணர்த் தும் சாதாரண இயற்கையோ, உயிருடன் கூடிய இந்தப் பூத உடலோடு தொடர்புகொண்ட இயற்கையோ அன்று; பலவிதங்களில் அநுபவ மூலம் வெளியாகி, ஆத்மாவுக்குத் திருப்தி தரும் இயற்கையைத்தான் குறிப் பிடுகிறேன். இந்த அநுபவங்களே நம் வாழ்வு செழிக்கும்படி செய்கின்றன; பலவேறு உருவங்களிலும் நிறங்களிலும், ஒலிகளிலும், அசைவுகளிலும் ஒரு லயம் (Harmony) அல்லது இசைவு இருப்பதை உணர்த்தி, நம் சிந்தனையைத் தூண்டுகின்றன.

விஞ்ஞான உண்மைக்குச் சான்றாக அமைந்து வெறும் சின்னமாக (Symbol) இருந்து மறையும் உலகம் இல்லை இது; ஆத்ம அநுபவமாகப் பல உண்மைகளை வாரி வழங்கி, நம் மனிதப்பண்போடு தொடர்பு கொண்டு அதில் மாறுதல் ஏற்படும்படி செய்யும் உலகம் இது.

என் சொந்த அநுபவங்களை வெளியிடும்போது சில பாடல்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். வங்காளத்தில் ஊர் ஊராகச் சுற்றும் பாவுல்கள் என்ற பிரபலமான ஒரு சமூகத்தினர் இந்தப் பாடல்களைப் பாட, அடிக்கடி நான் கேட்டிருக்கிறேன். இவர்களுக்கு எந்த விதமான உருவ வழிபாடோ கோயில்களோ வேதங்களோ சடங்கு களோ இல்லை. மனிதனிடம் அமைந்திருக்கும் தெய் வத் தன்மையைப்பற்றி இவர்கள் பாடியிருக்கிறார்கள். நித்திய புருஷனிடம் தங்களுக்குள்ள பேரன்பை அந்தப் பாடல்களின் மூலம் வெளியிட்டிருக்கிறார்கள். பாமர வகுப்பினரிடையே தோன்றி, யாரும் அறியாத எளிய

வாழ்வு வாழ்ந்துவரும் மக்கள் இவர்கள். எல்லா மதங்களுக்கும் உட்பொருள் யாது என்பதை உணர்வதற்கு அறிகுறியாக விளங்குகிறது இவர்கள் வாழ்வு. 'பிரபஞ்ச சக்தியாக விளங்கும் ஒரு தெய்வத்தை உணர்த்த வந்தவை அல்ல இந்த மதங்கள்; மனித இயல்பிலே அமைந்த தெய்வத்தை - தெய்விகப் பண்பை - விளக்கவே தோன்றியவை' என்னும் உண்மையையே இவர்கள் வாழ்வு புலப்படுத்துகிறது.

விஞ்ஞானிகள் குறிப்பிடும் 'பற்றற்ற உண்மை' என்பதும் மானிடப் பிரபஞ்சத்தோடு தொடர்பு உள்ளது தான். இதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். ஆனல் விஞ்ஞானிகள், 'அழகு, செம்மை இவற்றைப் போல் உண்மை நம் சித்தத்துக்குக் கட்டுப்பட்டதன்று' என்கிறுர்கள்; 'உண்மை என்பது மனிதனுடைய சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஒரு நம்பிக்கை; மனிதனுக்கு இயல்பாகவே அமைந்தது. அது ஆராய்ந்து அறிந்து விளக்க முடியாதது' என்று சொல்லுகிறுர்கள். ஆனுலும், 'லட்சியமாக அமைந்த சத்தியம் என்பது, தனி மனிதனுடைய சிந்தனைக்குக் கட்டப்பட்டதன்று. எங்கும் பரவிய (பரம்)பொருளின் சித்தத்தைப் பொறுத்தது அது' என்று ஏன் கொள்ளக்கூடாது? சத்தியம் என்பது மனிதர்களோடு தொடர்பு கொள்ளாமல் தனித்து நிற்கிறது என்ருல், அது விஞ்ஞானத்தையே மறுத்ததாக முடியும். ஏனென்ருல், மனிதன் அறிந்து உணர்ந்த உண்மைகளைப் பகுத்தறிவோடு பொருத்திக் காட்டுவதே விஞ்ஞானம் செய்யக்கூடியது; சிந்தனை நீடிப்பதற்காக மனிதனே படைத்துக்கொண்ட ஒன்று தான் தர்க்க முறை.

நான் உபயோகிக்கும் மேஜை என்ற வஸ்து பல வேறு பொருள்களைக் குறிப்பிடலாம். மனிதன் தன்னிடம் அமைந்திருக்கும் விசேஷப் புலன் உணர்வாலும் அநுபவ அறிவாலும் மேஜை என்ற இந்த வஸ்துவை அறிந்துகொள்கிருன். விஞ்ஞான ரீதியில்

இதை ஆராயும்போது, தன் புலனுணர்வால் தெரிந்து கொண்டதற்கு மாமுன விதத்தில் இது அவனுக்குக் காட்சி அளிக்கிறது. புலன்களால் கண்டறிந்ததோடு, தானே ஆராய்ந்து அறிந்தது, விஞ்ஞானக் கருவிகளால் தெரிந்துகொண்டது இந்த இரண்டும் அவனுடைய உணரும் சக்தியோடு தொடர்புள்ளவைகளே. இரண்டும் உண்மை - மனிதனைப் பொறுத்தவரைக்கும் உண்மையாகவே படுகின்றன. மேஜை என்ற பொருளை முழு நம்பிக்கையோடு தன் உடலைப் பொறுத்த (எழுதுவது, படிப்பது முதலிய) செயல்களுக்கும், விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்கும் அவன் பயன்படுத்திக்கொள்கிமுன். ஆனுலும் இந்த அறிவுமட்டும் அவனுடையதே; மனிதனுக்கே சொந்தமானது. ஓர் இடத்தில், குறிப்பிட்ட ஒரு மனிதன் இல்லாமற் போனுலும் அவன் பயன்படுத்துகிற மேஜை என்ற வஸ்து அப்படியே இருக்கிறது. அப்போதும் அது மனித சிந்தனையோடு தொடர்புடையதாகவே விளங்குகிறது. நம் புலன்களால் கண்டறியும் மேஜை என்ற வஸ்துவும், விஞ்ஞான அறிவால் உணரும் மேஜை என்ற வஸ்துவும் ஒன்றுக்கு ஒன்று மாறுனவை; அப்படி இருந்தும், மனித இயல்பு இந்த இரண்டையும் இணைத்தே நோக்குகிறது. இவை இரண்டும் ஒன்றுசேரும் மையமாக அது விளங்குகிறது.

கருத்துக்களைப் பொறுத்தமட்டிலுங்கூட இந்த உண்மை பொருந்தும். 'எங்கும் பொதுவாக அமைந்த காரண காரிய விதிப்படி எந்தப் பொருளுக்கும் ஒன்றோடு ஒன்று இடைவிடாத தொடர்பு உண்டு' என்பது விஞ்ஞானிகளின் கருத்து. எது நேரினும், 'இப்படித்தான் நேர்ந்திருக்கவேண்டும்; வேறு விதமாக நேர்ந்திருக்க முடியாது' என்பது மனித சிந்தனையிலிருந்து உருவான நியாயம் அல்லது தர்க்க முறைப்படி அமைந்த ஒரு பொது விதி. ஆனுல் இதே மனித சிந்தனைக்கும், அவனிடம் இருக்கும் பிரக்ஞை என்ற உறுதியான உள்ளுணர்வுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. இந்த

உள்ளுணர்வு, தான் எந்தக் கட்டுக்கும் அடங்கியதன்று என்பதை உணர்ந்து, சுதந்தரமாக இயங்கப் பாடுபடுகிறது. தினமும் நம் ஒழுக்க முறையில் இதைத் தெளிவாக உணருகிறோம். நம் நடத்தை சீராக அமைந்து விளங்குவது இதைப் பொறுத்ததே. தினந்தோறும் மேஜை என்ற ஒரு வஸ்துவோடு நாம் பழகுவதை இதோடு ஒப்பிடலாம். மேஜை என்ற வஸ்துவைப் பற்றி நாம் விஞ்ஞான ரீதியில் பகுத்து, ஆராய்ந்து, அது என்ன என்ற முடிவுக்கு வந்திருந்தாலும், மேஜை என்பதை ஒரு மொத்த வஸ்துவாகக் கொள்ளும்போதே நமக்கு அதனால் சிறந்த பயன் உண்டு. மூலப்பொருள்கள் (Elements), நீரோடு நீர் கலக்கும் முறையில் ஒருவிதச் சக்தியை வளர்ப்பதுபோல் இதைக் கொள்வதற்கில்லை.

பிரத்தியட்சப் பிரமாணமாக - நேரில் காணும் உண்மையாக - இதோ அளவைக் குறிப்பிடும் இந்த உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம்; ஓர் ஊசியை உருப்பெருக்கியின் மூலம் பார்க்கும்போது, அதன் நுனியில் எத்தனை தேவகணங்கள் வீற்றிருக்கும், எத்தனை ஒட்டகங்கள் அதன் காது வழியாகச் செல்லலாம் என்பதைப்பற்றி நாம் கவலைப் படமாட்டோம். சினிமாக் காட்சியில் காலம், பரப்பு இவைகளைக் கருவியின் பல வகை நுட்பத்தினால் பெரிதாக்கியோ சுருக்கியோ காணலாம். ஒரு விதையை எடுத்துக்கொள்வோம்: இப்படிக் காலம், பரப்பு இவைகளின் எல்லையை அந்த விதை தனக்குள்ளே நுட்பமாக அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறது. காலத்தின் குறிப்பிட்ட ஒரு நிலையில், வெறும் சூனியத்திலிருந்து மனிதன் என்ற உண்மைப் பொருள் தோன்றிவிடவில்லை. மேல்வாரியாகப் பார்க்கும்போது அப்படி எப்போதோ ஒரு சமயம் அவன் தோன்றியிருப்பதாக நமக்குப் படலாம். ஆனால் மனிதனுடைய தோற்றத்துக்கு முடிவு என்பதே இல்லை; இப்போதும் முழு மனிதன் உருவாகிவிடவில்லை. நாம் எண்ணுவதுபோல்

இன்ன சந்தர்ப்பத்தில்தான் மனிதன் தோன்றினன் என்று சொல்வதற்கும் இல்லை. (முடிவற்றதாகிய) அனந்தம் என்பதில் மனிதனுடைய தோற்றம் அடங்கியிருக்கிறது. இந்த உண்மை உருவாவதற்கு, முடிவு காண இயலாத எத்தனையோ யுகங்கள் ஆகியிருக்கின்றன! இத்தனை கோடிக்கணக்கான ஒளி வருஷங்களுக்கு முன்னல் அவன் தோன்றினன் என்று கொண்டாலும், அதுவும் அவன் தோற்றத்துக்குச் சூழ்நிலை என்றே கொள்ளவேண்டும். நெடுங்காலமாகத் தான் உண்டாவதற்காகத் தொழிற் பட்ட பலவகை முயற்சிகள் மனிதனிடம் அடங்கியிருக் கின்றன. அவன் வாழ்வதற்கே, அவனைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களோடும் அவன் தொடர்பு கொண் டிருக்கிருன்.

எல்லாப் பொருள்களுக்கும் ஒன்ருேடு ஒன்று தொடர்பு உண்டு என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது நாம் காணும் இந்த உலகம். நிலக்கரித் துண்டு ஒன்றை எடுத்துக்கொள்ளலாம். அது எப்படி உருவாயிற்று என்று அதன் அடிப்படையை ஆராய்ந் தால், அதில் மிகவும் நிலையுள்ளதாக நமக்குத் தோன்றும் வஸ்து மறைந்து, ‘பல சக்திகள் சுழல்வதால் உண்டானது அது’ என்பது தெரியும். இந்தத் தனிப் பகுதிகள் (Units) அல்லது சக்திகளைக் (Forces) கரி(Carbon) யின் மூலப்பொருள் என்பார்கள். இவைகளையும் ஆராய்ந் தால், (ஜலஜ வாயுவில் நேர் மின்சக்தி அடங்கிய அணுக் களான) புரோட்டான், (எதிர்மின்சக்தி பெற்ற அணுக் களான) எலெக்ட்ரான் என்ற சில மின்சக்திகளாக இவைகளைப் பகுக்கலாம். இந்த மின்சக்திகள் தனித்து இவ்விதம் நின்றுவிடவில்லை. ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டுதான் இருக்கின்றன. என்றேனும் ஒரு நாள் இவற்றை மேன்மேலும் ஆராய்ந்தறிய முடியும். அப்போதும் பொருள்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உள்ளவை என்னும் பரந்த உண்மை மாருமல் நிலையாக இருந்தே தீரும்.

கரி (Carbon) என்ற மூலப்பொருளாக இருக்கும் இவை எப்படி ஒரு துண்டு நிலக்கரி ஆகின்றன என்பது நமக்குத் தெரியாது. ஒன்றுமட்டும் நாம் சொல்ல முடியும்: இவை இப்படித் தோற்றமளிப்பதற்கு, இவற்றிடையே விளங்கும் தொடர்பு என்ற ஓர் இணையும் தன்மையே காரணம். தனிப்பட்ட நிலக்கரித் துண்டு ஒன்றில்மட்டும் இந்தத் தன்மை அமைந்திருப்பதாகக் கொள்வதற்கில்லை; இந்தப் பூதப்பிரபஞ்சம் முழுவதும் உள்ள படைப்பின் ஒழுங்கு முறையிலேயே இந்தமாதிரி ஒரு நட்புறவு அமைந்திருக்கிறது.

தனிப்பட்ட பகுதி (Unit) பிரபஞ்ச அமைப்புக்கு அடங்கிப் போனதாலேயே படைப்பு என்பது சாத்தியமாயிற்று. அதுபோன்ற ஒரு நிலைதான் பாரமார்த்திகம் அல்லது ஆத்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட மானிடப் பிரபஞ்சத்திலும் இருந்துவருகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனும் என்றென்றும் தன்னை ஆத்மிகத்துக்காக அர்ப்பணம் செய்யவேண்டும் என்பதே அது. இந்தப் பௌதிக உலகத்தில் காண்பதுபோல் ஆத்மிகத் துறையில் முன்னேறிவிடுவது அவ்வளவு எளிதன்று. எங்கும் நிறைந்த பரம்பொருளோடு தனித்தனி மனிதப் பிறவி என்ற பகுதிகள் இணைவதற்குரிய அறிவும் மனவுறுதியும் ஏற்பட்டாகவேண்டும்; அப்போதுதான் ஆத்மிக முன்னேற்றம் கைகூடும்.

உபநிடதச் செய்யுள் ஒன்றில், 'எப்போதும் இயங்கிக்கொண் டிருக்கும் இந்த உலகத்தில் தனிப் பெரும் ஒற்றுமை எங்கும் பரவியிருக்கிறது. ஆகவே, நம் பேராசையைத் தணித்துக்கொள்வதால் உண்மையான இன்பம் ஏற்படாது. தனிப்பட்ட ஒவ்வொருவனும் பரம்பொருளுக்கு, பரமாத்மனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்துகொள்வதன் மூலமே அந்தப் பேரின்பம் கிட்டும்' என்று வருகிறது.

பல்வேறு உலகங்கள் இருக்கின்றன என்கிறார்கள், சில சிந்தனையாளர்கள். அதாவது, ஒன்றுக்கு ஒன்று

தொடர்பே இல்லாத தனிப்பட்ட உலகங்கள் இருக்கின்றன என்றுதான் இதற்குப் பொருள். இது அப்படி உண்மையாகவே இருந்தாலும், இதை நிரூபித்துக் காட்ட முடியாது. ஏனென்றால், நம் பிரபஞ்சமே மனிதன் உணர்ந்தும் அறிந்தும் கற்பனை செய்தும் ஆராய்ந்தும், இன்றும் பின்னாலும் அறியக்கூடியது இன்னதென்று அவன் கொள்வதும் ஆக இப்படி எல்லாக் கருத்துக்களும் மொத்தமாக இணைந்ததுதான். இதன் ஒவ்வொரு பகுதியும் அவனுக்கு விதம் விதமாகப் புலப்படுகிறது. இதன் அழகு, இதில் நிகழும் நிகழ்ச்சிகள், இதன் சக்தி என்று இம்மாதிரி பலவிதத்திலும் இந்த உலகம் வெவ்வேறாக அவனுடைய புலன்கள், கற்பனை, ஆராயும் மனநிலை இவைகளுக்கு ஏற்றபடி காட்சியளிக்கிறது.

'உலகத்தின் இறுதித் தன்மையைத் தனி மனிதன் தன் அறிவினால் அறிந்துகொள்ள இயலும்' என்று நான் குறிப்பிடவில்லை. பிரபஞ்சமெங்கும் பரவிய மனித மனத்தாலேயே காலம், பலவகை ஆத்ம அனுபவங்கள் இவைகளை உணர்ந்தறிய முடியும். இதனால்தான் பொருள்களைப்பற்றிப் பூரணமாக அறிய விஞ்ஞானத்தை ஆதாரமாகக் கொள்ளுகிறோம். விஞ்ஞானம் என்பது பகுத்தறிவுடன் நோக்கும் விசுவ புருஷ(Universal man)னது சித்தத்தைக் குறிக்கும். ஓர் அளவுக்கு உட்பட்ட காலம், பரப்பு இவைகளையும் வாழ்க்கையின் அப்போதைய தேவைகளையும் நம்பி வாழும் தனி மனிதனுடைய சித்தத்தை அது குறிக்காது. இத்தகைய பரந்த சிந்தனையினால்தான் மனித நாகரிகத்தில் முன்னேற்றம் இருந்து வருகிறது. முன்னேற்றம் என்றால் தனிப்பட்ட மனிதன் தன் அறிவையும் சக்தியையும் அன்பையும் இன்பத்தையும் அளவுக்கு மீறிப் பயன்படுத்தி லட்சிய நிறைவு பெறுவது தான். மிகவும் தொலைவிலுள்ள நட்சத்திரம் ஒன்று, தூரதிருஷ்டிக் கருவி (Telescope) மூலம் மங்கலாகவேனும் தான் இருப்பதை உணர்த்துகிறதே; இதை மனித சித்தத்திடம் அது காட்டும் பரிவு என்றே கொள்ளவேண்டும்.

ஆகவே, 'இயற்கையின் ரகசியங்களை மேலும் மேலும் கண்டறிய முயற்சி செய்யமாட்டோம்' என்று எப்படிச் சொல்லிவிட முடியும்? இன்னும் எவ்வளவோ அறியலாம் என்ற நம்பிக்கை என்றும் இருந்தே தீரும். நட்சத்திரங் களைப்பற்றிய உண்மை விவரங்களை அறிய அறிய மனித சிந்தனை எவ்வளவு விசாலமானது என்பதை உணரலாம்.

பகுத்தறிவால் ஆராய்ந்து அறிவதோடு பரம புருஷ (Supreme Person) னுக்குரிய ஆற்றல் மிகுந்த கற்பனையை யும் பேரன்பையும் மெய்ஞ்ஞானத்தையும் நாம் உணர்ந் தாகவேண்டும். அந்தப் பரமாத்மன் நம் எல்லாரிடத்தி லும் பரவியிருக்கிறான். அவனிடம் அன்பு செலுத்துவ தென்பது, எல்லா ஜீவராசிகளிடமும் அன்பு காட்டுவதே ஆகும். இந்த அன்பே ஏனைய அன்பு அனைத்தையும் விட ஆழ்ந்தது; வலிமை பொருந்தியது. இதுவே செய் வதற்கு அரிய செயல்களையும் அருந் தியாகத்தையும் மனிதன் ஏற்கும்படி செய்து, தான் முன் நின்று அவ னைப் பெருநெறியில் செலுத்துகிறது. எங்கும் பரந்த பேரன்பு சித்தியாவதுதான் இதன் நோக்கமே தவிர, இது எந்தப் பயனையும் எதிர்பார்ப்பதில்லை.

நம் உபநிடதத்தில் வரும் 'ஈச' என்ற பரமாத்மன் அசையும் பொருளில் எல்லாம் பரவி விளங்குகிறான். இந்த மனிதப்பிரபஞ்சத்தின் தெய்வமும் இவனே. மெய்ஞ்ஞானம், அன்பு, தொண்டு எல்லாவற்றிலும் இந்த இறைவனது சித்தமே பரவிக் கிடக்கிறது. இந்தச் சித்தத்தையே நாம் எல்லாரும் பகிர்ந்துகொண் டிருக்கி றோம். ஆத்ம சமர்ப்பணத்தின்மூலம் அனைத்தையும் துறந்து இவன் நமக்குள் அமர்ந்திருப்பதை அறிவதே வாழ்வின் உன்னதமான, இறுதியான லட்சியம்.

# 2. படைப்புத் தெய்வம்

ஒரு சமயம் ஒரு சிறு குழந்தை, தான் கட்டிய ஒரு கதையில் என்னைக் கதாநாயகனுக இருக்கும்படி கெஞ்சிக் கொஞ்சிக் கேட்டாள். என்னை ஏதோ இருட் டறையில் அடைத்து வைத்திருப்பதாகவும், வெளிப் பக்கம் தாழிடப்பட் டிருப்பதாகவும் அவள் கற்பனை செய்துகொண்டாள். ''இப்போது நீங்கள் எப்படித் தப்பு வீர்கள்?'' என்று என்னைக் கேட்டாள். நான் அதற்கு, ''கூவி உதவிக்கு யாரையாவது அழைப்பேன்'' என்று பதில் அளித்தேன். அப்படித்தான் எந்த விதமோ தப்பி யிருக்க வேண்டும்; அது சாத்தியம் ஆகியிருந்தால் கதை அதோடு முடிந்து சுவாரசியம் கெட்டுவிடாதா? ஆகவே, உதவிக்காக நான் என்ன கூவி அழைத்தாலும் அக்கம் பக்கம் யாருக்கும் அது எட்டாதபடி - எந்த உதவியும் எனக்குக் கிட்டாதபடி - கதையை அவள் அமைக்க வேண்டியதாயிற்று; இந்த விதமான மௌனத் தடங் கலை மீற, நான் கதவை உதைத்துப் பிளந்தோ வேறு விதமாக என் பலத்தைச் செலுத்தியோ வெளிவர வழி உண்டா என்று யோசிக்கவேண்டிய தாயிற்று. ஆனுல் கதையோட்டத்துக்காக வேண்டி அந்த அறையின் கதவு எஃகினுல் அமைந்துவிட்டது! நான் எப்படியோ ஒரு சாவியைக் கண்டுபிடித்து விட்டேன்; ஆனுல் அது சாவித்துவாரத்தில் பொருந்தவில்லை. இப்படித் தடைகளை மீறிக்கொண்டு கதை வளர வளர அந்தக் குழந்தைக்கு ஒரே மகிழ்ச்சி!

உயிர் தோன்றி வளர்ந்த கதை - அதிலும் முக் கியமாக, (அஞ்ஞானம் என்னும்) இருட்டறை திறந்து கொண்டது - அந்தக் குழந்தை புனைந்த கற்பனையில் நடப்பதைப் போலத்தான் இருக்கிறது. பல தடைகள்

ஏற்பட்டன. இவைகளைச் சமாளித்து முடிவு காணும் ஒவ்வொரு தரமும் கதையின் ஓட்டத்துக்காகப் புதிய விஷயங்களைக் கற்பனை செய்தாக வேண்டி யிருந்தது. கதையிலே முழுக்க முழுக்கத் திருப்தியாக எல்லா அம்சமும் முடிந்துவிட்டால் படைப்புத் தெய்வமான அந்தப் பெரிய குழந்தைக்கு வேறு வேலை இராதே; அந்தத் தெய்வக் குழந்தை அப்புறம் (கட்டில் திரையை மூடிவிட்டுத்) தூங்க வேண்டியதுதானே!

ஆகவே, அவள் முதல் முதலாகச் சாமானிய உயிர்க் கூறு ஒன்றை, வலிமை மிகுந்து பரந்து கிடக்கும் ஜடப் பொருளுக்கு எதிராக விட்டுப் பார்த்தாள். அந்த உயிர்க்கூறு ஜடப்பொருளை வென்றது. இந்த வெற்றியின் ரகசியம் இன்னும் தெரிந்தபாடில்லை. அதோடு படைப்புத் தெய்வம் நிற்கவில்லை. இன்னும் பல கஷ்டங்களையும் தானாகவே வலிய ஏற்றுக்கொண்டது; படைப்புக் கலை நுட்பத்தில் ஒரு புதிய அம்சத்தைக் கைக்கொண்டது. தர்க்க வாதங்களும் கண்டறிய முடியாமல் திகைக்கும் புது அம்சம் அது.

பொருள்கள் தாமாகவே ஒன்றோடு ஒன்று பொருந்தி இணைவதுதான் அது. படைப்புத் தெய்வம் உயிர்க்கூறுகளின் பகுதிகளைத் தமக்குள் ஒத்து நடக்கும்படி தனித்தனி இனமாய்ப் பாகுபடுத்தியது; பெரும் பகுதி ஆக்கி அதைப் பின்னும் விரிவுபடுத்தியது. பொருள்களைக் கூட்டிச் சேர்ப்பதால் மட்டும் இத்தகைய ஒரு படைப்பு ஏற்பட்டு விடவில்லை. இந்தப் பாகுபாட்டிலே ஒவ்வோர் இனத்துக்கும் அதன் செயலுக்குத் தகுந்தபடி சாதிப் பிரிவினை இருந்தது. ஆனாலும், இவைகளுக்குள்ளே நெருங்கிய உறவு இருந்தது. படைப்புத் தெய்வம் பின்னும் ஏராளமான உயிர்க்கூறுகளை வரவழைத்தது; அவைகளுக்கு ஒரு வகை வகுப்புணர்ச்சியை உண்டுபண்ணியது. தனக்குப் பாதகமாக ஏதாவது ஏற்படும்போல் இருந்தால் அந்த நேரத்தில் தன்னால் ஆனமட்டும் வலிவுடன் எதிர்த்துப் போராடியது இந்த உணர்ச்சி.

இப்படி உண்டானதுதான் மரம். அதன் அழகிலும், வலிமையிலும் பொறுமையிலும் ஓர் உள்ளிசையும் உள் அசைவும் இருக்கின்றன. மறு பிறவி என்னும் சின்னஞ் சிறு வாயில் வழியாக, அது வாழ்க்கைப் பயணத்தில் ஈடு பட்டது. யாரும் அறியாத ஒரு லட்சியத்தை நோக்கிச் சென்றது. இந்த நிலையிலும் ஒரு லயமும் அசைவும் அதனிடம் இருந்தன. சிருஷ்டி முயற்சியில் இப்படி மரமாக முடிந்த படைப்பு வியத்தற்குரிய சாதனைதான். ஆனாலும் படைப்புத் தெய்வம் இதோடு ஓய்ந்துவிட வில்லை. அறிவு என்னும் ஜன்னல் திறக்கத் திறக்க, படைப் புத் தெய்வம் பழக்கமான வழியை விட்டுத் தன் தொழி லில் புதிய அம்சம் ஒன்றைக் கைக்கொண்டது. உயிர்க் கூறு தானாகவே நகரும் சக்தி பெற்றதுதான் அது. இப்படி வாழ்வில் சமாளித்து நிற்கக்கூடிய அருஞ்செயலுக்கு மதிப்பு ஏற ஏற, வாழ்வுத் தெய்வம் துணிச் சலாகச் சில காரியங்களில் ஈடுபட்டது; ஏற்ற வாய்ப்பும் அதற்குக் கிட்டியது. வாழ்வு என்னும் மறு கரையிலிருந்து வந்த புதிய வஸ்து எதற்கும் கண்டிப் பாகத் தடை விதிப்பதுபோல், பிரம்மாண்டமான ஜடப் பொருள் இடைஞ்சலாக நின்றது. இந்த ஜடப் பொருளோடு போரிடுவதென்றால், வாழ்வுத் தெய்வத் துக்குக் கொண்டாட்டந்தான்போல் இருக்கிறது.

ஆகவே, (பஞ்சபூதங்களில் ஒன்றான) நீரின் செறி வுக்கு ஏற்ப, மீனுக்குச் சில அமைப்புக்கள் ஏற்பட்டன. காற்று இலேசாக இருந்தாலும், ஒரு பொருள் பறப்ப தற்குத் தடையாகவும் இருந்தது. ஆனால் இந்த அறை கூவலை ஏற்பதுபோல், பறவை இனத்துக்கு அற்புதமான ஒரு ஜோடி இறக்கை முளைத்தது. இவை காற்றின் நுட்பமான விதிகளையெல்லாம் சமாளித்து நின்றன. நிலையான மண்தரையைவிடக் காற்றே துணை என்று கண்டுகொண்டன பறவைகள். ஆர்க்டிக் பனி, பிராணி கள் தன்னை அண்டாதபடி, விறைக்கும் குளிரைத் தடையாக நிறுத்தியது. வெப்பம் மிகுந்த பாலைவனப்

பிரதேசம் கொதித்துப் பெருமூச்சு விட்டு, படைப்புத் தெய்வத்தின் குழந்தைகளையெல்லாம், 'கிட்ட நெருங்காதீர்கள்'' என்பதுபோல் தடை செய்தது. ஆனாலும், இந்தத் தடையுத்தரவுகளையும் மீறி, இவைகளின் எல்லைக்குள் சென்றால் சாவு கிட்டும் என்று தெரிந்தும் அப்படிக் கடந்து சென்று, வெற்றி கண்டன அந்தக் குழந்தைகள்.

இந்த வெற்றியை வாழ்வு என்னும் ஒரு பேரரசின் முன்னேற்றம் என்றே கூறலாம். புதிய புதிய சாதனங்களைக் கண்டுபிடித்து, அவைகளின் துணையால் இயற்கை விதிகளுக்கு ஈடுகொடுத்து அந்தக் குழந்தைகள் வாழ்வில் வெற்றிக்குமேல் வெற்றி காண முடிந்தது. உயிர் வாழ்வதில் இப்படி முன்னேற முயற்சிகள் நடந்து வரும்போது பிராணிகளுக்குள்ளே கடுமையான போட்டியும் இருந்தது. பொருள்தான் முக்கியமென்று கருதும் இந்த உலகில், பொருளின் அளவுக்குத்தான் அதிக மதிப்பு. ஓரளவுக்குத்தான் இங்கே பொருள்வளம் சாத்தியம்; இந்த நிலையில் எவருக்கு ஆயுதபலத்தைப் பிரயோகம் செய்வதில் திறமை மிகுதியோ அவருக்கே வெற்றி கிட்டும். ஆகவே, ஓர் இனம் முன்னேறி வெற்றி காணும் போது மற்றோர் இனம் பெரும்பாலும் தோல்வியே அடைய நேரும்.

வாழ்க்கையில், இப்படிப் பல பிராணிகளுக்குள்ளே போட்டி மூண்டது. கடைசியில் அதிகச் சதையும் பருமனும் உள்ள பிராணிகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின; பெரிய அளவுக்குத் தசை அமைப்பும் எலும்புகளும் கவசம்போல் ஓடு பொருந்திய கனமான தோலும், பிரம்மாண்டமான வாலும் கொண்ட ஜந்துக்கள் தலையெடுத்தன. இந்தமாதிரி ஒழுங்கில்லாத பருமன், படைப்புத் தெய்வத்துக்கு அப்போது இயல்பானது என்றே பட்டிருக்கவேண்டும். அளவையே பெரிதாக மதித்து வந்த அந்த உலகத்தில், 'மிகுதியாகப் பருத்திருப்பதே வெற்றிக்கு அறிகுறி' என்று தோன்றுவது நியாயந்தானே? ஆனால் (கவசம்போல்) ஓடு பொருந்திய

தோலைக்கொண்டு தம்மைக் காத்துக்கொள்ளவும் தாக்கவும் முனைந்த ஆடம்பரப் பிராணிகளுக்கு முடிவில் தோல்விதான் கிட்டியது. இதோ ஒவ்வொரு நாளும் பாலைவனத்து மணல்வெளிகளையும் புராதனமான இடங்களையும் தோண்டி எடுக்கும்போது அந்தத் தோல்வியின் விவரங்களையே - பிரம்மாண்டமான அந்தப் பிராணிகளின் எலும்புத் துண்டுகளையே - பார்க்கிறோம். உயிர் வாழ ஒரு காலத்தில் நடந்த பெரும் போராட்டத்தில், இடம் தெரியாமல் மறைந்து போய் இந்தப் பிராணிகள் தோல்வி அடைந்ததைத்தான், இந்த எலும்புத்துண்டுகள் நமக்குக் காட்டுகின்றன. இந்தப் பிராணிகள் அவ்வளவு பருமனாகவும் கனமாகவும் இருந்ததற்கு முக்கியமான காரணம், இவைகளின் எலும்பும் தோலும் ஓடும் பற்களும் நகங்களும் உயிரற்ற ஜடப் பொருளாக அமைந்திருந்ததே. சுதந்தரமாக இயங்கி வளர்ச்சிபெற்றுத் தன் உறுதியான இயல்பை வெளிப்படுத்தி வாழ்ந்திருக்க வேண்டிய பிராணியை, இந்தப் பாரம் முழுவதும் சேர்ந்து அழுத்திவிட்டது. பூமிதேவி, தன் குழந்தைகள் உயிர் வாழ்வதற்காக அளித்த பொருள் வளத்தை இந்த வகைப் பிராணிகள் - தாமே வலிமையானவை என்று மதம் பிடித்துத் திரிந்த இந்தப் பிரம்மாண்டமான ஜந்துக்கள் - கண்டபடியெல்லாம் பாழாக்கின.

உண்மையில் இவை முன்னேறாதபடி தடுத்து வந்தது இவைகளின் உடல் அமைப்பே. இந்த வீண் சுமையை, உயிரற்ற ஜடமாகிய எலும்பு, தோல் முதலியவைகளைக் காக்கவேண்டிப் பெரும்பசி கொண்டு அளவில்லாமல் இவை தின்று வந்தன. இப்படி இருந்து வந்த பிராணிகள் இன்று அழிந்து ஒழிந்துவிட்டன. இவைகளில் காண்டாமிருகம், நீர்யானை போன்ற சில பிராணிகளே மிஞ்சியிருக்கின்றன. இவைகளுக்கும் இந்த உலகத்தில் ஏதோ சிறிது அளவு இடமே இருக்கிறது; அதுவும் இவைகளின் மகத்தான வலிமைக்கும் உடற்

பருமனுக்கும் ஏற்றதாக இல்லை. பொருத்தம் இல்லாமல் இவை இப்படி ஆடம்பர வாழ்வு வாழ்வதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. இவைகளும் இவைகளுக்கு முன் வாழ்ந்த பெரிய பிராணிகளும் உயிர் வாழ்வது என்ற பரிசோதனையில் நேர்ந்த பெருந்தோல்விகள் என்றுதான் கொள்ள வேண்டும். அப்பால், என்றோ ஒரு நாள் இப்படிக் கவசம் ஏதும் இல்லாமல் பிராணிகள் அமையவேண்டும் என்று படைப்புத் தெய்வம், புதுமுறையில் பரிசோதனை நடத்தத் தொடங்கியது. அப்போது தான் உலகம் என்ற அரங்கில் சின்னஞ்சிறு பிராணியான மனிதன் தோன்றினான்; தன்னோடு கூடவே, ஆழங் காண முடியாத பலவகை ஆசைகளையும் எண்ணங்களையும் கொண்டுவந்தான்.

காலம், பரப்பு இவற்றுக்கு அப்பாற்பட்ட ஏதோ உண்மைப் பொருள் இருப்பதை உணர்த்தும் அளவுக்கு, உலகத்திலே பரிணும முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது. உயிர் தான் தோன்றியதும், தன்னோடு புதிய பொருள் எதையும் கொண்டுவரவில்லை. கல்லும், கனிப்பொருள்களும் எந்தப் பூதங்களினால் ஆகியிருக்கின்றனவோ அவைகளாலேயே உயிரும் ஏற்பட்டது. ஆனால் ஒன்று: அளந்தோ ஆராய்ந்தோ சொல்ல முடியாத ஒரு மதிப்பு இந்தப் பொருள்களிடம் அமைந்திருப்பதை அது விளக்கிக் காட்டியது. மனம், தான் என்ற உள்ளுணர்வு இவைகளை எடுத்துக்கொண்டாலும் இந்த உண்மை பொருந்தும். மனமும் உணர்வும் ஒரு பெரிய கருத்தைப் புலப்படுத்துகின்றன; தன்னைத் தானே விளக்க வந்த ஓர் உண்மை என்றும் இதைச் சொல்லலாம். மனிதனிடம் இந்த உண்மை வெளியாவதையும், பின்னும் தெளிவாக அதை விளக்கப் பெருமுயற்சி நடப்பதையும் நாம் காணலாம். மனித முயற்சி ஒரு வரம்புக்குள்ளேதான் நிற்கும் என்ற தடையை மீறி நித்திய ஜீவன், தன்னை அறிந்து வருவதை மனித வரலாற்றிலே காணலாம்.

உயிர்களின் பரிணும வளர்ச்சியைக் கவனித்தால், அதில் உடல் அமைப்பைப் பொறுத்தவரையில் மனிதப் படைப்புத்தான் இறுதியானது என்று தோன்றுகிறது. இதைத் தவிர நம் உடலில் புதிதாக ஏதாவது ஒன்றைச் சேர்க்கவோ ஏற்கனவே அமைந்த முக்கிய உறுப்புக்கள் நீடித்திருப்பதற்காக மாறுதல் செய்யவோ இயலாது. பின்னும் இரண்டு கண்களுடனே காதுகளுடனே எதிர்பாராத விதமாக வேறு ஏதாவது அவயவங்களுடனே ஒருவன் பிறந்துவிட்டால் போதும்; பிரயாணச் சீட்டு (Passport) இல்லாமல் கப்பலில் ஒளிந்து வந்தவனை விரட்டுவதுபோல், நம்மால் ஆனமட்டும் அந்த உறுப்புக்களை அகற்றிவிடவே பார்ப்போம். இதே போலப் புதிதாகத் தன் உடல் அமைப்பில் மாறுதல் புலப்பட்டாலும் மனிதன் அதைக் கண்டிப்பாக ஏற்கமாட்டான். அங்க லட்சணம்பற்றி அவன் கொண்டிருக்கும் கருத்தே இதற்குப் பெருந் தடையாக இருக்கும்! மனித உருவத்தில் இப்படித் திடீரென்று கட்டுக்கு மீறி ஏதாவது மாறுதல் நேர்ந்தால், அதனுல் நன்மையே உண்டு என்ருலும், அவனிடமுள்ள அழகுணர்ச்சி இதை ஏற்காது; இந்த உணர்ச்சியின் பெருமையை அது பாதிப்பதே காரணம்.

நம் பரந்த முதுகுப்புறத்திற்கு எத்தகைய பாதுகாப்பும் இல்லை என்பது நமக்குத் தெரியும். எதிர்பாராதபடி முதுகில் அடிபட்டால் அப்போது இந்தக் குறை இருப்பதும், இது நமக்குப் பெரிய துரதிருஷ்டம் என்பதும் தெரியும். இதனுல் அச்சமும் அவமானமும் துயரமும் நேருகின்றன. இதைக் கருதியே, 'அடாடா! ஒரு காலத்தில் (குரங்காகிய நம் மூதாதைக்கு) இருந்த வால் நமக்கு இருந்திருக்கக் கூடாதா?' என்று வருந்தத் தோன்றும். இன்னும் அந்த வாலின் நினைவுச் சின்னம் நம் உடல் அமைப்பில் அடங்கித்தான் இருக்கிறது. ஆனுல் வால் இல்லாத குறையை நீக்கச் சிருஷ்டியில் சிறிதளவு முயற்சி ஏற்பட்டால் உடனே சினந்து அதை எதிர்க்கி

ளும்; ''நம் முதுகுப்பக்கம் இருப்பது நமக்குத் தெரியாது; ஆகவே, எப்போதும் 'என்ன நேருமோ' என்ற உணர்ச்சியினுல் அஞ்சிக் கிடக்கிளும். நம் கற்பனையில் பேய் பிசாசு உருவாவதற்கு இதுவே காரணம்'' என்று தான் எனக்கு நிச்சயமாகப் படுகிறது. இருந்தாலும், 'பளுவைச் சுமக்கும் இந்தப் பின்புறத்திலே - விளக்க முடியாதவாறு அஞ்சி, அநியாயமாகப் பாதுகாப்பு ஏதும் இல்லாமல் கிடக்கும் இந்த முதுகுப்பக்கத்தில் - நம் இரண்டு கண்களில் ஒன்ருவது அமைந்திருக்கக் கூடாதா? நன்மையாக முடிந்திருக்குமே!' என்று இவ்வளவு காலங் கழித்துக் குறைப்பட்டு என்ன பயன்?

இப்படிப் புதிய அமைப்பு ஏதாவது ஏற்படுவதை மனிதன் பிடிவாதமாக ஒருபுறம் எதிர்த்துக்கொண்டேயிருக்கும்போது, உடலின் பகுதிகள் திறமையாக வேலை செய்வதைக் குறித்துத் துளியும் கவலைப்படாமல் இருக்கிருன்! நம் அவயவங்களில் சில, பழைய வலிமையை இழந்துவிட்டன. சுவர்களுக்குள் அடைபட்டு நாகரிக வாழ்வு வாழ வாழ, மனிதனுக்குக் கண்பார்வை குன்றி, காது மங்கி, தொலைவில் உள்ளது இன்னதென்று உணரும் சக்தியும் போய்விட்டது. சமைத்த உணவை உண்பதால் பல்லுக்கு அதிக வேலை இல்லை; பல் வைத்தியருக்குத்தான் அப்படி வேலை வைத்துவிடுகிளும். ஆடைகளை உடுத்து, உடம்பைப் பாழாக்கிக்கொண்டு விட்டோம். ஆகவே, நம் தோல் வெப்பம், குளிர்ச்சி போன்ற சூழ்நிலைகளைத் தக்கபடி தாங்கமுடியாமல் வருந்துகிறது. அடியோ காயமோ பட்டுவிட்டால் விரைவில் ஆறும் சக்தியும் குன்றிவிட்டது.

மனிதன் உலகத்தில் தோன்றுவதற்கு முன் துணிச்சலான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த வாழ்வின் தேவதை சற்று நின்று நிதானித்து யோசித்திருப்பாள் என்றுதான் தோன்றுகிறது. தன் பரிசோதனைகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே போவதும், உடம்பைப் பொறுத்தமட்டும் புதுப் புது அமைப்புக்

களைச் சேர்ப்பதும் வீண் என்று அவள் உணர்ந்திருக்க வேண்டும். உயிர்களைப் பொறுத்தவரையில் நான்கு என்பது இரண்டைப்போல் இரண்டு மடங்கு ($4=2\times 2$) என்று பெருக்கிக்கொண்டிருப்பது பொருத்தமில்லை. உயிருள்ள பொருள்களில் எந்தப் பகுதியோடு நின்றால், உடல் அமைப்புச் சீரானது என்று சொல்ல முடியுமோ அந்த மட்டோடு படைப்பை நிறுத்திக்கொள்வது மிகவும் அவசியம். இந்த அமைப்புக்குள்ளே அளவுக்கு மீறி ஏதாவது செய்து உடற் பகுதிகளின் உறவைக் குலைக்கக் கூடாது. அளவை மேலும் மேலும் பெருக்க விரும்புவது கேட்டில்தான் முடியும். லயம் அல்லது இசைவில் ஒரு பண்பு அடங்கியிருக்கிறது. இது சீராக இருக்கும் நிலையில், வெறிபிடித்த மாதிரி அதிக உடற்பருமன் ஏற்பட வேண்டுமென்று முயற்சி செய்தால், உடல் அமைப்புச் சீர் கெட்டுவிடும். மிகப் பெரிய துதிக்கையைத் தொங்க விட்டுக்கொண்டு யானை போகிறது. இது யானைக்கு அநுகூலமே. 'இப்படி அநுகூலம் இருக்கிறதே; ஏன் இதன் வாலும் ஒரு துதிக்கையாக அமையக்கூடாது?' என்று ஓர் எண்ணம் தோன்றலாம். பேராசையால், உயிர்களுக்குரிய அவயவங்களை இப்படி அளவுக்கு மிஞ்சி உற்பத்தி செய்து குவிப்பது, முன்னேற்றம் ஆகாது; சாவை நோக்கி விரையும் முன்னேற்றம் என்று வேண்டுமானால் சொல்லலாம், இதை.

வாழ்வில், அதற்கே இயல்பான ஒரு லயம் அமைந்திருக்கிறது. ஏதோ பெருக்கல் வாய்பாடு என்று இதை எண்ணிவிடக் கூடாது. பெருக்கல் வாய்பாட்டில் இப்படி ஓர் இசைவைக் காணமுடியாது. வாழ்வில் உள்ள ஒழுங்கை மீறிக் கர்வமாக முன்னேற முயன்றால் அந்த ஒழுங்குமுறை கெட்டு, முடிவில் பல இன்னல்களே நேரும்; முன்னேற்றமே இதனால் குலைந்துவிடும். முன்பே நான் சொல்லியதுபோல், பரிணாம வரலாற்றில் இப்படிப் பல கேடுகள் நேர்ந்திருக்கின்றன.

இந்தக் கேட்டிலிருந்து ஒரு நீதி நமக்குத் தெரி கிறது; எந்த மட்டோடு நின்றால் ஒழுங்கு என்பதை அந்த 'வால்' உணர்த்தியிருக்க வேண்டும். அப்படி அள வுக்கு மீறிப் போயிருந்தால் வாலை நம்புவது உடல் அமைப்புக்கே கேடாக முடிந்திருக்கும்.

அதோடு, இந்த உடலைப் பொறுத்த பரிணும முன் னேற்றத்திஞல் (Evolutionary Progress) ஒரு விசேஷப் பயன் உண்டு. அந்த அந்தப் பிராணிகள் தம்தம் சூழ் நிலைக்குள் திறமை பெற்று விளங்கும்படி இந்தப் பரி ணும வளர்ச்சி பழக்கிவிடுகிறது. ஒட்டகம் பாலைவனத் துக்கே சிறப்பான பிராணி; அது சேற்றில் வாழ்ந்தால் பொருத்தமாக இராது. நீர்யானை, நைல் நதிக்கரை யில் சேற்றிலே இருந்து பழகியது; அந்தச் சூழ்நிலைக்கே சிறப்பாக அமைந்த பிராணி. பக்கத்திலுள்ள பாலை வனத்தில் கொண்டுவந்துவிட்டால் அது துன்புறும். வாழ் வுத் துறையில் இப்படி ஓர் அம்சத்திலேயே ஒரு பிராணி சிறந்திருக்கும்படி செய்வதால், இன்ன தொழிலுக்கு இன்ன தகுதிதான் உண்டு என்ற குறுகிய கட்டுத் திட்டம் ஏற்பட்டுவிடுகிறது. அந்தக் குறுகிய எல்லைக் குள்ளே மட்டுந்தான் அந்த அந்தப் பிராணி தன் திறமையைக் காட்டி விளங்க முடிகிறது. ஆகாயவெளி யில் மட்டும் பறந்து பழகித் தேர்ந்துவிடுகிறது பறவை. அதே மாதிரி கடற்பரப்பு, மீன்களின் ஏகபோக உரிமை ஆகிவிடுகிறது; அங்கு மட்டுமே அவை சிறந்து விளங்குகின்றன.

நெருப்புக்கோழி, தான் வாழ்ந்து பழகிய பிரதேசத் திலேதான் சிறந்து விளங்கும். கழுகு வாழ்கிற இடத்தில் நெருப்புக்கோழி இருப்பது பொருந்துமா? ஆகவே, பிராணிகள் எப்போதும், தம்தம் எல்லையில் கிட்டும் வசதிகளைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியதுதான். இப்படி ஒரு விசேஷச் சலுகை கிட்டும்போது வாழ்வின் முழு லட்சியமும் ஈடேருமல் போய்விடுகிறது; அப்படி நேருவதைத் தவிர வேறு வழி இல்லை. ஏனென்றால், இந்த

வகை முன்னேற்றம் உடலோடு தொடர்புள்ள பொருள்களை அடிப்படையாகக் கொண்டது; ஆகவே, அது ஓரளவோடு நிற்க வேண்டியதுதான்.

''இப்படி உயிரற்ற வெறும் உடற் பளுவை மட்டும் பெருக்கி, பிராணிகள் ஒரு குறுகிய எல்லையில் மட்டும் சிறந்திருக்கும்படி செய்யும் இந்த் நிலையிலிருந்து எப்படி மீளலாம்?'' என்று படைப்புத் தெய்வம் ஒரு சமயம் யோசித்திருக்கவேண்டும். உயிர் வாழ்வது என்பது முக்கியமாக ஒரு பண்பு; அப்படி இருக்க, (பிராணிகளின்) உடல் அளவை மட்டும் பெருக்கிக் கொண்டே எத்தனை நாள் காலந் தள்ளமுடியும்? அப்படிப் போனால் தொல்லைகளே நேரும்; சிக்கல் என்னும் பெருஞ் சுழலில் அகப்பட்டு மீள முடியாமல் துன்புற வேண்டியதுதான். இந்த உண்மையை உணர அதிக நாள் பிடிக்காது. ஆதிகாலத்தில் பிரம்மாண்டமான மாமிச பிண்டங்களாக விளங்கிய விலங்குகள் அந்தச் சதைப் பளுவை தாங்குவதற்காக அதற்கு ஏற்றபடி மிகப் பெரிய எலும்புக்கூட்டை வளர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதைச் சமாளித்து நிற்பதற்காக, நீண்டு கனமாக விளங்கும் வால்கள் தேவையாக இருந்தன.

இப்படி அவற்றின் உடல் பருத்துக் கிடந்ததால் அதற்கு ஏற்றபடி விசாலமான இடத்தில் வாழவேண்டியதாயிற்று. இதனால் அவற்றின் உடலில் பெரும் பகுதி நன்றாகப் புலனாயிற்று; இதைக் காக்க வேண்டி, கனமான கவசம் போன்ற தோலை போர்த்த நேர்ந்தது. உயிரற்ற பொருள்களையெல்லாம் சேர்த்து இப்படி ஒரு ஜீவனைப் படைக்கவே, அதற்கு ஏற்றபடி பல், நகம், கொம்பு, குளம்புபோன்ற அமைப்புக்களும் தேவையாயின; இவையும் உயிரற்ற பொருள்களே. இப்படியே யந்திர ரீதியில் பளுவின்மேல் பளு ஏறிக் கொண்டே போகப் போக, சவத்தைச் சுமக்கும் வெறும் சுமைதாங்கியாக உயிர் ஆகிவிடுகிறது. ஒன்றுக்கு ஒன்று பொருந்தாத சதைச் சுமையினால்-பிராணிகள் அழுந்திச்

சாகும்வரை இந்த நிலை நீடித்து வருகிறது. 'ஒரு மரத்தின் பெரும்பகுதி உயிரற்ற பொருள்; மேலே செறிந்திருக்கும் மெல்லிய இலைப்போர்வையைத் தவிர அடிப்பகுதி முழுவதும் உயிரற்றதே' என்கிறார்கள். 'மேலே மேலே உயர்ந்து செல்லவேண்டும்' என்ற தன் ஆசை நிறைவேற்றுவதற்காக இந்த அடிப்பகுதியை மரம் பயன்படுத்திக்கொள்கிறது. உயிரற்ற இந்தப் பாகம், அடிமைபோல் மரத்தின் பெரும் பகுதியைச் சுமந்து நிற்கிறது. ஆனால் இப்படி உயிரற்ற ஒரு பொருளை மரம் நம்பி வாழ்வது எளிதில் நிறைவேறிவிடவில்லை; தன் சுதந்தரத்தைப் பறிகொடுத்துத்தான் மரம் இவ்விதம் வளர முடிந்தது. இந்தச் சுமையைத் தாங்க அது உறுதியான மண்தரையோடு உறவு கொள்ளவேண்டியிருந்தது. மண்ணுக்குக் கீழே உள்ள சிக்கலான வேர்த்தொகுதிகளின் உதவியால் அது நிலைபெற்றுத் தாவரம் ஆயிற்று.

ஆனால் இயங்கவேண்டும் என்ற பெரும்பேறு அடைய விரும்பும் பிராணி, உயிரற்ற வெறும் சுமையைக் குறைத்தே ஆகவேண்டும். வாழ்வு முன்னேற வேண்டுமானால், 'உடலுக்குள்ளே அமைந்த உயிர் அல்லது ஆத்மா பூரண வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்' என்பதை அந்தப் பிராணி உணர்ந்தாக வேண்டும். கவசம்போல் அமைந்த ஓட்டினால் தோலே மரத்துப்போக, உயிரையும் மிஞ்சி உயிரற்ற பொருள் வளர்ந்து கொண்டிருக்கக்கூடாது; கொம்பு, குளம்பு, நகம் போன்றவை பிராணியின் அவயவங்களை முடமாக்கிவிடக்கூடாது.

மனிதனைப் படைத்த பிறகுதான் படைப்புத் தெய்வம் தான் நாடும் உண்மை உருவம் இன்னபடி அமைந்திருக்க வேண்டும் என்று புரிந்துகொண்டது. அது எடுத்துக்கொண்ட முயற்சி முடிவு பெற்றது. எதற்காகப் படைப்பில் ஈடுபட்டோம் என்பது அதற்குக் கொஞ்சங் கொஞ்சமாகப் புலப்பட்டது. தன் எல்லை

யையும் கடந்து லட்சியப்பொருள் ஒன்று எங்கோ இருப்பதை அது உணர்ந்தது. மனிதன் தோன்றும் வரையில் அதனுடைய சிந்தனை யெல்லாம் உடலைப் பொறுத்தே அமைந்திருந்தன. உடலிலே பொருந்தி யிருக்கும் உறுப்புக்கள் திறமையாக வேலை செய்வது எப்படி, அதன் நுட்பம் என்ன என்பன போன்ற புறக் கருமங்களிலேயே படைப்புத் தெய்வம் ஈடுபட்டு வந்தது. இப்படியே உடற்பகுதியைப் பெருக்கிக்கொண்டு போனால் உடல் வளர்ச்சியைக் கண்டு தீராத சலிப்பே ஏற்பட் டிருக்கும். தேனீக்குப் பலமுகமாகக் கண்கள் அமைந் திருப்பதைப் பார்க்கிறோம். நாம் எண்ணி அறிய முடி யாத விசேஷப் பயன் இதனால் இருக்கலாம். மின்மினி யின் உடலில் விளக்குப்போல் ஒளிவீசும் அமைப்பு ஒன்று உண்டே, அது எதற்கு என்று கண்டறிய முடியாமல் திகைக்கிறோம்; அதை உணரும் சக்தி நமக்கு இல்லை. நாம் ஊகித்து அறிய முடியாத சில உணர்ச்சிகளை இந்த மாதிரி அவயவங்களின்மூலம் அறியும் ஜீவன்கள் பல இருக்கலாம்.

இப்படி முடிவில்லாமல் வாழ்வுப் பயணம் நீடித் துக்கொண்டே போகிறது; அந்த வழியிலே அமைந்த ஒரு மைல் கல்போல இந்த விசேஷப் புலன் உணர்வு அமைந்திருக்கிறது. அப்படியும் உடல்அமைப்பின் எல்லையைக் கடந்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை.

இத்தகைய வாழ்க்கைத் திறமை பிராணிகளிடம் அமைந்திருப்பதோடு அவற்றின் உடல் அழகும் வியக்கத் தக்கதாகவே இருக்கிறது. கடலின் ஆழத்தில் வளரும் சில பிராணிகளின் உடலில் அமைந்த வண்ணத்தையும், வித விதமான கோல வரிசையையும் பார்த்தால், ஆச்சரியத்தி னால் அப்படியே வாயடைத்து நிற்போம். வண்ணாத்திப் பூச்சியின் சிறகுகளையும், வண்டின் மேற்புறத்தையும், மயிலின் தோகையையும், சிப்பி நத்தை வகை ஜீவன் களின் மேல்ஓட்டையும், தாவரங்களில் சிறப்பாக உள்ள விசித்திரக் கோலங்களையும் கவனித்தால், அந்த அளவில்

சிருஷ்டி அமைப்பு முழு நிறைவு பெற்றிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இப்படியே பூத உடல் வளர்ச்சி பெற்று, என்னதான் விசித்திரமான பல அற்புத அமைப்புக்கள் ஏற்பட்டு வந்தாலும் நமக்கு விளங் காத மகத்தான ஏதோ ஓர் அம்சம் இந்த வகைப் படைப்பில் இருப்பதை உணர்த்திவிட்டே செல்கிறது.

பிராணிகளின் உடலில் அமைந்த இந்த மாதிரி இயற்கை அழகெல்லாம் ஓர் அடிமைப்பெண்ணின் உடம்பில் நகையாகச் சொரிந்து வைத்திருப்பது போன்றதே; உடல் அமைப்பைப் பொறுத்தவரையில் இந்த அலங்காரம் நிறைவு பெற்றிருப்பதாகப் படலாம்; ஆனாலும், புலன் அறிவுக்கு எட்டாமல் உள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஒரு பொருளை நாடும் எண்ணம் - இந்தப் பந்தத்திலிருந்து விடுதலை கிட்டாத ஓர் ஏக்கம் - இருந்தே தீரும். உடலைப் பொறுத்த சுதந்தரம் என்பது கூட்டுக்குள் அடைபட்ட சுதந்தரம் போன்றதுதான். இந்த வரம்புக்குள் ஒருவகைத் திறமைக்கும் அழகுக்கும் இடம் உண்டு. ஆனாலும் இந்தத் திறமை வெறும் யந்திர ரீதியானது; அழகோ மேல்வாரியாகக் காணும் அழகுதான். உடல் வலிமையும் சரி, திறமையும் சரி, எவ்வளவுதான் வளர்ச்சி பெற்றிருந்தாலும் இடைவிடாத பழக்கம் என்ற ஒரு கட்டுக்குள் உயிர் அடங்கிக் கிடக்க வேண்டியதாகிறது. பத்திரமாகவும் ஒரே மாதிரியாக வும் வார்ப்படம் எடுக்க அச்சுப் பயன்பட்டாலும், அது ஓரளவுக்குள் அடங்கி மூடினபடி கிடக்கிறது. அது போலத்தான் இந்த உடல் அமைப்பும்.

யுகம் யுகமாகத் தேனீ ஒரே மாதிரியாகத்தான் தேனடை கட்டி வருகிறது. தூக்கணங்குருவியும் ஒரே விதமாகவே - அதாவது, தலைகீழாகவே - கூட்டைக் கட்டி வருகிறது; சிலந்தியும் பழையபடியே கூடு அமைக்கிறது; அப்புறம் மாறவே மாறாத ஒருவகைப் பழக்கவழக்கம் இவைகளின் தசையோடு தசையாக, நரம்போடு நரம்பாகப் பொருந்திவிடுகிறது. குறை

ஏதும் ஏற்பட வழி இல்லாமற் போகிறது. அடங்கி ஒடுங்கிப் பாடத்தை நெட்டுருப் போட்டு, தொல்லேயும் பிழையும் செய்யாமல் நேராகவும் ஒழுங்காகவும் ஒரு பள்ளிக்கூடப் பையன் நடந்துகொள்கிருன்; ஆனுல் அவனுக்கு உற்சாகமோ, தானுகவே ஒன்றைச் செய்யும் துணிச்சலோ இருப்பதில்லே. அதே போலத்தான் உடல் சம்பந்தமான செயல்களும் நடக்கின்றன. அளவுக்கு மிஞ்சிப் போகாமல் கட்டுப்பெட்டியாக வாழ்வதில் சீரான ஒரு நிறைவு இருக்கிறதே, அதேபோலத்தான் இதுவும். உயிரற்ற பொருள் அடைந்துள்ள நிறைவுக்கும் இந்த நிறைவுக்கும் ஓர் ஒற்றுமை - நெருங்கிய உறவு - இருப்பதைக் காணலாம்.

'ஒரு பிராணி குற்றங்குறையற்று ஒழுங்காகவும் சீராகவும் அமைந்து பழக்கப்பட்டு, அதே சமயம் கட்டுப்பெட்டியாக நிறைவான இன்பவாழ்வு வாழ்வதைவிடப் பின்னும் சுதந்தரத்துடன் வாழவேண்டும்' என்று சிருஷ்டி தேவதை எண்ணிஞள். ஞான விருட்சத்தின் பழத்தை உண்ணத் துணிந்தாள். இந்தத் தடவை அவள் ஜடப்பொருளோடு போராடவில்லே. தன் பிரதிநிதிகளான பஞ்சபூதங்களின் கட்டுத்திட்டத்தைத்தான் அவள் மீறிஞள். அவளிடம் விசுவாசமாக நடந்துகொள்ளும் மந்திரிபோல் இருந்தது உய்த்துணரும் சக்தி. அதையும் மீறிப் புதிய பரிசோதனேகளில் அவள் ஈடுபட்டாள்; புதிய விதிகளே வகுத்தாள். முன்னே நடந்ததுபோல் இராமல் புத்தம் புதிய முறையில் மனிதன் என்ற ஒரு ஜீவனேப் படைக்க முயன்ருள். மனம் என்பது சிருஷ்டியில் ஆபத்தான ஓர் அம்சம்; சிருஷ்டி தேவதை ஜாக்கிரதையாகவே தன் மந்திராலோசனே சபையில் அதற்கு இடங் கொடுத்தாள். இது துணிச்சலான ஒரு காரியந்தான். 'முன்னே இப்படி மனம் என்ற ஓர் அம்சமே இல்லே' என்று ஒரேயடியாக நாம் சொல்லிவிடுவதற்கில்லே. ஆனுலும், குறிப்பிட்ட ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அதை மறைத்திருந்த திரை

விலகி, வாழ்வு என்ற நாடகத்தில் அப்போதுதான் அது தென்பட்டிருக்கவேண்டும்; உள்ளடங்கிய தீயின் வெப்பம் திடீரென்று ஒளி வீசித் தோன்றுவதுபோலவே இதுவும் புலப்பட்டிருக்க வேண்டும்.

உயிர் என்பது ஒரு பண்பு; அதைப்போலவே மனமும் ஒரு பண்பே. அதற்கு உரியது என்று சொல்லக்கூடிய எல்லை எதுவும் கிடையாது. ஆகவே, அது எந்தவிதமான எல்லையையும் மீறிய ஒரு பண்பு. உயிரைப்போலவே அதன் சுதந்தரப் போக்கில்தான் இதை (அது ஒரு பண்பு என்பதை) உணரமுடியும். ஆதியில் சிருஷ்டி தேவதையின் குழந்தைகளிடம் மனம் என்ற இந்தப் பண்பு சுதந்தரமாக இயங்க முடியவில்லை. விலங்குகளைப் பொறுத்தவரையில் அவை வாழும் சூழ்நிலைக்கு அப்பால் மனோசக்தி வியாபித்தாலும், அது ஒரு வரம்புக்கு உட்பட்டிருந்தது. அறையை விட்டு வெளியே ஓடிவரக் குழந்தைக்குச் சுதந்தரம் இருக்கிறது. ஆனால் வீட்டை விட்டே வெளியேற அதனால் முடியாது; அவ்வளவு சுதந்தரம் அதற்குக் கிட்டிவிடவில்லை. அதுபோலத்தான் இதுவும்.

வேறொரு விதமாகவும் இதை விளக்கலாம்: ஜப்பானுக்கு முதல்முதல் மேல்நாட்டோடு தொடர்பு ஏற்பட்டபோது ஒரே ஒரு துறைமுகத்தில்தான் வெளிநாட்டுக் கப்பல்கள் தங்குவதற்கு அது அநுமதி அளித்தது; அந்நியர்கள் தங்கு தடையில்லாமல் வந்து போகும் நிலை ஏற்பட்டால் தனக்கு ஆபத்து நேருமோ என்று ஜப்பானுக்கு மூண்ட அச்சந்தான் இதற்குக் காரணம். சிருஷ்டியின் நிலையும் ஆதியில் இப்படித்தான் இருந்தது. உயிருக்குப் புறம்பான ஓர் அம்சம் மனம். அதன் விதிகளே தனிப்பட்டவை. அதன் ஆயுதங்கள் சக்தி வாய்ந்தவை; மனத்தின் போக்கோ பாங்கோ மிகவும் புதுமையானது.

(யூதர், அராபியர் போன்ற) செமிட்டிக் சாதியாரின் புராணத்தில் (பழைய ஏற்பாடு என்று சொல்

லும் பைபிள் பகுதியில்) ஆதாம் என்ற ஆதிமனிதனின் மனைவியான ஏவாள் என்பவளைப்போலவே சிருஷ்டி தேவதையும் 'அமைதியாகத் தனித்திருப்பதுதான் சுகம்' என்ற எண்ணத்தை விட்டுச் சுதந்தரமாக நடக்க முயன்றாள். அவள் காதோடு காதாக ஒரு மாயாவி - மனம் என்ற மாயாவிதான் - 'புதிய மாய உலகம் ஒன்றில் நீ வாழ முடியும்; அதற்கு உனக்கு உரிமை உண்டு' என்று மெதுவாகப் பேசி அவளை நிரந்தரமாகக் கவர்ந்துவிட்டான். இதுவரை அவள் தன் சிருஷ்டி அலுவலிலேயே அக்கறை செலுத்தி வந்தாள். ஆனால் முன் அறியாத ஏதோ ஒரு மறுகரையிலிருந்து துணிச்சல் மிகுந்த இந்த மாயாவி மனம் வந்து சேர்ந்தது.

வந்ததுமே அது, சிருஷ்டி செய்வதைவிட மிகவும் சக்தி வாய்ந்த வேறு ஒரு துறையில் அவள் ஈடும்படி செய்துவிட்டது. இரண்டின் போக்கும் ஒன்றுக்கு ஒன்று முரணானவை; ஆகவே, விபரீதமான சிக்கல் எல்லாம் நேருகின்றன. முன்பே, 'மனிதனுடைய முக்கியமான உடல் உறுப்புக்கள் கவனிப்பு இல்லாமல் சீர்கெட்டுக் கிடக்கின்றன' என்று சொல்லியிருக்கிறேன். ஆதி காலத்தில் வாழ்வின் தேவதை நிம்மதியாகத் தனியாட்சி செலுத்தி வந்தாள். அவளுக்கு, 'உயிர் வாழ வேண்டியது எப்படி?' என்ற ஒரே நோக்கந்தான் அப்போது இருந்தது. மனம் தலையெடுத்ததும், அவளுடைய கவனத்தை அது வேறு வழியில் திருப்பிவிட்டது. அவளுடைய விருப்பத்துக்கு மாறாகத் தான் விரும்பியதை அவள் ஏற்கும்படி அது வற்புறுத்தியது. இப்படிச் செய்து செய்து அதற்குப் பழக்கம் ஆகிவிட்டது. இதில் ரகசியம் எதுவும் இல்லை; எல்லாரும் அறிந்த விஷயம் இது. சமீபத்தில் துணிச்சல் மிகுந்த சிலபேர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் ஆபத்தான முயற்சியில் ஈடுபட்டார்கள். எதையும் எதிர்த்துப் போராடும் போக்கு உள்ளது மனம். அதன் தூண்டுதல்தான் அவர்களுடைய முயற்சிக்கே காரணம். அதாவது, உயிர், தான் வாழவேண்டுமென்று கோரி

நிற்கும்போது, இதுவரை அதோடு கூட்டாக இருந்து வந்த மனம் ஒத்துழைக்க மறுத்துவிட்டது. யுகம் யுகமாக வாழ்வின் தேவதை அநுபவித்துவந்த பழைய ஆட்சியுரிமைகளை யெல்லாம் இந்த மனம் அவமதித்து, இகழ்ந்து வருகிறது. உயிரும் மனமும் கூடி நடத்தும் இந்தத் தொழிலில், ஒன்றின் அலுவலில் மற்றொன்று ஓயாமல் தலையிட்டு வருவதைக் காணலாம். இதனால் அடிக்கடி அமைதி குலைந்து, அழிவுறும் நிலையும் நேர்ந்து விடுகிறது. இப்படி ஒருவித முரண் இருந்தாலும் மனிதனுடைய பரிணாம வளர்ச்சி என்ற புதுப் பெருக்கு அருமையான அறிவுச் செல்வத்தை அவனிடம் கொண்டுவந்து குவிக்கிறது. பிரம்மாண்டமான சதைப் பிண்டங்களாக விளங்கிய ஆதி ஜந்துக்கள் இதைக் கனவிலாவது கண்டிருக்குமா?

மனிதன் இந்தப் பிராணிகளுக்கிடையே வந்து தோன்றியதே பெருத்த எதிர்ப்பு அல்லது அறைகூவல் என்றுதான் சொல்லவேண்டும். ராட்சசனைச் சித்திரக் குள்ளன் அறைகூவி அழைத்த கதையாகத்தான் இது இருக்கிறது. 'உடல் வளர்ச்சிக்கு இந்தப் பளுவான சாதனங்கள் தேவையில்லை. இவைகளில் எனக்கு நம்பிக்கையும் இல்லை' என்பதுபோல் அவன் உலகில் தோன்றினான். பிறந்த வடிவாக இப்படித் தோன்றிய மனிதனுக்கு, 'அஞ்சாதே!' என்று அபயம் அளித்தது அவன் மனம். அவன் தன்னந்தனியாகவே, கனமும் வலிமையும் மிகுந்த பெருந் தசைப்பிண்டங்களான அந்தப் பிராணிகளை எதிர்த்து நின்றான். அவன் உடலில் அமைந்த சிறு தசை நார்கள் முதலில் எதிர்க்க முடியாது நின்றன. அப்போது அவன் தானாகவே, புது முறையில், புதிய பரிணாம வளர்ச்சியின் அறிகுறியாக ஆயுதங்களைப் படைத்துக் கொண்டான். இதனால் விதியே என்று மற்றப் பிராணிகள் இயற்கையை நம்பி வாழும் நிலையிலிருந்து அவன் உயர்ந்து, உலகமே தன்னை மதிக்கும் நிலையை அடைந்து விட்டான்.

தன் உடம்புக்கு வெளியே, அதோடு ஒட்டாமல் சில அவயவங்களை - ஆயுதங்களைத்தான் சொல்கிறேன் - படைத்துக்கொண்டான். ஆனாலும் உடலோடு பொருந்திய அவயவங்களைப்போல இவை நேரடியாக அவன் வாழ்வில் எத்தகைய தொடர்பையும் எதிர்பார்த்து நிற்கவில்லை. இப்படி அவன் ஆதியில் உண்டுபண்ணிய ஆயுதவரிசையில் அம்பு, வில் இவைகளைக் குறிப்பிடலாம். உடலிலேயே பரிணாம ரீதியில் இந்தமாதிரி ஒரு மாறுதல் ஏற்பட்டு, அவனுடைய கைகளே நிதானமாகவும் படிப்படியாகவும் அமைந்திருந்தால், அது வீண் சுமையாகவும் அவலட்சணமாகவுந்தான் இருந்திருக்கும். ஒருவேளை நான் சொல்வது நேர்மையற்றதாக இருக்கலாம். உயிரிடம் ஓர் ஒழுங்கும் திறமையும் உண்டு; இப்படி அமைந்திருக்கும் தொழில்நுட்ப உணர்ச்சி காரணமாக அவன் கையே அழகான ஒரு வில்லைப்போல் உருவாகியும் இருக்கலாம்; யார் கண்டார்கள்?

அப்படி நேர்ந்திருந்தால் நம் பழைய இசைப் பாடல்கள் அதன் அழகையும் கவர்ச்சியையும்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்திருக்குமே! தன்னிடம் சிக்கிய விலங்கை வேட்டையாடுவதோடு மட்டுமா இந்தக் கையின் புகழ் நின்றிருக்கும்? உருவகப்படுத்திச் சொல்லும் ரீதியில், ‘இந்த அழகிய கையே வில்லாக அமைந்து, உயிரைக் கொள்ளை கொண்டது’ என்று வர்ணிப்பதற்கும் பொருத்தமாக அமைந்திருக்குமே! எப்படி இருந்தாலும், அப்போது ஒரு குறை இருந்து தான் தீரும். எடுத்துக்காட்டாக அம்பு எய்வதற்கு ஏற்றபடி அமையும் அதே கை பேனாவை எடுத்து எழுதத் தொடங்கினாலோ, வீணைத் தந்தியை மீட்டினாலோ எவ்வளவு விகாரமாக இருக்கும் பாருங்கள்! ஆனால் இப்படியெல்லாம் ஒன்றும் நேரவில்லை; மனிதனுடைய பரிணாம வளர்ச்சியில் அவனே படைத்துக் கொண்ட வில், அம்பு என்னும் அவயவங்களுக்கு - ஆயுதங்களைத்தான் சொல்கிறேன் - ஒரு பெரிய சௌகரியம்

உண்டு. இந்த வில், அம்புகள் மனிதனுடைய உடலோடு ஒட்டிக்கொண்டிராமல் அவனை விட்டு வேறாக அமைந்திருக்கின்றன; ஆயுதமாகப் பயன்படுகின்றன என்பதற்காக அவை அவன் கையைக் கட்டிப்போட்டு வைத்திருக்கவில்லை.

யானையின் துதிக்கை, புலியின் பாதம், பெருச்சாளியின் கால்நகம் இவை செய்யும் வேலையை எல்லாம் மனிதனுடைய கைகள் (ஆயுதங்களைக் கொண்டு) திறம்படச் செய்து காட்டிவிடுகின்றன. இத்தனைக்கும் மனிதனுடைய கைகள் (தனிப்படப் பார்த்தால்), நான் குறிப்பிட்ட பிராணிகளின் அவயவங்களைவிட வலிவற்றவை. உயிரியலில் புதிதாகக் கண்டுபிடித்த சாதனங்களால் இப்படி மிருகங்களின் அவயவங்கள் எல்லாம் ஒரே சமயத்தில் மனித உடலில் அமைந்துவிடுவதாக வைத்துக் கொள்ளலாம். அத்தனை பளுவையும் அந்த மனித உடல் சுமந்து செல்வது பார்க்க நகைப்பைத் தரும்.

மனிதன் இப்படி ஆயுதங்களைத் தானே அமைத்துக் கொண்டதால், முதல் முதலாக ஏற்பட்ட பெரும்பயன் உடல்பாரம் (அதிகமான அவயவங்கள் இல்லாதபடி) குறைந்ததுதான். அதாவது, மனிதன் தன்னால் இயன்ற அளவு, தன் திறமையைக் கொண்டே, உடலை அதிகமாக வருத்தாதபடி பல செயல்களைச் செய்ய முடிந்தது. இன்னும் ஒரு நன்மை என்னவென்றால், மனிதரைப் பொறுத்தவரையில் சிருஷ்டி தேவதைக்கு ஒரு வேலை குறைந்தது; தான் படைத்த மனித சிருஷ்டி ஏதோ ஓர் அளவுக்காவது வெற்றி பெற விசேஷ முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போயிற்று. இதனால் மனிதனுக்கு உற்சாகம் மூண்டது. தன் உடலிலேயே மீன், பறவை, பூமியில் வேகமாகச் செல்லும் பிராணி (உடலிலேயே) இப்படி எல்லாவற்றின் சக்தியையும் (தன் ஒருவனிடமே) அமைத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் கனவு காணலானான். தான் சம்பூர்ணப் பிறவி என்பதை உணர்ந்து, பல

வடிவங்களில் விளங்கும் ஜீவன்களுக்கெல்லாம் தனிப் பெரும் பிரதிநிதியாக இருக்க விரும்பினுன். இயற்கை விட்ட வழிப்படி விதியே என்று அடங்கி நடக்காமல், பகுத்தறியும் தன் மனவலியால் தானே தகுந்த வாய்ப் புக்களை ஏற்படுத்திக்கொண்டு அவைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான்.

பள்ளிக்கூடச் சிறுவன் ஒருவனுக்கு அவன் பிறந்த நாள் பரிசாக ஒரு கத்தி கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம்; இதனுல் அவனுக்கு என்ன நன்மை தெரி யுமா? 'இந்தக் கத்தியைக் கொண்டு புலியையும் வெல்ல லாம். கத்தி கிடைப்பது அப்படி ஒன்றும் சிரமமில்லை; அது கிடைப்பதற்கும் லட்சம் வருஷம் காத்திருக்க வேண்டாம். அது அபாயமானது என்று உதறித் தள்ள வும் அப்படி ஒன்றும் லட்சக்கணக்கான வருஷம் காத் திருக்கத் தேவை இல்லை' என்பது அவனுக்குப் புரிந்துவிடுகிறதே, இந்த நன்மைதான்.

மனிதனுடைய மனம் கணக்கற்ற யுகங்களில் நடக்க வேண்டியதை விரைவில் சாதித்து விடுகிறது. எஃகினுல் ஆன நகம் தயாரிக்க அப்படி ஒன்றும் அதிக நாள் பிடித்து விடவில்லை. இதில் ஒரு விஷயத்தைப்பற்றித் தான் கவலைப்பட வேண்டும்: அதாவது, ஆயுதமும் அதைப் பயன்படுத்துபவனுடைய தன்மையும் ஒன்றுக்கொன்று ஒழுங்காகப் பொருந்தாமல் போய் விட்டால் என்ன செய்வது? புலியிடம் அமைந்துள்ள இயல்புக்கு ஏற்றபடியே அதன் கால்நகமும் வளர்ந்திருக் கும். இதற்கு மாருகக் கால் நகத்துக்கும் புலியின் இயல் புக்கும் பொருந்ாதபடி ஒரு புலியையாவது காண முடியுமா?

ஒரு சிறுவனிடம் புலி நகத்துக்குப் பதில் கத்தி இருந்தாலும், வயசு வந்த ஆண்பிள்ளையைப்போல் எந் நேரத்தில் அதைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு வேண்டிய அறிவு வளர்ச்சி இராது போகலாம் (அவ் வளவு அறிவு வளர்ச்சி இருக்கும் என்று கொள்வதற்

கில்லை). இப்போது மனிதன் தன் பழைய வலிமைக்கு அநுசரணையாக உற்பத்தி செய்து குவிக்கும் புதிய கருவிகள் (ஆயுதங்கள்) அவனுடைய ஆத்மிக வளர்ச்சிக்குப் பொருந்தாத விதத்தில் மடமடவென்று பெருகி வருகின்றன. மனித சமூகத்திலும் இப்படிப் பல இளம் பிள்ளைகள் தங்கள் உயிரையும் மற்றவர்கள் உயிரையும் எளியதாக எண்ணி விடுகிறார்கள்; மனித இயல்புக்கு ஏற்றபடி பக்குவம் பெறாத ஆயுதங்களை வைத்துக் கொண்டு இவர்கள் விபரீதமான விளையாட்டில் ஈடுபடுவதையும் பார்க்கிறோம்.

இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது: அதாவது, வாழ்வு என்ற இந்த நாடகத்தின் மூலக்கருத்தே மாறிவிட்டது என்பதுதான். ஆதி மனிதனுடைய தாயான சிருஷ்டி தேவதை இப்போதுதான் (இந்த நாடகத்தின் மூன்றாம் அங்கத்தில்) ஓய்வு பெற்றுப் பின்னால் இருந்தபடி மனிதனுடைய ஆத்மாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள். ஆனால் ஒன்று: இப்படி அகத்தே இருந்தாலும் அவனுக்கு வேண்டிய உதவியும் புரிந்துதான் வருகிறாள். தானே ஒன்றைப் படைக்க முடியும் என்பதை மனிதன் உணர்ந்துவிட்டான். இதனால் சிருஷ்டி தேவதையின் பழைய ராஜ்யத்தில் புதிய ஆட்சி முறை ஏற்பட்டுவிட்டது. இதுமுதல் மனிதனே உலகில் ஆதிக்கம் செலுத்த முனைந்துவிடுகிறான்; ஒரு நீதி முறையையும் வகுத்துக்கொண்டு, அது நீடித்திருக்கும்படி தன்னால் ஆன முயற்சியெல்லாம் எடுத்துக்கொள்கிறான். இந்தியாவில் ஞானிகள், யோகிகள் என்றெல்லாம் நாம் போற்றும் பெரியவர்கள் இயற்கைச் சக்தி தங்கள் உடம்பை அடக்கி ஆள்வதைக் காணப் பொறாமல் ஆத்ம சக்தியை ஆதாரமாகக் கொண்டு யோகசாதனை மூலம், நாம் கண்டறிய முடியாத பேரின்ப நிலையை அடைந்திருக்கிறார்கள்.

இப்படி நம் பரிணாமவளர்ச்சி திசை மாறியவுடன் ஒரு முக்கியமான விஷயம் தெளிவாயிற்று. மனிதனிடம்

அமைந்த மிருகத்தன்மைக்குத் தேவையானதைவிட ஏராளமான மூலசக்தி அமைந்த 'ஆத்மா' என்ற ஒன்று இருப்பது தெரிந்தது. பொங்கி வழியும் ஏதோ உணர்ச்சி காரணமாக வாழ்வின் எல்லையையும் மீறிய சிந்தனைகளிலும் கற்பனைக் கனவுகளிலும் மனிதன் நிம்மதியாகப் பொழுதுபோக்க வாய்ப்பு ஏற்பட்டது. படைப்பதிலேயே இன்பம் கண்ட தெய்வப் பிறவிகளுக்குத்தான் இதுபோன்ற வாய்ப்புக் கிட்டும். ஆதியில், 'உயிர் வாழ்ந்தால் போதும், அதுவே சொர்க்கம்' என்று இருந்து வந்த நாளில் பிராணிகளுக்கு எங்கிருந்தோ அதிருஷ்டம் வந்து தற்செயலாகக் கிட்டியது.

இப்படி அதிருஷ்ட தேவதையையே நம்பி அவை வாழும்போது, சில சமயம் அவள் பிராணிகளைத் தட்டிக் கொடுத்துச் சீராட்டியும், சில சமயம் எட்டி உதைத்து அலட்சியம் செய்தும் வந்தாள். இப்படிப்பட்ட யாசகர் கூட்டம் தனக்குள் ஒத்து வாழமுடியுமா? இவர்கள் தம்மிடையே பொறுமையும் சந்தேகமும் கொண்டு, எஜமான் தயவை எதிர்பார்த்துப் பல்லை இளித்தும், உறுமியும், குரைத்தும், ஒன்றை ஒன்று அழிக்க முயன்றும் வாழும் நாய்களைப் போலத்தான் காலந் தள்ளவேண்டியிருக்கிறது. இதையே விஞ்ஞானிகள், 'உயிர் வாழப் பிராணிகளுக்குள் நடக்கும் போராட்டம்' என விவரிக்கின்றனர். இத்தகைய பிச்சைக்காரர்களின் சொர்க்கத்தில் அமைதி ஏன் இருக்கப்போகிறது? விதி அல்லது அதிருஷ்ட தேவதையின் தயவை நாடும் பேர்வழிகள் புதிய கருவிகளைக் கண்டுபிடித்துக் கொண்டும் ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டும் எப்போதும் சண்டைக்குத் தயாராக இருக்க வேண்டியதாயிற்று.

ஆனாலும் இந்தப் போட்டி பூசல்களை மீறி - உடல் தேவைதான் முக்கியம் என்ற நிர்ப்பந்தத்தையும் மீறி - நிறைவு (சம்ருத்தி) என்னும் தெய்வத்தின் குரல் கேட்கிறது; ஓய்வு, பற்றற்று இருக்கும் தன்மை இவைகளையும் அந்தத் தெய்வக் குரல் உணர்த்தி, 'சும்மா

இருப்பதே சுகம். அதிலேயே மகிழ்ச்சி கொள்ளுங்கள்' என்று மக்களை அழைக்கிறது. பல ஜீவன்களில் ஒன்ருக, இயற்கைக்கு அடிமைப்பட்டுக் கிடந்த மனிதன் இப்போது, தானே சிருஷ்டிகர்த்தா ஆகிவிடுகிருன். முன்னெல்லாம், 'அது வேண்டும்; இது வேண்டும்' என்று ஓயாமல் விரும்பி வந்தான் மனிதன். இப்போது, 'எல்லாவற்றையும் கொடு, கொடு' என்ற குரல் அவன் காதில் ஒலிக்கிறது. இதுவரை அவன் இறைவனை நாடி யாசிப்பதுதான் வழக்கம். இப்போது அந்த இறைவனே அவன் வாசலைத் தேடிவந்து, எல்லாவற்றையும் தனக்கு அர்ப்பணம் செய்யும்படி கேட்கிருன். மிருகம் என்ற ரீதியில் பார்த்தால் மனிதன் இன்னும் இயற்கைக்கு அடங்கி நடப்பவன்தான். ஆனுல் சம்பூர்ண மனிதன் என்ற முறையில் பார்த்தால், தானே ஓர் உலகத்தைப் படைத்து அதை ஆளும் ஏக சக்கராதிபதி ஆகிவிடுகிருன்.

அப்போதுதான் தருமம் அல்லது சமய உணர்ச்சி மேலோங்குகிறது. எல்லைகளையெல்லாம் மீறிய பரந்த நோக்கமும் உண்டாகிறது; தன்னை இன்னுன் என்று அவன் உணர்ந்துகொள்ளுகிருன். அதர்வ வேதத்தில் ஓர் அருமையான பாடல் வருகிறது: 'நேர்மை, உண்மை, பெரு முயற்சிகள், அரசு, சமயம், தனி முயற்சி, வீரம், சுபிட்சம், கடந்த காலம், எதிர் காலம் எல்லாம் நிறைவு என்னும் பண்புக்கு, பெருஞ் சக்திக்குக் கட்டுப்பட்டவை.'

முட்டைக்கு வரம்பு அதன் ஓடு. அதுபோலவே உடல் தேவையும் இந்த உடம்பாகிய கூட்டோடு தீர்ந்து விடுகிறது. எல்லையற்ற பொருளில்தான் - ஆனந்தம் என்பதில்தான் - விடுதலை கிட்டும். அதை இன்ன தன்மையானது என்று விளக்க முடியாது; கண்ணுலும் காண முடியாது. உடலைப் பொறுத்த வரையில், அதாவது லோகாயத ரீதியில் பார்த்தால், தருமம் அல்லது சமயஉணர்ச்சி பொருளற்றதாகவே படும். பூமி தேவி

யிடம் ஒரு திருப்தி இருப்பதைக் காணலாம்; அதனுல் தான் திரும்பத் திரும்ப ஒளியும் உயிரும் மகிழ்ச்சியும் அவளிடம் பொங்குகின்றன. இதுபோலவே, 'நிறைவு பெற்றுவிட்டோம்; இதோடு போதும்' என்ற நிலையில் தான் நம் மனிதப் பண்பு வெளியாகிறது.

என் கவிதை ஒன்றில், 'தாயின் கர்ப்பத்திலிருந்து குழந்தை பிரிந்து வெளியேறிய பிறகுதான் தாயோடு தனக்குள்ள உண்மை உறவை உணர்ந்துகொள்கிறது; அதாவது, விடுதலை பெறும்போதுதான் உண்மையைக் காண முடிகிறது' என்று சொல்லியிருக்கிறேன். அது போலவே மனிதனும் பற்றறுத்து வாழும்போதுதான் பிரபஞ்சத்துக்கும் தனக்கும் இடையே உள்ளூற அமைந்த உறவில் தன்னையே அறிந்துகொள்கிருன். ஆத்மஞானம் அவனுக்குக் கிட்டுகிறது. ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழும்போது தன் கடமையையும், தன் சுதந்தரமான இயல்பையும் உணர்ந்தே நடக்கிருன்; சத்துவ குணம் என்பது இதுதான். ஆத்மிக வாழ்வில் ஈடுபட்டிருக்கும்போது பரம்பொருளோடு ஐக்கியமாக வேண்டும் என்ற உணர்வும், சுதந்தரமாக விளங்கும் அவனுடைய மனநிலையும் சேர்ந்து அன்பு உருவாகின்றது. தன் சக்தியையும் இயற்கைச் சக்திகளையும் கொண்டு மனிதன் தனக்கு வேண்டிய வாய்ப்பை அடையும் சுதந்தரம் பெறுகிருன். மனித சமூகத்தில் தனக்கும் பொறுப்பு உண்டு என்பதை ஏற்பதால் சமூகத்தோடு பழகும்போது சுதந்தர புருஷனுக நடந்துகொள்கிருன். இதனுல் அவனுடைய சொந்த நன்மைக்குத் துணையாகச் சமூகத்தின் கூட்டு வலிமை அவனுக்குக் கிட்டுகிறது. பிரக்ஞை அல்லது உள்ளுணர்வு பெற்றிருப்பதால் பரம் பொருளுடன் தான் இணைந்திருப்பதை உணருகிருன். 'என்றும் நீடித்து விளங்கும் உண்மை, பேரன்பு அல்லது பக்தி இவைகளுக்காகத் தன்னை அர்ப்பணம் செய்வதில் வாழ்வின் லட்சியம் நிறைவேறுகிறது' என்பதைக் கண்டு கொள்கிருன். இந்த உடற்பற்றுதலிலிருந்து முதல்

முதல் மனிதன் விடுபட்டான். உடலின் எல்லேக்குள் கட்டுப்பட்டுக் கிடந்த புலன் அறிவையும் அவயவங்களே யும் வளர்த்தாக வேண்டும் என்ற நிலேயைக் கடந்து விட்டான் என்றுதான் இதற்கு அர்த்தம். இப்படி அவன் தங்கு தடையில்லாமல் முன்னேறியதால் பெரும் பயன் அடைந்தான். 'சுற்றிலும், அதற்கு அப்பால் சிறிது தூரமும் கண்டறியக்கூடிய அளவுக்கு மனிதனுக்குப் பார்வைச் சக்தி வேண்டும்' என்றுதான் இயற்கை முதலில் எண்ணியது. ஆனல் மனிதனுடைய மண்டையோட்டி லேயே வான ஆராய்ச்சிக்குப் பயன்படும்படி தூரதிருஷ் டிக் கருவி ஒன்று வளர நேர்ந்திருந்தால், ஆதிகாலத் தில் ஜடப் பிண்டமாக அசட்டுச் சதை போட்டுக் கிடந்த பிராணிகளுக்கு ஏராளமான தந்தம் இருப்பதுபோல் வீணுகிப் பெருங் குழப்பத்தில்தான் மனித சிருஷ்டியும் முடிந்திருக்கும். நத்தை, தான் குடியிருக்கும் ஓட்டைத் தானே முதுகில் சுமந்து செல்கிறது; ஆகவே, அந்த ஓடு, அதன் உருவம், அதன் கனம் எல்லாம் நத்தையின் உடல் தாங்கக்கூடிய அளவுக்கு இருந்தாக வேண்டும். ஆனல் மனிதனே இந்த விஷயத்தில் அதிருஷ்டசாலி; அவ னுடைய எலும்பை ஆதாரமாகக் கொண்டே அவ னுடைய சதையோடு சதையாகப் பொருந்தியோ அவன் வாழும் வீடு வளர வேண்டிய தேவையில்லே. இப்படி எதையும் பற்றிக்கொள்ளாமல் நிற்பதால் மனிதன், தான் வாழும் இடத்துக்கும் அதன் உறுதிக்கும் அளவு கோலாமல் மேலும் மேலும் துணிச்சலாகக் கட்டிடங் களே எழுப்ப விரும்புகிருன்; அவனுடைய இந்த ஆசைக் குத் தங்கு தடை ஏது?

அவனுடைய உடலே ஆதாரமாகக் கொண்டு அவன் வாழும் கட்டிடங்கள் அமையவில்லே; ஆகவே, அவன் போன பிறகும் அவை அப்படியே இருக்கின்றன. இதிலிருந்து, தன் சிருஷ்டி நிலேபெற்றிருக்க வேண்டு மென்ற எண்ணத்தோடுதான் மனிதன் ஒரு வீட்டைக் கட்டுகிருன் என்று சொல்லவேண்டும். காலத்துக்கு ஓர்

எல்லே கோல முடியாது; அது அளவற்றது; இந்த நிலேயே கட்டிடக் கலேயை வளர்க்க உதவுகிறது. உடனடித் தேவை என்பது லோபித்தனத்துக்குச் சமமாகும். இவைகளையெல்லாம் கடந்து விளங்குவதே கட்டிடக் கலேயின் நோக்கம். 'தனிப்பட்ட உயிர்க்கூறுகள் இணைந்து பெருங்கூருக மாறின. இவை ஒவ்வொன்றிலும் ஏராளமான உயிர்க்கூறுகள் அடங்கியிருந்தன. சும்மாக் கூட்டியதால் இவற்றின் தொகை பெருகி, இப்படி உயிர் வளர்ச்சியில் ஒரு நிலே ஏற்பட்டுவிடவில்லே. ஆழ்ந்து அறியமுடியாத ஒரு ரகசிய ஒற்றுமையினுல்தான் இது சாத்தியமாயிற்று. பலவகை உருவமும் தொழிலும் கொண்டதாய், இன்னதென்று தெளிவாக விளக்க முடியாததாய் அமைந்த ஒருவித உறவு இது' என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

இப்படித் தனித் தனியாக இடைவெளி விட்டது போல் உயிர்க் கூறுகளின் பகுதிகள் அமைந்திருந்தாலும் இவை மொத்தமாக இணேயும் சக்தி இதனுல் தடைப்பட்டுவிடவில்லே. இப்படி இணேந்து வளரும்போது மொத்தத்தில் உடல் வளர்ச்சி நீடிக்கிறது; ஆனுல் தனி உயிர்க்கூறு இந்த வளர்ச்சிக்காக உழைக்கும்போது மடிந்துகொண்டே வேறு ஓர் உயிர்க்கூறு இந்த வேலேயில் ஈடுபட இடங் கொடுக்கிறது. மொத்தமாக அமைந்த இந்த உடல் வளர்ச்சியில் தனக்கும் பங்கு உண்டு என்று தனிக்கூறு பெருமை கொள்ளலாம்; என்ருலும், இந்த உடற் செல்வம் என்பது தனக்கே உரியது என்று அது உரிமை பாராட்ட முடியாது.

உயிர் வளர்ச்சி இன்னும் முடிந்தபாடில்லே. ஜீவராசிகளில் இப்படிப் பல கூறுகள் இணேந்த படைப்புகளுக்குள் மனிதனே சீராக அமைந்திருக்கிருன் - உடல் வளர்ச்சியில் மட்டுமல்ல; குணவிசேஷத்திலுந்தான். தான் தனிப்பட்டவன் என்ற நிலேயை மனிதன் கடக்கப் பல நூற்ருண்டுகள் பிடித்தன. இதுவே மனிதனுடைய பரிணும வளர்ச்சியாகும். 'தனிமைக்கும் முழுமைக்கும் தம்முள்

தொடர்பு உண்டு என்பதை அறிந்தால்தான் நிறைவு பெற முடியும்; உண்மை மனிதனுக முடியும்' என்பதை அவன் உணர்ந்துகொண்டான். தெள்ளத் தெளியப் புலனுகா விட்டாலும் சுபாவத்திலேயே தோன்றிய உணர்வுதான் இது. தன்னுல் ஆனமட்டும் மனித இயல்பில் இது வெளியாகப் பார்க்கிறது; இதற்காக என்றென்றும் அரும்பாடுபட்டு வருகிறது; பௌதிக உலகத்தோடு சரிவரத் தொடர்பு கொள்வதே உடல் வளர்ச்சியின் நோக்கம். மனிதனுடைய பிரக்ஞை அல்லது உள் ளுணர்வு வளரவளர மனிதர்களுடைய பண்புச் சிறப்புப் பொருத்தமாக அமையவேண்டும்; அதிலேயே உண்மை யைக் காணவேண்டும் என்ற அறிவு ஓங்கியது.

மனித சமூகம் என்பது உருவற்ற ஒரு விஷயம் என்ருர்கள் சிலர். 'சமூகத்தின் ஒரு பகுதியான தனி மனிதனுக்கே அது நிலைபெற்ற உண்மை என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டமுடியாது' என்று ஒப்புக் கொள்ளவேண்டியதுதான். வெளியிலிருந்து பார்க்கும் போது மனித சமூகம் என்பது என்ன என்பது விளங் காது; மனிதர்களே அதன் பகுதிகளாக ஒன்றியிருப்பது தான் இதற்குக் காரணம். அதுபோலவே உடலிலுள்ள ஒவ்வொரு தனிக்கூறுக்கும் தனிப்பட்ட உயிர் உண்டு. ஆனுல் உடலின் ஆதிநிலை, இன்றைய நிலை, எதிர்கால நிலை இவற்றை மொத்தமாகக் காண அந்த உயிர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. இந்தத் தனிக்கூறுகளுக்குப் பகுத்தறிந்து ஆராயும் சக்திமட்டும் இருந்தால் (அப்படி யும் இருக்கலாம்; யார் கண்டார்கள்?) 'உடல் என்னும் பொருள் உண்டு என்பதற்கு ஆதாரமே இல்லை' என்று தான் வாதிக்கும். ஏதோ ஒருவித ரகசியமான கவர்ச்சி யும் பரஸ்பர உணர்வும் அமைந்திருந்தாலும், இவைகளை உண்மை என்று சொல்லிவிடுவதற்கில்லை. ஒன்றைத்தான் நிரூபிக்க முடியும்: 'இந்தக் கூறுகள் தனித்தனியாகப் பிரிந்தே இருக்கின்றன. இவைகளுக்கு இடையில் உள்ள வெளியை ஒட்டவைக்க முடியாது' என்பதைத்தான்.

வெடிக்கும் தன்மையுள்ள அணுக்கள், தம்மையும் விடப் பிரம்மாண்டமான ஆகாயப் பரப்பில் சுழலுகின்றன. இதைப்பற்றிச் சிறிதளவாவது கேள்விப்பட்டிருப்போம். இருந்தாலும், இவை ஒளிவீசும் கெட்டியான தாதுப்பொருளைப்போல் நம் கண்ணுக்குத் தெரிகின்றன; அது ஏன் என்பது நமக்குப் புரியவில்லை. எல்லையற்ற காலம், பரப்பு இவைகளுக்கிடையே கணக்கில்லாத மக்கள் முன்னேறி, அவர்களுக்கென்று ஒரு பொதுவான வரலாறு அமைவதை ஒரே நோக்கில் யாராவது பார்க்க முடிந்தால், அப்போது மனிதர்கள் தனித்தனிப் பிறவிகள் என்ற நிலை போய், மனித சமூகம் ஒன்றே என்னும் உண்மை தெளிவாகத் தெரியும்.

அணுவை ஆதாரமாகக் கொண்டு ஆராயும்போது ஓர் இரும்புத்துண்டு உண்மையான வஸ்து என்று நிரூபிக்க முடியாது. அப்படி ஒரு பொருள் உண்டு என்பதற்கு ஒரே அத்தாட்சி, நான் அந்த இரும்புத்துண்டை என் கண்ணால் பார்ப்பதும், அதைப்பற்றி என் மனத்தில் சில எண்ணங்கள் தோன்றுவதுந்தான். ஓரியன் அல்லது மிருகசீர்ஷ நட்சத்திரத் தொகுதியில் இருப்பவனுக்கு அணுவைக் காணும் சக்தி உண்டு; ஆனால் பல அணுக்களால் ஆன இரும்புத்துண்டை அவனால் காண முடியாது. அவனுக்கே, 'இந்த மனிதப் பிறவிகள் யுகம் யுகமாக மாயை என்ற நோய் பிடித்துக் கிடக்கிறார்கள்' என்று சொல்ல உரிமை உண்டு. அவனோடு நாம் வாதாடத் தேவையில்லை. நமக்குத் தோன்றுகிறபடி நாம் இரும்பைப் பயன்படுத்திக்கொண்டால் போதும். '**வேதாஹ மேதம்**', அதாவது, 'நான் உணர்ந்தேன்' என்று கூறித் தாம் கண்டு உணர்ந்த நிலையின்படி வாழ்ந்திருக்கிறார்கள், சில தீர்க்கதரிசிகள். அந்த மாதிரி ஞானக்கண் நமக்கு இல்லையெனினும் அவர்களை நாம் பக்திசிரத்தையுடன் வணங்கியே வந்திருக்கிறோம்.

மனித சமூகம் ஒன்றே என்ற உண்மையை உணர்ந்து நம் தர்க்க நியாய முறைப்படி அதற்கு என்ன

பெயர் வைத்திருந்தாலும் சரி, ஒன்றை மட்டும் மறந்து விடக்கூடாது: அதாவது, 'மற்றவர்களுக்காகவும் நாம் வாழ்கிறோம்' என்று உணரும்போது நமக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அன்பின் தன்மை இதுதான். இந்த அன்பே, 'முழுமுதல் ஒன்று உண்டு' என்பதற்குச் சான்று. இதுவே நித்திய புருஷன் ஒருவன் உண்டு என்ற முடிவான உண்மையை உணர்த்துகிறது. பசி, உறுமும் குரல், நெரியும் பல், கிழிக்கும் நகம் என்னும் மிருகத்தன்மையிலிருந்து நமக்கு விடுதலையை இவ்வன்பு அளிக்கிறது. கொடும் பொறாமை, ஏமாற்றவேண்டும் என்ற இழிவான சுபாவம் இவை களுக்கெல்லாம் காரணம், உலகத்தில் நமக்கு வேண்டிய பொருள் ஓரளவு மட்டுமே கிடைப்பதுதான். ஆனால் பிற உயிர்களிடம் இரக்கம் கொள்வதாலும், எல்லாருட னும் ஒத்து வாழ்வதாலும், பல காலமாக இருந்துவரும் தடைகளை மீறி விளங்கும் வரம்பற்ற மெய்ஞ்ஞானத்தை நாடுவதாலும், நிற வேற்றுமை, நாட்டு வேற்றுமை எதையும் பாராமல் தொண்டு புரியும் அளவுக்கு நம் அறிவை வளர்க்க அரும்பாடு படுவதாலும் நமக்கு மனிதப் பண்பு என்னும் ஆத்மிகச் செல்வம் கிட்டு கிறது. அளவில்லாமல் நிறைவுபெற்று வாழும் நிலையில்- போதும் என்னும் மனத்திருப்தி ஏற்பட்ட நிலையில்- அன்புத் தெய்வம் தோன்றி 'நான்' என்ற மாயையி லிருந்து நம்மை விடுவிக்கிறது; மனிதர் வாழும் இந்த உலகில் அன்புத்தெய்வம் என்றென்றும் இந்த ஞான ஒளி யைப் பரப்ப முயன்றுதான் வருகிறது. உயர்ந்த பண்பாடு அல்லது நாகரிகம் இதுதான்; இதுவே நம்மிடம் பரம் பொருள் இருப்பதை உணரச் செய்கிறது; உலகில் எல் லாம் ஒன்றே என்பதை அறிந்து அழியா உண்மையான அறநெறியில் உய்க்கிறது.

'ய ஏகோ வர்ணோ பஹுதா சக்தியோகாத்
வர்ணாந் அநேகாந் நிஹிதார்த்தோ ததாதி

**விசைதி சாந்தே விச்வமாதௌ ஸ தேவ:**
**ஸ நோ புத்யா சுபயா ஸம்யுநக்து'**

அதாவது:

''வர்ண பேதங்களை மீறியவன் எவனோ, தன்னுடைய பலவகைச் சக்தியால் எல்லா நிறத்தவருக்கும் அவரவருக்குத் தேவையானவற்றை எந்த விதமான வேற்றுமையும் பாராமல் அளிப்பவன் எவனோ, உலகம் தோன்றியபோதும் முடியும்போதும் நிலைபெற்றிருப்பவன் எவனோ அந்தத் தேவன், நாம் எல்லாரும் மனம் ஒத்து வாழும்படி, அருள் புரிவானாக.''

# 3. மனிதனிடமுள்ள நிறைவு

அதர்வ வேதத்தில் வரும் சில பாடல்களில் கவி, 'புருஷன் என்பவன் யார்?' என்பதைப்பற்றி ஆராய்கிறார். அதில் அமைந்திருக்கும் விசேஷக் கருத்து இது தான்:

'மனிதனுக்கு ஓர் உருவமும் பெருமையும் அளித்தவன் யார்? உலகத்தில் பலவிதமாய், பல குணங்களுடன் அவன் இயங்கும்படி செய்தவன் யார்? அவனுக்கு மெய்ஞ்ஞானம், இசை, நடனம் ஆகியவற்றை அளித்தவன் யார்? மனிதன் உயர்ந்த நிலையை அடைந்த போது தன்னிடம் இதுவரை காணாதவற்றையெல்லாம் கண்டு உணர்ந்தான். அவனே பரம்பொருள் அல்லது நித்திய புருஷன் இருப்பதை அறிந்து,

'தஸ்மாத் வை வித்வாங் புருஷமிதம் ப்ரஹ்மேதி மங்யதே' இந்தப் புருஷனையே ஞானி, 'பிரம்மம்' என்று உணருகிறான்.

ஸநாதநம் ஏநம் ஆஹுர் உதாத்ய ஸ்யாத் புநர்நவ:'- இவனை ஆதிமுதல் இருந்து வருபவன் என்பார்கள்; ஆனாலும் இன்றும் புதுமையுடன் விளங்குகிறான் இவன்.

உலகத்தில் மனிதவாழ்வு தொடங்கியவுடனே இயற்கை விதியை மீறித் தன் உடல் அமைந்திருப்பதை உணர்த்தும் ரீதியில் மனிதன் சுதந்தர புருஷனாக நடந்துகொண்டான். பரிணாமவளர்ச்சி ஒரு நிலையை அடைந்ததும் அவன், 'நான் நாலுகால் பிராணி என்பதை ஏற்க முடியாது. இயற்கைக்குப் பணியமாட்டேன்' என்பதுபோல் நிலையாக நிமிர்ந்து நடக்கத் தொடங்கிவிட்டான். நிலத்தில் நடக்கும் எல்லா மிருகங்களுக்கும் அவைகளின் நீண்ட உடற் பகுதியிலே

ஒரு முனையில் தலை கனமாக அமைந்திருக்கிறது. ஆகவே, சரிசமமாக அந்தக் கனத்தைத் தாங்கவேண்டும் என்று தான் இரண்டு ஜதைக் கால்களை இயற்கை மிருகங்களுக்கு அளித்தது; அதைப்பற்றிச் சந்தேகமேயில்லை. பூமிக்குத் தன் பக்கமாகக் கனத்தை இழுக்கும் சக்தி ஆதி முதல் உண்டு. ஆகையால், உடல் எந்த விதமாக அசைந்தாலும் பூமி தன் சக்தியினால் அதை ஆட்டி அடக்கி விடும். இதற்கு ஈடு கொடுப்பதற்காகத்தான் இப்படி ஒருவித இசைவு ஏற்பாடு (நாலு கால்கள் என்ற அமைப்பு) மிருகங்களின் உடலில் அமைந்தது. இப்படி முன்யோசனையோடு அமைந்த ஓர் ஏற்பாட்டைக்கூட மனிதன் கைவிட்டு விட்டான் என்றால், அதிலிருந்து என்ன தெரிகிறது? அடிக்கடி சட்ட திட்டங்களைச் சீர் திருத்தி அமைக்கவேண்டும் என்ற ஒரு வேட்கை இயல் பாகவே உண்டு என்பது தெளிவாகிறது. விதி கொண்டு வரும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் மாற்றுக் கண்டு மடக்குகிறான் மனிதன் என்பதுதானே இதன் பொருள்?

நாலு கால் கொண்ட ஒரு மேஜை நிமிர்ந்து, பின் இரண்டு கால்கள் செங்குத்தாக நிற்க, முன்னங் கால் இரண்டும் பக்கத்தில் சும்மாத் தொங்கும் படி நடந்தால் பயந்துதானே போவோம்? ஒன்று, இது கனவில் வரும் பேய் என்றோ, இல்லாவிட்டால், 'மேஜை சரியாக வேலை செய்யவேண்டும்' என்று எண்ணும் தச்சனுடைய விருப்பத்தைக் கிண்டல் செய்யவேண்டி இப்படி இது மாயவித்தை செய்து காட்டுகிறது என்றோ தான் தோன்றும். அதைப்போலவேதான் மனித உட லின் அமைப்பும் இருக்கிறது. 'இயற்கை விதித்த வழியே செல்லாமல் தன் முரணான போக்கிலேயே போகும் ஏதோ வால்நட்சத்திரம் உச்சத்தில் இருந்த போது மனிதப் பிறவி தோன்றியிருக்கும்' என்று தான் ஊகிக்கவேண்டி யிருக்கிறது. மிருகங்களைப் போல் பழைய ரீதியை அநுசரித்து, நாலு காலாலும் நடக்காமல் இருப்பதால் மனிதனுக்கு எவ்வளவோ

தொல்லை ஏற்படுகிறது; அப்படி இருந்தும், அவன் தன் முரட்டுப் பிடிவாதத்தை விடாமல் இருக்கிறான் என்றால், அது ஒரு விசேஷந்தானே? நாலு காலால் நடக்கும்போது தசைகளைக் கொண்டு எளிதில் உடல்கனத்தைத் தாங்க முடிந்திருக்கும்; ஆனால் மனிதன் தசையின் உதவியை ஒரு பாதிதான் ஏற்றான். தன் குழந்தைப் பருவத்திலேயே அதன் உதவியை அதிகமாக நாடாமல் பலவகை அபாயமான சோதனைகளில் ஈடுபடத் துணிந்து தன்னால் ஆனமட்டும் தட்டுத் தடுமாறிப் பார்க்கிறான். அதோடு பின்னாலும் தன் வாழ்க்கை முழுவதும் பல சந்தர்ப்பங்களில் அவன் இடறி விழுந்துவிடக்கூடிய நிலையில் இருக்கிறான். சில சமயம் இதன் விளைவு விபரீதமாக இருக்கிறது; சில சமயம் நாலுபேர் அவனைப் பார்த்துச் சிரிக்கும்படி நேர்ந்துவிடுகிறது. இயற்கை விதிப்படி நடக்கும் மிருகங்களுக்கோ அந்த மாதிரி ஒரு சங்கட நிலை ஏற்படவே இடம் இல்லை. சர்வ வல்லமை பொருந்திய இந்த மண்ணுக்கு எப்போதும் அடிபணிந்து கிடந்தால் மனிதனும் மிருகங்களைப்போல் நலமுடன் வாழமுடியும். ஆனால் அவனோ அப்படிப் பத்திரமாக உடம்பைப் பாதுகாத்துக் கொள்வதை விட்டு இந்த மாதிரி ஒரு பெரிய முயற்சியில் ஈடுபட்டுவிட்டான்.

இப்படி நம் உடல் நிமிர்ந்து நிற்பதால் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் நாம் எளிதில் திரும்ப முடிகிறது; அவ்வளவு சுதந்தரம் கிட்டிவிட்டது, இந்த மனித உடலுக்கு. ஆகவே, எந்த விஷயத்திலும் நாம் நடுநாயகமாக விளங்குகிறோம். பௌதிக ரீதிப்படி பார்த்தால், 'மிருகங்களின் வளர்ச்சி என்றால், குறுகலான கோடு ஒன்று நீளுவதைப் போன்றது' என்றும், 'மனிதனுடைய வளர்ச்சி என்றால் ஒரு சிறு வட்டம் பருத்து வருவது போன்றது' என்றும் கொள்ளவேண்டும் நடு நாயகமாக விளங்கும் மனிதன் பரந்து நோக்குகிறான்; தன்னைச் சுற்றி எவ்வளவோ இருப்பதைக் கொண்டு தன் பெருமையை அறிந்துகொள்கிறான்.

இப்படி ஒவ்வொரு துறையிலும் அவனுக்கு விடுதலை கிட்டக் கிட்ட அவனுடைய பார்வையும் அகன்றுவிடுகிறது. அவன் வெறும் கண்ணால் பார்ப்பதை இங்கே குறிப்பிடுவதாக எண்ணாதீர்கள். இரை தேடிக் கொன்று தின்னும் பல மிருகங்களுக்குக் கண் பார்வை மனிதனை விட மிகக் கூர்மையாக இருக்கிறது. வெளிச்சத்துக்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ளும் வகையில் பார்வை அமைந்திருக்கிறது. நம் உடலின் மேல்பகுதியில் மூளை என்ற ஒரு காவல் கோபுரம் இருக்கிறது. அதன் உதவியால் நாமே புதுவிதமாக எதையும் நோக்குகிறோம். அதாவது, நாம் காணும் பொருள்கள் எங்கே இருக்கின்றன என்பதைப்பற்றிய வெறும் விவரத்தை மட்டுமே அறியும் பார்வை அன்று அது; ஒவ்வொரு பொருளுக்கும் தம்முள் தொடர்பு உண்டு, ஒற்றுமை உண்டு என்பதை அறிந்து நோக்குவதே.

நிமிர்ந்து நின்றதால் அவன் உடலுக்கு ஒரு சுதந்தரப் போக்கும் கைகளுக்கு விருப்பம்போல் காரியம் செய்யும் வாய்ப்பும் கிட்டின. நம் உடல் அமைப்பில் இந்தக் கைகளே திறமைக்கும், அழகுக்கும் பயனுடைய செயல்களுக்கும் பிற பல நலன்களுக்கும் பயன்படும் தன்மைக்கும் பெயர் பெற்றுச் சிறந்து விளங்குகின்றன; இந்த நிலைகளுக்கு அப்பாலும் இவற்றின் பெருமை பரவியுள்ளது. நம் அவயவங்களுக்குள்ளே மிகவும் சுதந்தரமாக இருப்பவை இந்தக் கைகளே. ஒரு காலத்தில் இவை நம் உடலைச் சுமக்கும் 'ஈன'த் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், அந்த அடிமை நிலையிலிருந்து விரைவில் உயர்ந்து, நமக்குத் துணையாகப் பல காரியங்களைச் செய்யும் மேல்நிலையைப் பெற்றுவிட்டன. நமக்குக் கீழே அவைகளை அழுத்தி வைத்திராமல் நம் பக்கத்தில் அவைகளுக்கு இடம் கொடுத்தவுடன், நம் மிருகஇயல்பைக் கடப்பதற்கு அவை துணைபுரிந்தன; இப்படியெல்லாம் தம் விசேஷத் திறமையைப் பலவிதத்தில் அவை வெளிப்படுத்தின. மனிதனுடைய நோக்கமும் செயலும் இவ்விதம்

தங்கு தடை இல்லாமல் வளர்ச்சி அடைந்ததோடு கூடவே, அவன் மனமும் சுதந்தரமாகக் கற்பனையில் ஈடு படத் தொடங்கியது. உடை ஏதும் உடுத்தாமல், அலங்காரம் ஏதும் செய்யாமல், கவசமோ ஆயுதமோ எதுவும் இராமல் அரை குறையாகப் படைக்கப்பெற்ற ஒரு ஜீவனுக்கு (மனிதனுக்கு) இந்த மாதிரி ஒரு சுதந்த ரம் பெருந்துணையாக இருந்தது! இன்னும் கேட்கப் போனால் மனிதனுடைய மனம் அநேகமாகப் பழகி வசப்படாதது; வெறும் சூனியமாக இருந்த அந்த மன வெளியில் எளிதில் கிட்டாத நிறைவான லட்சியம் கிட்டியதற்கு இந்தக் கற்பனைச் சுதந்தரந்தான் கார ணம். கலைஞர்களைப்போலவே மனிதனுக்கும் தவறுகள் புரியச் சுதந்தரம் உண்டு. தன் உடல், மனம் இவைகளை வருத்தி, இவைகளுக்கு முரணுக மிகவும் துணிச்சலான செயல்களில் ஈடுபடவும் அவனுக்குச் சுதந்தரம் உண்டு. எந்தவிதமான பயிற்சியையோ கட்டுத் திட்டத்தையோ அறியாத மனிதப் பிறவிகளுக்குக் கிடைத்த தெய்விக வரப் பிரசாதம் என்றே இதைச் சொல்லவேண்டும். ஆகவே, மனித சிருஷ்டியின் வளர்ச்சியில், நெடுக அழிவுச் சின்னங்களையும், சீரான நிலைகளுக்கிடையே திடுக்கிடும் படி மிகக் குரூபமான பயங்கரப் பேய்த் தோற்றங்களை யும் காண்கிறோம். இருந்தாலும், இந்த மாதிரி சிருஷ்டிப் பயிற்சிக்கு இடையே ஒரு நோக்கம் மட்டும் தெளிவாக விளங்குகிறது. தனிப்பட்ட ஒருவனுடைய மனத்தில் மட்டுமே ஏற்பட்ட விசேஷ எண்ணம் அல்லது அதிசய சிந்தனை என்றோ, தேவைக்கு ஏற்ற அளவோடு நின்று விடும் ஒரு மனப்போக்கு என்றோ அதைக் கொள்வதற் கில்லை; எல்லா மனித உயிர்களிடத்திலும் பரவிய ஒரு லட்சியம் என்றே அதைக் கொள்ளவேண்டும்.

நம்மைச் சுற்றிலும் நோக்கும்போது நாம் அந்தச் சூழ்நிலைக்கு உட்பட்டவர்கள் என்ற உண்மையை உணர்ந் திருப்பதுபோலவே, நம் கற்பனையிலும் ஒரு லட்சிய வாழ்வைக் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கிறோம். நம்

சொந்த நன்மையைக் குறித்து வாழ விரும்புவது, 'நாம் மட்டுமே நீடித்து வாழவேண்டும்' என்ற ஜீவராசிகளுக் குள்ள இயல்பான உணர்ச்சி இவைகளையெல்லாம் கடந்த - இவைகளுக்கு மாறான - ஒரு வாழ்வு வாழ வேண்டும் என்னும் லட்சியந்தான் அது. அது எப் போதும் நிறைவையே நாடுகிறது. அன்றாடம் தேவைக்கு ஏற்றபடி திட்டமிட்டு வாழும் நிலையைக் கடந்து, உலகம் முழுவதும் பரந்து விளங்கும் விசுவபுருஷனை வரவேற்ப தற்கு, மதிப்பரிய விருந்தினர் இல்லத்தைச் சமைக்கின் றான் மனிதன். நம் ஆத்மா மிருகத் தன்மையோடு தளைப்பட்டிராமல் சுதந்தரமாக விளங்கும்போது அந்த விசுவபுருஷனை வரவேற்கும் உரிமை உறுதியாக நமக்கு உண்டு. சுதந்தரமாக இருக்கும் ஜீவாத்மா தெய்வத் தன்மை பொருந்தியது; ஆகவே, விசுவபுருஷனாகிய பரம்பொருளோடு உறவு கொண்டாட அதற்கு உரிமை உண்டு.

எந்தத் துறையில் இப்படி உண்மையான சுதந்தரம் நமக்குக் கிட்டினாலும் போதும்; தனி ஆத்மாவின் விருப்பு வெறுப்பையெல்லாம் கடந்து நிற்கும் நிலையை அடையும் வழி - நம்மை நாமே அறிந்துகொள்ளும் லட்சியத்தை நோக்கிச் செல்லும் வழி - பின்னும் விசாலமாகிறது. இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டுப் பாதுகாப்போடு ஜீவராசிகள் திரும்பத் திரும்ப உண்டாவது, மிருகங் களைப் பொறுத்தவரையில் நன்மையாக இருக்கலாம்; கற்பனையே சிறிதும் இல்லாத இந்த மாதிரி நிலை மனித னுக்குப் பொருந்தாது. உண்மை வாழ்வு வாழ்வதற்காக இந்த உலக வாழ்வையும் கடந்து, நித்திய வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டியவன் மனிதன். குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காகவே படைப்பில் இப்படி ஒரு சுதந்தரப் போக்கு ஏற்பட்டது என்று தோன்றலாம்; ஆனால், 'இதையும்விட ஏதோ ஒரு முக்கியமான லட் சியத்துக்காகவே இந்த நிலை ஏற்பட்டது' என்பதை இந்தச் சுதந்தரப் போக்கு நமக்கு அடிக்கடி

உணர்த்தி வருகிறது. இந்தச் சுதந்தரம் எதற்காக? எல்லையற்ற ஒன்றைத் தெளிவுபடுத்தத்தான் ஏற்பட்டது. இது தனக்குத் தானே ஒரு வரம்பு வகுத்துக் கொண்டாலும், அடிக்கடி அதை மீறி வந்திருக்கிறது. இப்படி முடிவு இல்லாமல் புதிய புதிய அதிசயங்களை அது நமக்கு வெளிப்படுத்தி வருகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? 'அடிக்கடி உயிர்கள் தழைத்தோங்கின; புதிய புதிய சிருஷ்டிகள் தோன்றின; சீரான நிலையை அடைவதற்காக - அடிப்படையான ஒரு லட்சியத்தோடு இணைந்து விளங்குவதற்காக - அந்த உயிர்கள் இடைவிடாமல் பழமையை எதிர்த்து வந்திருக்கின்றன' என்பதுதான்.

மேலும் மேலும் முன்னேற வேண்டும் என்று, விடாமல் இப்படி அரும்பாடு படும்போது சில சந்தர்ப்பங்களில் சட்டென்று பல கோணங்களில் மனித நாகரிகம் வளர்ச்சி அடைந்தது. ஒரு பெருங் குழப்பம் மூண்டதும், அதிலிருந்து புதிய புதிய முயற்சிகளில் ஈடுபட ஊக்கம் பிறந்தது; மனித நாகரிகத்தின் போக்கு இது தான்: பருவகாலத்துக்கு ஏற்றபடி பூத்துப் பழுக்கும் சாதாரண மாறுதல் என்று இதைக் கொள்வதற்கில்லை. எதிர்பாராமல் எங்கோ மறைவில், திடுக்கிடக்கூடியபடி ஏதாவது சம்பவம் நேரலாம்; அதற்கு ஏற்றபடி புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டுவிடும். வழி வழியாக இருந்து வரும் லட்சியங்களில் - உடல் பழக்கம், மனப்போக்கு, சின்னங்கள், சடங்குகள், அலங்காரங்கள் இவைகளை அடிப்படையாகக் கொண்டு இருந்துவரும் லட்சியங்களில் - ஏற்படும் மாறுதல்கள்தாம் இவை. ஆனாலும் ஒன்று நிச்சயம்: எந்தக் காலத்தில், எந்த நாட்டில் இப்படிப் புரட்சி நேர்ந்தாலும், உலக சரித்திரம் என்னும் பொதுவரலாற்றில் அது ஒரு பகுதியாகவே இருந்து வருகிறது; அதிலிருந்து தனியே பிரிந்து நிற்பதில்லை. இந்தியாவிலோ சீனாவிலோ பாரசீகத்திலோ யூதர்களின் நாட்டிலோ கிரேக்கத்திலோ ரோமாபுரியிலோ தலை

யெடுத்த நாகரிகங்களை ஒரே மலைத்தொடரில் வெவ் வேறு உயரம், சீதோஷ்ண நிலை, தாவர அமைப்பு, பிராணிவகை இவைகளைக் கொண்டு விளங்கும் பல சிகரங்களுக்கு ஒப்பிடலாம். இந்த நாகரிகங்கள் ஒன் ேறாடு ஒன்று தொடர்பு கொள்ள முடியாதபடி அப்படி எந்தவிதமான தடையும் இல்லை. எல்லா நாகரிகங்களின் அடிப்படையும் ஒன்றே; எல்லாருக்கும் பொதுவானது இந்த உலகம்; ஆகவே, அந்த நாகரிகங்களினுல் ஏற்படும் விளைவுகளும் எல்லாரையுந்தான் பாதிக்கும். 'மனிதர் எல்லாரும் நற்கதி அடையவேண்டும். நான் ஒருவன் மட்டும் முக்தி பெற விரும்பமாட்டேன்' என்று அருளிய சமயாசாரியரது பொன்மொழியின் அடிப்படைக் கருத்து இதுதான். நாம் எல்லாரும் ஒரு தெய்விக சம்பந் தத்தால் ஒருவருக்கொருவர் இணைந்திருக்கிருேம். இதி லிருந்துதான் நம் மகாத்மாக்கள் அல்லது முனிவர்களுக் கெல்லாம் ஓர் ஊக்கம் பிறந்தது. தம்மிடமே அந்த ஒற்றுமையை உணர்ந்து, தம் வாழ்வில் இதை அவர்கள் வெளியிட்டிருக்கிருர்கள். 'அழிவற்ற பரிபூரணப் பரம் பொருளுடன் ஒன்றி நிற்கிறேன்' என்ருர்கள் தம் அநு பவத்தின் மூலம்.

தன்னைத் தானே படைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக முனைந்த மனிதன், 'எங்கும் பரந்து விளங் கும் சத்தியம்' என்று, தான் கொண்ட ஒரு கருத்தை மனத்தில் வளர்க்க முயன்று வருகிருன். 'அந்தச் சத்தி யத்தை எந்த விதமாகவாவது வெளியிடவேண்டும்; அப்படிச் செய்தால்தான் அது என்றென்றும் நிலைத்து நிற்கும்' என்று உறுதியாக நம்புகிருன். உயிர் வாழ்வ தற்கு என்னவோ இந்த மாதிரி ஒரு மனப்பான்மை வீண் என்றே படுகிறது. ஆனுல் இது, 'மனித சரீரம் உலகில் வாழ்ந்தால் போதும்' என்ற கருத்தை ஆதாரமாகக் கொண்டு எழுந்த லட்சியமன்று; அதற்கும் அப்பாற்பட்ட அமர வாழ்வு பெற வேண்டும் என்ப தைத்தான் இது உணர்த்துகிறது. இன்று நாம் வாழும்

நிலை, 'நாம் ஆதியில் இப்படி வாழ்ந்தோம்' என்ற நினைவோடு சம்பந்தமுள்ளது. லட்சிய வாழ்வு வாழ வேண்டும் என்பதோ எதிர்கால வாழ்வைப்பற்றிய எண்ணமாகும். மண்ணில் மறைந்து கிடந்த பழம் பொருள்களைத் தோண்டி எடுத்தபோது - ஆதி நாகரிக வரலாற்றைக் கவனிக்கும்போது - யுகம் யுகமாக மக்கள் தம் நினைவை இடைவிடாமல் பாதுகாத்து வைக்க வேண்டுமென்று அரும்பாடு பட்டிருப்பதைப் பார்க்கிறோம்; இவர்களுடைய இந்த முயற்சியை நோக்க நோக்க நமக்குப் பரிதாபமாகவே இருக்கும். இது எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு குழந்தை, தொலைவில், தான் கண்டறியாத ஒரு நாட்டுக்குப் போய்ச் சேரக் காகிதப் படகு ஒன்றை மிதக்கவிட்டு அங்கே போய்ச் சேருவதாகக் கனவு காணுவதுபோலத்தான்! ஆனாலும், இந்த மாதிரி ஒரு விருப்பம் ஏன் ஏற்பட வேண்டும்? இதற்குக் காரணம், 'நாம் லட்சிய வாழ்வு வாழ்வதன் மூலம் எங்கும் பரந்த நித்திய சத்தியத்தை எக் காலத்திலும் எல்லாரிடமும் பொருந்தும்படி காட்ட வேண்டும்' என்று நம்மிடம் ஓர் உணர்ச்சி இயல்பாகவே இருந்துவருவதுதான். இதை வெளியிடுவதற்காக, சிறந்த கருத்துக்களைத் திரட்டி அவை என்றென்றும் மதிப்போடு விளங்கும்படி செய்யப் பார்க்கிறோம். நிலையற்ற மானிடராகிய நாம் என்றென்றும் நிலைபெற்று வாழும் புருஷனுக்கு ஒரு காணிக்கை செலுத்தித்தானே ஆகவேண்டும்? ஆகவே, சும்மா உயிர் வாழ்வதற்காகப் பாடுபடுவதைவிட இந்த லட்சியத்துக்காக எல்லாரும் அரும்பாடு படவேண்டி யிருக்கிறது! இந்த மாதிரி முயற்சியில் ஈடுபடும்போது நம் உடைமைகளை இழந்து, அடிக்கடி பிழைப்புக்குங்கூடத் திண்டாட நேரும்; சில சமயம் உயிரையும் இழக்க நேரும்.

காட்டுமிராண்டி ஒருவன், தான் இன்னபடி விளங்க வேண்டும் என்று (தன்னை லட்சிய புருஷனாகக்) கற்பனை செய்வதாக வைத்துக்கொள்ளலாம். அந்தக் கற்பனை

யில் என்ன விசேஷம் இருக்கும் தெரியுமா? பளிச்சென்ற வர்ணஜாலமும் ஆடம்பரமான வேலைப்பாடுகளும் மனம் போனபடி அமைந்த ஆபரண அலங்காரங்களும் மிதமிஞ்சிய அலங்காரத்தால் விகாரமான தோற்றமுந் தான் அதில் காணமுடியும். கம்பீரமான 'லட்சிய புருஷன்' என்று கருதும் ஒருவன், தன்னைப்போலவே அமைந் திருப்பதாக அந்தக் காட்டுமிராண்டி நம்புகிறுன். ஓர் அளவுக்கு உட்பட்டு இயல்பாகத் தன்னிடம் அமைந்த குணங்களோடு அவன் திருப்தி அடைவதில்லை. தன்னைத் தவிர இன்னும் ஏதோ ஒன்று இருப்பதாக அவனையும் மீறிய ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது; அதை அடைந்தால் தான் தனக்கு மதிப்பு உண்டு என்று எண்ணுகிறுன். 'வலிமை அல்லது சக்தியே முக்கியமானது' என்ற கொள்கைதான் அது. அவனுடைய மனநிலை இப்போது இருக்கும் ரீதியில், 'இதுதான் நாம் வாழும் பிரபஞ்சம் எங்கும் பரவிய உண்மை' என்று அவனுக்குப் படுகிறது. ஆகவே, தன் சொந்தச் சுகத்தை இழப்பதாக இருந் தாலும் அந்தச் சக்தியை உணர்ந்து அதை வெளியிடு வதே தன் கடமை என்று எண்ணுகிறுன். உண்மையி லேயே இந்த மனேபாவத்தால் அவன் தன் தெய்வத் தோடு ஒன்றிவிடுகிறுன்; சக்தி அல்லது வலிமையே தன் தெய்வம், அதைவிட வேறு இல்லை என்று அவன் உறுதியாக நம்புகிறுன். காட்டுமிராண்டி, மிகவும் சிர மப்பட்டுப் பளிச்சென்று விளங்கும் வர்ண ஆடை அலங் காரங்களோடு, தன் உடலையே கோணல் மாணல் ஆக்கிக் கொண்டு தன்னையே சக்தி அல்லது வலிமை என்னும் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்துகொள்கிறுன்; அப் போது தன்னைத் தானே கொடூரமான சித்திரவதை களுக்கும் ஆளாக்கிக் கொள்ளுகிறுன். அதோடு மிதமிஞ் சிய சுகபோகமும் அநுபவிக்கிறுன். இந்தமாதிரி ஒரு முரட்டுக் காம்பீரியத்தைப் பார்த்ததும் அவனுடைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவனிடம் ஒருவிதமான பக்திசிரத்தை ஏற்படுகிறது; அவனுடைய கம்பீரமான

தோற்றம் அவர்களுக்கு ஒருவகைத் திருப்தியை அளித்து, அவனிடம் பயந்து நடக்கும்படி செய்கிறது; இந்தத் திருப்திக்குக் காரணம், அவர்களுக்குத் தெரிந்தவரையில், 'லட்சிய புருஷன் இப்படித்தான் இருப்பான்' என்ற தம் கற்பனைச் சித்திரத்தைக் கண்ணெதிரே காண்பதுதான். அவனிடம் தனிப்பட்ட மனிதனின் இயல்பு எதையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை; தங்களுக்கெல்லாம் - மனித சமூகம் முழுவதற்கும் - பிரதிநிதியாக விளங்கும் ஒரு புருஷனையே காண விரும்புகிறார்கள். ஆகவே, எத்தகைய துன்பம் அநுபவித்தாலும் சரி, அவனுடைய பொருளற்ற ஆடம்பரங்களைப் பார்ப்பதிலே அவர்களுக்கு ஓர் இன்பமும், அத்தகைய மகத்தான புருஷன் மனம் வைத்தால் தங்களுக்குத் தீங்கு விளைவிக்க முடியும் என்று தெரிவதால் அவனது ஆணைக்கு அடங்கி நடப்பதில் ஒரு மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. தாங்கள் வணங்கும் தெய்வங்களிடம் இப்படி ஆட்டி வைக்கும் சக்தி மிதமிஞ்சி இருப்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள். 'நாம் நகைத்து இகழும் அளவுக்கு மிஞ்சிப் பெரியனவாகவும், ரத்தப் பலி கேட்கும் அளவுக்குப் பழிவாங்கும் தன்மை உள்ளனவாகவும், யார் கொடுப்பதை ஏற்பது யாருக்குத்தான் வரங் கொடுப்பது யாரைத்தான் தண்டிப்பது என்றெல்லாம் வேற்றுமை பாராத சுபாவம் படைத்தனவாகவும் அந்தத் தெய்வங்களை அமைத்தார்கள். ஆகவே, அவை கருணாமூர்த்திகள் என்றோ, எதையும் ஜாக்கிரதையாகக் கவனித்து நடந்துகொள்ளும் தெய்வங்கள் என்றோ யாரும் 'குறை' கூறுவதற்கில்லை; துளியும் கலங்காத நெஞ்சோடுதான் அவை இருந்திருக்கின்றன; ஏன் இந்தக் காலத்துப் பெரிய மேதாவிகள், 'இரக்கம், கருணை பாராட்டுவதெல்லாம் வெறும் உணர்ச்சி வசப்பட்டதால் ஏற்பட்டவை' என்று ஏளனம் செய்யவில்லையா?

இது ஏதோ பரிபக்குவம் அடையாத வழிபாட்டு முறை என்று தோன்றினாலும், ஒன்றுமட்டும் நிச்சயம்:

'நம்மையும் மீறிய ஏதோ ஒரு பொருளில் நாம் ஓர் அம்சமாக விளங்குகிறோம்' என்ற உணர்வு மனிதனிடம் இருப்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. தான் குறைபாடு இல்லாதவன் என்றாலும், இன்னும் நிறைவு பெற்றவனாக - பரிபூரண மானிடனாக - ஆகவில்லை என்பதை மனிதன் உணர்ந்திருக்கிறான்; தன்னிடம் ஏதோ அரும்பொருளை இன்னும் காணவில்லை, இனியாவது அதைக் காணவேண்டும் என்பதை அறிந்திருக்கிறான், மனிதனிடம் காட்டுமிராண்டித்தனம் நிலையாக அமைந்திருப்பதில்லை. அடிவானத்துக்கு என்ன எல்லையோ அதேமாதிரிதான் இதுவும். மனிதன் முன்னேற ஏற அவனுடைய பழைய வாழ்வு காட்டுமிராண்டி வாழ்வாகத் தோன்றுகிறது! இதனால்தான் அவன் தனக்குள்ளே ஒன்றை அறிய முயற்சி புரிவது நமக்குச் சாதாரணமாக இருக்கிறது; அப்படி ஒன்றும் விந்தையாகவே படவில்லை. அவன் மனத்தின் ஆழத்தில் ஒரு குரல் அவனை அழைக்கிறது. அவனுடைய அந்தரங்கத்தில் அடங்கிய உண்மையின் குரல் அது. அது அவன் கண்ணெதிரிலும் புலப்படாதது; தர்க்க நியாய வாதங்களாலும் ஆராய முடியாதது. எங்கும் பரந்த இந்தப் (பரம)புருஷனைப் பற்றிய உண்மையை ஐயமற அறிந்த பலர் இந்த உலகத்தில் தோன்றியிருக்கிறார்கள். நாம் இதை நம் உள்ளுணர்வினால் அறிய அறிய, புதிய லட்சியங்களை வளர்த்து அவைகளுக்கு மதிப்புத் தருகிறோம்; புதிய கருத்துக்களில் ஆழ்ந்து, இன்பத்தில் திளைக்கிறோம். பகட்டு, ஆத்திர உணர்ச்சி, உருவம் நிறம் சொல் நடத்தை இவைகளில் பலாத்காரம் ஆகியவற்றை ஒழிக்கும்போது - இழிவான இந்த இயல்புகளையெல்லாம் நீக்கும்போது - சாதுக்களுக்குரிய மகிமை பொருந்திய சொற்கள் நம் வாயிலிருந்து வெளிவருகின்றன.

ஒவ்வொரு யுகமும் தன் கற்பனையில் காணும் மகத்தான கருத்துக்களை வெளியிடுகிறது. பல நூற்றாண்டு

கள் கடந்தும் அந்தப் பழைய யுகம் நிலைபெற்றிருக்கும்படி செய்வன இந்தக் கருத்துக்களே. இவையெல்லாம் மனித சரித்திரம் என்னும் பெரும் பீடபூமியில் படிந்து நிற்கின்றன. இந்தக் கருத்துக்கள் யாவும் சமயத் தொடர்புள்ளனவாக இருக்கவேண்டும் என்பதில்லை; ஆனாலும், இவையும் ஒருவிதத்தில் மனித தருமத்தைச் சேர்ந்தவைகளே. மனித இனத்தில் தனி மனிதனிடம் பரமபுருஷனைப்பற்றிய உள்ளுணர்வு இருப்பதை இவை நமக்குக் காட்டுகின்றன. இந்த உள்ளுணர்வு விஞ்ஞானம், தத்துவம், கலைகள், சமூக ஒழுக்கம் - இப்படி ஒவ்வொரு துறையிலும் மதித்துப் போற்றக்கூடிய நூல்களின் மூலம் வெளியாகிறது. இவை உண்மையில் ஆத்மிகமானவையே; மனித சமயம் என்ற ஒரு பெருந் தருமத்தில் இவை எல்லாவற்றையுமே பொருத்திப் பார்க்கவேண்டும். மனிதன் மகத்தான சிந்தனை, செயல், கற்பனை, என்றும் அழியாத அருங்கலைச் சின்னங்கள் இவைகளின் மூலம் நிறைவான (பரம்)பொருளை அடைய இடைவிடாமல் முயல்வதையும், ஆத்மிக உயர்வை நாடி அவன் நிற்பதையுமே இது காட்டுகிறது.

ஆதி ரோமாபுரியின் சிதிலத்தைப் பார்த்திருக்கிறேன். மகத்தான ஒன்றை நாடி மனிதன் எடுத்துக்கொண்ட ஒரு முயற்சியின் சின்னந்தான் அது. அதைப் பார்க்கும்போது எண்ணாத எண்ணமெல்லாம் மனத்தில் தோன்றுகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? 'பெருமை மிகுந்த ரோமாபுரி சாம்ராஜ்யம் கண்ட ஒரு கனவில், மக்கள் பரந்த மனித சமூகத்தின் லட்சியத்தை, ஆற்றல் பொருந்திய தம் கற்பனை மூலம் வெளிப்படுத்தி, அதிலேயே ஓர் இன்பம் கண்டார்கள்' என்பதுதானே! ரோமாபுரிப் பேரரசு என்றால் என்ன? மக்கள் தொகை பெருகிவிட்டதால் வேறு எங்காவது போய்க் குடியேற வேண்டும் என்ற எண்ணத்தாலோ, வாணிகத்தைப் பெருக்கி லாபம் பெற இடம் உண்டு என்பதாலோ மட்டும் ஏற்பட்டதன்று அது; ரோமாபுரி

யின் தனிப்பெருமையை நேரில் கண்டறிவதற்குரிய மகத்தான சின்னம் அல்லது அடையாளமாகவும் அது விளங்கியது. உலக மக்கள் சமூகம், 'லட்சிய புருஷன் வாழும் இடம் இன்னபடி இருக்கவேண்டும்' என இத் தகைய ஒரு கனவு கண்டது. 'உண்மையில் மனிதன் என்பவன் யார்?' - இது என்றென்றும் இருந்துவரும் ஒரு கேள்வி. இதற்கு ஒரு பதில் அளிக்க ரோமாபுரி எடுத்துக் கொண்ட பெருமுயற்சி என்றே இதைச் சொல்லலாம். இந்த மாதிரி அரிய முயற்சி எதுவாக இருந்தாலும், அதை மதம் என்ற துறையைச் சேர்ந்தது என்றே கொள்ள வேண்டும். இது உண்மையில் தனிப்பட்ட ஒரு மக்கள் சமூகத்துக்குரிய முயற்சிமட்டும் அன்று; உலக மக்கள் சமூகம் முழுவதுக்குமே உரியது. ஒன்று வேண்டு மானல் சொல்லலாம்: மனித சரித்திரத்தில் இடம் பெறும்படி ரோமாபுரி அரும்பாடு பட்டது; அதன் முயற்சி - மனிதன் உண்மையில் யார் என்ற பிரச்னைக்கு அது அளித்த பதில் - மிகச் சிறந்தது என்று சொல்ல முடியாவிட்டாலும், 'பெருமை பொருந்த விளங்குவதே இன்பம் (பூமைவ ஸுகம்)' என்று சொல்லக்கூடிய அற் புதமான சக்தியின் பெருக்கை - அது காட்டுகிறது.

ரோமாபுரிப் பேரரசு துண்டு துண்டாகிச் சீர்குலைந் தாலும், மனிதன் வாழும் இந்த உலகில் ஒரு பெரும் பரப்பு முழுவதும் அவனுடைய உயர்வை நிலைநாட்டும் உறுதியான நம்பிக்கை மட்டும் - ரோமாபுரியின் பண் பாடு மட்டும் - இன்னும் இருந்துவருகிறது. இதுதான் ரோமாபுரியின் உண்மையான மதம். அதன் தெய்வக் கொள்கைகள், மத நூல்கள் முதலியவை காட்டும் நெறியில் இது ஓரளவு மங்கலாகவே காணப்படு கிறது. ரோம் மக்கள் தம் உணர்ச்சியை வெளியிடும் பொழுதுபோக்குகளில் மட்டுந்தான் இது தந்த ஊக்கத் தைக் காண முடிந்தது; ஆத்மிகமான விஷயங்களுக்கு இது ஊக்கம் ஏதும் அளிக்கவில்லை. அதன் தெய்வக் கொள்கை, ரோமாபுரியின் தனிப் பண்புக்கு ஏற்றபடி

அவ்வளவு உயர்வாக அமையவில்லை. ரோமாபுரியின் மதம், அது அன்று; நிலைத்து நிற்கும் மனிதப்பண்பை வெளியிடுவதுதான் அது: ஆனால் அதன் தெய்வக் கொள்கைகள் இதற்கு மாறாக இருந்தன. ஆகவே, மக்கள் சமூகத்தின் மதத்தை அதன தன் தெய்வங்களைக் கொண்டு ஆராயக் கூடாது. இன்னல், இறப்பு யாவற்றையும் எதிர்த்துக் கம்பீரமாக விளங்கும் நித்தியபுருஷனைக் கொண்டுதான் அதை உணரவேண்டும்.

உயிர்கள் தோன்றி, மங்கலாக இருந்த நனவுப் படலம், 'தான்' என்ற உணர்வாகப் பரிணமித்தது. உடனே உலக சரித்திரமும் பரபரவென்று முன்னேறியது; தான் என்ற பிரக்ஞை காரணமாக 'நான் யார்?' என்று மனிதன் அரும்பாடு பட்டு முயன்று கண்ட அநுபவந்தான் ஏற்பட்டது. மனிதன் மிருகங்களைப்போல், கிடைத்த தைக் கொண்டு திருப்தியோ மகிழ்ச்சியோ அடைந்து விடுவதில்லை; மிருகம் அதன் உடல் தேவையைப் பொறுத்தவரை ஓரளவு வெற்றி கண்டுவிட்டது; இதோடு திருப்தி அடைவது அதன் இயல்பு. முதலை தன் சூழ்நிலையைப் பொறுத்தமட்டிலும், தன் இயல்பின்படி நடந்துகொள்ளத் தடை ஏதும் இராத வரையில், இளித்துக்கொண்டு நிம்மதியாகவே வளர்ந்து வருகிறது; அதற்கு ஒரு குறையும் இல்லை. இதிலிருந்து மனிதனும் தான் யார் என்ற உண்மையை உணர மனிதனைப்போல் நடந்தாகவேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அவனோ, "மனிதனைப்போல் இருப்பதென்றால் என்ன? நான் யார்?" என்று புரியாமல் திகைக்கிறான். புலிக்கு அதன் சொந்த இயல்பு இன்னதென உணர்ந்து கொள்ள முடிகிறதா? அதன் விருப்பம்போல் உடலில் விசேஷ நிறம் அமையும்படி செய்துகொள்ள அதனால் தான் முடியுமா!

ஆனால் மனிதனோ தன் சொந்த இயல்பு அல்லது சுபாவத்தைப்பற்றிப் பல நூற்றாண்டுகளாக ஆராய்ந்து வருகிறான். அப்படியும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை.

தனக்கு இயல்பான போக்கையும் மீறி விரிவான பல மதக் கொள்கைகளை அமைத்துக்கொள்கிறுன்; தான் இப் போது இருக்கும் நிலே உண்மையானதன்று, அதை விடப் பின்னும் உயர்ந்தவன் என்ற அற்புதத்தைக் கண் டறியத்தான் இப்படியெல்லாம் முயன்று பார்க்கிருன். இதில் சிறப்பு என்னவென்ருல், தன்னை நன்கு உணர் வதற்காகத் தன்னுடைய மதக்கொள்கைகளில் தன்னை யும் விட உண்மையான ஜீவன் ஒன்று உண்டு, அதோடு தனக்குச் சம்பந்தம் உண்டு என்று கற்பனையில் காண முயலுகிருன். இந்த மதங்களெல்லாம் கொள்கை விளக் கங்களில் மாறுபட்டாலும் இவைகளின் போக்கு மொத் தத்தில் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இந்தத் தரும மார்க்கங்களின்மூலம் மனிதர்கள் தாங்கள் சிறந்த தென்று மதிக்கும் ஒரு பொருளைத் தங்களைப் போலச் சிறப்பமைந்த ஒரு தெய்விக உருவத்தில் கண்டு உணரப் பார்க்கிருர்கள். விஞ்ஞான உணர்வு மிகுதியாகவுள்ள மனமோ இதை ஏற்பதில்லே; எள்ளி வெறுக்கிறது. ஆனல் தருமம் என்பது எங்கும் பரவியமைந்த ஒரு பொருள்தான் என்ருே, தனக்கென ஒரு குணம் இல் லாத ஒன்றுதான் என்ருே சொல்வதற்கில்லே. மனித னிடம் அமைந்த பிரம்மம் அல்லது பரம்பொருளை உண ரும்போது மனமும் தன்னைத்தானே அறிந்துகொள் கிறது; இல்லாவிட்டால், மனம் என்ற ஒன்று இருக்க வேண்டிய தேவையே இல்லே.

மனித இயல்பிலே இப்படி மனம் என்ற ஒன்று பொருந்தியிருப்பதால், நம் மதத்தில் குருட்டுத்தனமான சில கருத்துக்கள் தோன்றி அதனல் அடிக்கடி பிழைகள் நேர இடம் உண்டாகிறது. ஒழுக்கத்துக்கு முரணன - நம் அழகுணர்ச்சி வெறுக்கக் கூடிய - சில செயல்கள் நேருகின்றன. உண்மையை அல்லது பரம்பொருளை இந்த மாதிரி வழியில் அறிய முயற்சி செய்வது மாருன பலனையே தரும்; இந்த முயற்சியெல்லாம் சத்தியத் தையே திரித்துவிடுவதாக முடியும். சமூக இயல்,

பொருளாதாரம், அரசியல் இவைகளில் ஏற்படும் தவறு களைப் போலவேதான் இவையும்; இவைகளோடு ஈடு கொடுத்து இவைகளை வென்றாக வேண்டும். மனிதன் இதுதான் சம்பூர்ணம் என்று ஒரு லட்சியத்தைக் கைக் கொண்டிருக்கிறான். அதன்படிதான் இந்தத் தரும மார்க் கங்களின் உண்மையை ஆராய வேண்டும். மனிதசித்தம் என்ற நீதிசபை, 'உண்மைதான்' என்று உறுதியாக ஏற் காத எதுவும் உண்மை ஆகாது. அதிலும், வலுக்கட் டாயமாக விதிக்கும் எதுவும் நிச்சயமாக உண்மை ஆகாது. கருத்துக்களிலே பெரும் புரட்சி ஏற்பட்டதன் விளைவாகத்தான் மகத்தான தரும மார்க்கங்கள் தோன்றி யிருக்கின்றன; இதனாலேயே நம் போக்கிலும் அடிப் படையான மாறுதல்கள் நேர்ந்திருக்கின்றன. இந்தத் தருமமார்க்கங்கள் தோன்றியதற்குக் காரணம், இதற்கு முந்தி இருந்த பழங்கொள்கைகளில் சடங்குகளே முக் கியமாகவும், கண்டிப்பான கட்டுத் திட்டங்களுக்கே அதிகப் பெருமை இருந்து அவை மனிதப் பண்பு அற் றும் இருந்ததுதான்.

முன்னே நான் சொன்னதுபோல் இந்தக் கொள்கை கள் வெறும் வலிமையையே நோக்கமாகக் கொண் டவை. இவைகளால் ஒரு வகையில் நமக்கு நன்மை இருந்தது. சத்தியத்தை உணர்வதன் மூலம் நாம் சீரான நிலையை அடைய இவை உதவாவிட்டாலும், நம் உடைமைகள் விருத்தியாகித் தெய்வத்தை மந்திரசக்தி யால் அடக்கி வைத்து மனிதனுடைய வலிமை ஓங்குவ தற்கு இவை துணை புரிந்தன.

இப்படிச் சொல்வது நியாயமற்றதாக இருக்கலாம்; முன்னோர்களைப் பழிப்பதாகும் என்றும் தோன்றலாம். பலனைக் கருதி மட்டுமே சக்தி அல்லது வலிமையை அவர்கள் வழிபடவில்லை; என்றாலும், 'அந்தப் பெருஞ் சக்திக்கும் மனித சக்திக்கும் சம்பந்தம் உண்டு; அதனால் நம் சக்தி பெருகி நாம் நினைத்தது நிறைவேறும்; ஆகவே,

இதுவே உண்மை' என்று அவர்கள் கருதி வந்தார்கள். 'மனிதனோடு சம்பந்தம் இல்லாத எதுவும் வெறும் பேதைமை; பிரகிருதி அல்லது இயற்கையை ஆட்டி வைக்கும் சக்தி மனோசக்திதான். இதுதான் எப்படியோ தட்டித் தடுமாறிச் சரியான வழியைக் காட்டி நமக்குப் பலன் தருகிறது' என்று அவர்களுக்கு இயல்பாகவே ஓர் எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி அவர்கள் தங்களையும்விடக் குணவிசேஷத்தில் தாழ்ந்த ஒன்றை - மனமோ, இதயமோ, நோக்கமோ இல்லாத வெறும் சூனியத்தை - வழிபட்டிருந்தால் அதைவிடத் தங்களுக்குப் பலவீனம் வேறு இல்லை என்றே அவர்களுக்குப் பட்டிருக்கும்.

# 4. யோகம்

பிழைப்புக்கு வழி ஏற்பட்டு அதைப்பற்றிய கவலே, உழைப்பு யாவும் குறைந்ததும், மனிதனுக்கு ஆத்மிகத் துறையில் ஈடுபட - அதாவது, தான் யார் என்ற ரகசியத்தை ஆராய - வாய்ப்புக் கிட்டியது. 'உலகம் எங்கும் பரந்து விளங்கும் மனித சமூகத்தோடு நாமும் தொடர்புடையவர்களே; உலகமே ஒன்று என்பதை உணர்ந்தால்தான் நாம் பரிபூரண மனிதராகிறோம்' என்ற உண்மையை அவன் உணரத் தொடங்கினன். 'எங்கும் பரவிய வலிமையே மதத்தின் அடிப்படை' என்று அவன் எண்ணி வந்தது போய் அவனுடைய சிந்தனே பின்னும் உயர்ந்த நிலேயை எட்டியது. பரம்பொருளேப்பற்றிய உண்மையை அவன் ஆராயலானுன். இதிலிருந்து, எல்லேயற்ற ஒன்றை உணரும்போது நம் சிந்தனே குறுகிய வழியில் சென்றுவிட்டதாக எண்ணி விடக்கூடாது.

எல்லேயற்ற பொருள் இன்னது என்று ஆராயும்போது பொருள்களே முடிவில்லாமல் பெருக்கிக் கொண்டே போவது எதிர் முறையான சிந்தனேயின் லட்சணம். எல்லேயற்ற ஒன்றை அறிவதற்கு மாருகக் கால வரம்பு இல்லாமல் அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறோம் என்பதுதான் இதன் கருத்து. கணித சாஸ்திரம், உலகம் ஓர் எல்லேக்கு உட்பட்ட பிரபஞ்சத்தில் அடங்கியிருப்பதாக முடிவு கட்டியிருக்கிறது என்கிருர்கள். இதஞல் நாம் ஒன்றும் மனங் குன்றிப் போய்விடவில்லே; நாம் ஒன்றையும் இழக்கவும் இல்லே. 'ஒரு நேர்க்கோடு அப்படியே (நேராகவே) இருப்பதில்லே. வளேந்து, தொடங்கிய இடத்துக்கே மீண்டும் வந்து சேரும்' என்ருலும், 'இவ்வளவுதாஞ?' என்று பிரபஞ்சத்தைப்பற்றி மட்டமாக எண்ண வேண்டியதில்லே. 'பிரபஞ்சம் என்பது ஓர் அண்டம் அல்லது

முட்டை வடிவம் உள்ளது' என்று நம் இந்து தரும சாஸ்திரங்கள் வர்ணிக்கின்றன. முட்டையின்மேல் ஓடு மூடியிருப்பதுபோல் மனித மனமும் ஓர் அளவுக்கு உட்பட்டே கற்பனை செய்ய முடியும் என்பதையே இது காட்டுகிறது. நம் சாஸ்திரங்கள் இன்னும் சில விஷயங்களையும் சொல்லுகின்றன: 'காலம் என்பதும் நீடித்துச் செல்வதில்லை. நம் உலகமும் யுகத்துக்கு யுகம் அழிந்து தோன்றுவதுதான்' என்கின்றன. அதாவது, அனந்தமான காலமும் பரப்பும் ஆரம்பித்த இடத்தையே முடிவாகக் கொண்டு ஓயாமல் சுழலும் வட்டம் போன்றவை என்றுதான் சொல்கின்றன.

ஆனால் இத்தகைய எல்லையற்ற ஒன்று என்ன என்பதை அத்வைத சித்தாந்தத்தில் காணலாம்; அதாவது, பரிபூரண ஐக்கியத்தின்மூலம் அதை உணரலாம். வெளியே காணும் புலன்களால் பல பொருள்களைக் கண்டு உணர்வதுபோன்ற ஓர் உணர்வன்று இது. தாமரைப் பூவில் அடங்கிய இதழ் முதலிய எல்லாப் பகுதிகளையும்விட அதன் முழு அழகே சிறந்தது; அது போலவே நம் உள்ளமும் களங்கமற்று, நிறைவுபெற்றுப் பொங்கி வழிவது போன்ற ஒரு நிலையில் இருந்து, எல்லாவற்றையும் அறிவதுதான் அத்வைதம். அளவுப் பெருக்கத்தால் எல்லையற்ற பரம்பொருளைக் கண்டு உணர்ந்துவிட முடியாது. பரிபூரண ஐக்கிய பாவம் அல்லது ஒருமையுணர்வினுல்தான் அத்தகைய அநுபூதி உண்டாகும். நம் மகிழ்ச்சி, அன்பு இவைகளின் மூலம் அதை அறியலாம். ஏன், அத்வைதம் என்பதே ஆனந்தந்தான்; எல்லையற்ற அந்தப் பொருளே முடிவற்ற ஆனந்தந்தான். ஆத்மிக உணர்ச்சி குன்றியவர்களுக்கு இந்த உடல் சம்பந்தமான வசதிகள் எல்லாம்- மதிப்புயர்ந்த உடைமைகள் எல்லாம் - கிட்டினுலே போதும்; அவர்கள் விருப்பம் அதோடு நிறைவேறி விடுகிறது. எல்லையற்ற ஆகாயவெளியைக் கையில் பிடிப்பது போன்றதுதான் இது! இப்படிப் பெரும் பொருள் ஒன்றை அவர்கள் நாடுகிறுர்களே, அதை மகத்தான

லட்சியம் என்பதற்கில்லை. அளவில் பெரிதான ஒரு பொருளிடம் அவர்கள் கொண்ட ஆவல் என்றே அதைச் சொல்லவேண்டும். நாம் உடைமைகளை அளவிலோ தொகையிலோ பெருக்கிக்கொள்வது ஆத்மிக ஞானத்தின் தன்மை ஆகாது. அனந்தமான சத்தியம் ஐக்கிய பாவத்தில்தான் அடங்கியிருக்கிறது. பொருள்களுக்கு ஒன்றோடு ஒன்று உள்ள ஆழ்ந்த தொடர்பை உணர்வதால் இதை அறிகிறோம். இப்படி அநுபவத்தில் கண்ட சத்தியம் எங்கோ எல்லையற்ற வெளியில் இருக்கவில்லை; உள்ளுணர்வின் மூலம் அதை அறிய முடியும்.

* 'அளவற்றதும் அழிவற்றதும் ஒன்றே', † 'பிறவியற்ற ஆத்மன் ஆகாயவெளியையும் கடந்தது;' அதுவே 'புருஷன்.'

பாரத நாட்டின் சமயத்தில் இத்தகைய சிறப்பான மன இயல்பையே 'யோகம்' என்கிறார்கள். இணைவது அல்லது ஒன்றியிருப்பது என்று இதற்குப் பொருள். யோகத்திலுள்ள விசேஷம் இதுதான்: 'அது வேண்டும்', 'இது வேண்டும்' என்று ஒன்றைப் பெற விரும்புவதன்று; எப்படி இருக்கவேண்டும் என்பதே யோகம். உண்மையை நாம் அடையவேண்டும் என்றால், 'அது வேறு; நாம் வேறு' என்பதை ஒப்புக்கொண்டதாகும்; ஆனால் உண்மையாக இருக்க விரும்புவதென்றால், நாமே சத்தியத்தோடு இணைந்துவிட்டோம் என்பதுதான் பொருள். ஆண்டவனுடன் எவ்வாறு உறவு கொள்ளவேண்டும் என்பதைச் சில அறநெறிகள் விளக்குகின்றன; அவ்வாறு உண்மையிலேயே ஆண்டவனோடு உறவு கொண்டால் பயன் அடைவது உறுதி என்று அவை கூறுகின்றன. இந்த மாதிரி கண்கண்ட பலன் என்றால் அதற்கு மதிப்புத் தானே இருக்கும்! குறிப்பிட்ட தரும மார்க்கத்தைக் கடைப்பிடித்து நடப்பதற்கு இப்படி ஏதோ ஒரு காரணம்

---

*ஏகதைவாநுத்ரஷ்டவ்யம் ஏதத் அப்ரமேயம் த்ருவம்.
†பர ஆகாசாத் அஜ ஆத்மா.

இருக்கிறதென்று இதிலிருந்து தெரிகிறது. இந்தியாவிலும் இந்தமாதிரி அநேக மதங்கள் உண்டு. ஆனால் இன்னும் உயர்ந்த நிலையை அடைந்த மகான்களின் லட்சியம், நாராயணன் அல்லது பரமபுருஷன் என்னும் தெய்விக உண்மையோடு ஒன்றிவிடுவதுதான்.

இந்தமாதிரி ஒன்றுவது நம் மனத்தின்மூலம் கைகூடாது. மனம் என்பது சிக்கனத்தைக் கடைப்பிடிக்க மனித உடலில் பொருந்திய ஒரு துறையே. அது நம் உள்ளுணர்வைத் தன் சிந்தனை எட்டும் அளவுக்கு, இந்த விசித்திரமான உலகத்தோடு உறவுகொள்ள இசைகிறது. ஆனால் யோகத்தின் நோக்கம், மனம் வகுத்து வைத்த எல்லையையும் கடந்து செல்வதுதான். இப்படி மனம் விதித்த தளையை மீறும் சந்தர்ப்பங்களில்தான் நம் அந்தராத்மா ஆனந்தம் நிறைந்து நிற்கிறது. இத்தகைய ஒரு சுதந்தரம் கிட்டும்போது உண்மையே உருவான பரம்பொருளை அநுபவமூலம் உணருகிறோம்; அதுவே நம் லட்சியத்தின் முடிவு; அதுவே ஆனந்தம்.

'எங்கும் பரவிய ஒளியே எல்லையற்ற பரம்பொருள்' என்று ஒரு சமயம் மனிதனுடைய அறிவுக் கண்ணுக்குப் புலப்பட்டது. ஆகவே, அவன் சூரியனை வழிபடலானான்; தீ வளர்த்து அதற்கு அவி முதலியன படைத்து வணங்கினான். பிறகு என்றும் நிலவும் பிராணன் அல்லது உயிரே அனந்தமானது என உணர்ந்து, '**யத் கிஞ்ச யதிதம் ஸர்வம் ப்ராண ஏஜதி நிஸ்ஸ்ருதம்** - ஜீவன்கள் எல்லாம் அந்தப் பிராணனிடமிருந்து வந்தவை. அதனிடமே இருந்து விளங்குபவை' என்றான் மனிதன். மூலகாரணமாகவும் கட்டுப்படுத்தப் பெற்ற திட சித்தமாகவும் தான் புரியும் செயல்களுக்கு ஆதியாகவும் இந்தப் பிராணன் விளங்குவதையும், இந்தத் தத்துவம் தன்னிடமே இருப்பதையும் அவன் உறுதியாக உணர்ந்தான். 'ஊமையாய் உயிரற்றுக் கிடக்கும் பொருளிடம் நித்தியசத்தியம் அல்லது பரம்பொருளின் குணவிசேஷத்தைக் காண முடியாது; பிராணன் மூலமே அதை உணர முடியும்' என்றான்.

பிறகு தன்னைத் தானே ஆழ்ந்து உணர்ந்து, '**ரஸோ வை ஸ:** - அன்பே அந்தப் பரம்பொருள் (சிவம்); நித்தியானந்தப் பொருள் அதுவே' என்றான். முடிவற்ற அந்தப் பொருளை உணருவதுதான் மனித தருமம். எதனுடனும் ஒன்றுமல் நிற்கும் '**த்யௌ:**' அல்லது பரவெளியிலிருந்தே அவனுடைய ஆராய்ச்சியைத் தொடங்கினான். அதிலிருந்துதானே ஒளி தோன்றியது? பிறகு பிராணனைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டான். காலப்போக்கில் தானாகவே தோன்றும் சக்திக்கு அறிகுறியாக விளங்குவது அந்த உயிர்தானே? பின்பு '(நித்திய)புருஷன்' என்ற கருத்தில் வந்து முடிந்தது அவனுடைய ஆராய்ச்சி. அந்தப் 'புருஷ'னிடமே காலத்தையும் கடந்து விளங்கும் அன்பு நிலைபெற்றிருக்கிறது. '**தம் வேத்யம் புருஷம் வேத** - அறியப்படவேண்டியவன் அவனே!' என்று கூறி, '**யதா மா வோ ம்ருத்யு: பரிவ்யதா**:- சாவினால் உனக்குத் துக்கம் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் இப்படி அறியவேண்டும்' என்று உணர்த்தியது இந்தத் தருமம். ஏனென்றால், இந்தப் புருஷன் ஒருவனே என்றும் இறவாதவன் (அமரன்); இவனிடமே தனிப்பட்ட ஆத்மா (ஜீவாத்மா) நித்திய சத்தியத்தை உணரமுடியும். இவனைப்பற்றியே, '**ஏஷ தேவோ விச்வ கர்மா மஹாத்மா ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:**- இவனே பரமாத்மன்; நித்திய ஜீவன்; உலகம் முழுவதும் செயல் புரிகிறவன்; இவனே எல்லா மக்களின் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் மகாத்மா' என்று சொல்லியிருக்கிறது. '**ய ஏதத் விதுர் அம்ருதாஸ் தே பவந்தி** - இவனை அறிந்தவர்கள் இறப்பின் எல்லையைக் கடந்தவர்கள் ஆவார்கள்.' அதாவது, 'காலத்தையெல்லாம் கடந்து நிற்கும் பூரண சத்தியத்தில் இவன் இருப்பதை உணர்வார்கள்!' இப்படி உலகம் எங்கும் செயல் புரியும் நித்தியஜீவனுடன் - எல்லாருடைய உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் பரமாத்மனுடன் - ஐக்கியமாவது என்பது சாமானியமான காரியம் அன்று. இவ்

விதம் இணைவதற்கு நாம் நம் காரியங்களில் சுயநலத்தை விட்டு 'விசுவகர்ம'னாக - உலகத்திலுள்ள எல்லாருக்கும் தொண்டு செய்பவராக - விளங்கவேண்டும். 'எல்லாருக்கும்' என்று நான் குறிப்பிடுவது, தனித்தனியாகக் காணும் எண்ணற்ற மனிதகோடிகளை அல்ல; சிறிய தொண்டாக இருந்தாலும் அதனால் நன்மை ஏற்படுமாயின், அதை உலகம் முழுவதற்கும் புரிவதன் மூலமே 'விசுவகர்மன்' அல்லது உலகத் தொண்டனை உணரமுடியும். இந்த மகாத்மனுடன் ஒன்றுபட்டு விளங்குவதற்கு நாமும் பரந்த இருதயம் படைத்தவர்களாய் (உறவினரோடு ஒன்றியிருப்பதுமட்டுமே உலகத்தோடு ஒன்றி நிற்பதாகாது), 'எல்லா உயிரும் ஒன்றே' என்பதை உணரவேண்டும். இதனாலேயே 'பிரம்ம விஹாரம்' என்ற ஒரு நித்திய நிலையைக் குறித்துப் புத்தர் அருளிய உபதேசத்தின் உண்மையை உணரமுடியும்.

''ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொள்ளாதீர்கள். எங்கே இருந்தாலும் சரி, எவரையும் வெறுக்காதீர்கள். கோபம் காரணமாக மன, மொழி, மெய்களால் எவருக்கும் தீங்கு விளைக்காதீர்கள். தன் உயிரைக் கொடுத்து ஒரு தாய் தன் ஒரே மகனைக் காப்பதுபோல் எல்லா உயிர்களிடமும் அளவற்ற அன்பு செலுத்துங்கள்.

''உங்களுக்கு மேலே, உங்களுக்குக் கீழே, உங்களைச் சுற்றி எல்லாத் திசைகளிலும், உலகம் முழுமைக்கும் இரக்கமும், தங்கு தடையில்லாத அன்புடைய சிந்தையும் கொண்டு வாழுங்கள். பகைமை பாராட்டாதீர்கள். எவருக்கும் தீங்கு நினையாதீர்கள்.

"நிற்கும்போதும், நடக்கும்போதும், அமர்ந்திருக்கும்போதும், படுத்திருக்கும்போதும், உறக்கத்தில் மூழ்கும்வரை இதே தியானத்தில் ஈடுபட்டிருங்கள்; இதுதான் பிரம்ம விஹாரம் (நித்திய வாழ்வு).''

இதிலிருந்து பரம்பொருளைப்பற்றிப் புத்தருடைய கருத்து, 'அளவில்லாத பிரபஞ்சச் செயலில் ஈடுபட்ட ஒரு சக்தி அன்று; மனிதனிடமே அமைந்து நாம் தெளி

வாக உணரும் லட்சியங்களான அறமும் அன்புமே' என்று தெரிகிறது. ஈகை அறம் அன்பு ஆகியவற்றுடன் வாழ்ந்து விண்மீன்களிடையிலோ, பாறையிலோ நாம் பரம்பொருள் உண்மையை உணரவில்லை; மனிதனிடமே அது அமைந்திருக்கிறது என அறிந்துகொள்கிறோம். 'நிர்வாண நிலையே உன்னதமான லட்சியம்' என்பது புத்தர் அருளிய வாக்கு. அந்த நிலையின் உண்மை இயல்பை உணரவேண்டுமானால் அதை அடையும் மார்க்கத்தை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். தீய எண்ணங்களையும் செயல்களையும் நீக்கிவிடுவது மட்டுமன்று அவ்வழி; அன்பிற்கு உள்ள வரம்பை அகற்றுவதும் கூடத்தான். சத்தியத்திடையே அகந்தையை அடக்கி அடிபணிய வைப்பதே அந்த வழியாகும். அதுவே அன்பு; எவர்களிடம் இரக்கமுற்றுத் தொண்டு புரிய விரும்புகிறோமோ அவர்களையெல்லாம் இணைப்பது அன்பே.

அழியாமையின் மூலகாரணம் என்ன என்று புத்தரிடம் சிலர் கேட்டனர். அவ்வாறு கேட்பது பயனற்றது, பொருத்தமற்றது என்று அவர் திடமாகக் கூறினார். அது மனித வரம்புக்கு அப்பாற்பட்டது என்று பொருள்படாதா? உலகத் தத்துவம் அல்லது விஞ்ஞானம் என்ற துறையில் அந்தக் கேள்வியை நியாயமாகக் கேட்கலாம். மனித தருமத்துக்கும், மனிதனின் அகவியல்புக்கும், அந்தக் கேள்விக்கும் ஒரு தொடர்புமில்லை. அன்பு தன் நிறைவைக் காட்டுவதும், எல்லா வகைத் தியாகமும், அழிவில்லாப் பயன் எய்துவதும் மனித தருமத்திலும் அகவியல்பிலும் காணப்படுவனவே. சூரியவொளி இருக்கும்போது, கைவிளக்கை அணைத்துவிடுவதால் எத்தகைய நஷ்டமும் இல்லை. அந்தப் பரமகுருவின் உரைகளைக் கேட்டவர்கள், அவருடைய தத்துவங்களை அறிந்துகொண்டார்களா? இல்லை; பரம்பொருளின் உண்மை அவருடைய உபதேசங்களில், உயிர் ததும்பும் மொழியில் வெளிப்படுவதையே கண்டார்கள்.

மகத்தான தரும மார்க்கங்கள் எல்லாம் சில மக புருஷர்களிடமிருந்துதான் தோன்றின. அவர்கள் தம் வாழ்வில் ஓர் உண்மையைக் கடைப்பிடித்து நடந்தார்கள். அந்த உண்மை அகில பிரபஞ்சத்தைப்பற்றியதென்றோ, தீய நெறியைப்பற்றியதென்றோ சொல்வதற்கில்லை. மனிதப் பண்பும் நல்லறமும் கொண்டிருப்பதுதான் உண்மையான வாழ்வு என்பதை அவர்கள் காட்டினார்கள்; அசுர குணம் என்னும் மாயாசக்தியினிடமிருந்து தருமத்தை மீட்டார்கள். மனித சமூகத்தின் அந்தரங்கத்திலேயே தருமம் அமைந்திருக்கிறது என்று கண்டார்கள். தனிப்பட்ட ஒருவன் மட்டுமே தன் அதிருஷ்ட வசத்தால் இஷ்டசித்தி பெற்று மெய்ஞ்ஞானியாவதைவிட உலகத்தில் எல்லாருமே பரிபூரணராக விளங்கவேண்டும் என்பதே அவர்களுடைய லட்சியம்.

தனிப்பட்ட ஓர் ஆத்மா பேரானந்தத்தில் திளைப்பதற்காக ஏற்பட்ட தருமம் அன்று அது; எல்லா இனத்தாரும் அந்தப் பேரின்ப நிலையை அடையவேண்டும் என்பதற்கே அது தோன்றியது. பூரண புருஷனின் தூதராக அந்த மகான்கள் எல்லா நாட்டு மக்களிடமும் தோன்றினார்கள். பரமபுருஷனோடு ஐக்கியமாவதில்தான் முக்தி கிட்டும் என்று போதித்தார்கள். அவர்கள் தங்கள் காலத்துக்கும் தங்கள் நாட்டின் பழைய பண்புக்கும் ஏற்றபடி கடவுளைப்பற்றிக் கொண்ட கொள்கைகள் எப்படி இருந்தாலும் சரி, அவர்களுடைய வாக்கும் வாழ்வும், 'மனிதன், தந்தை, நண்பன், அன்பன் இப்படியெல்லாம் பரவி விளங்கும் அனந்தமான ஒரு பொருள் உண்டு. மனித சமூகம் முழுவதற்கும் தொண்டு புரிவதால் அந்தப் பரமாத்மனின் ஆற்றலை உணரலாம்' என்ற ஆழ்ந்த கருத்தை வெளியிட்டன. மனிதனிடம் அமைந்த தெய்வத்தன்மை பூரண அன்பையே லட்சியமாகக்கொண்டது. ஆகவே, அனைவருக்கும் தொண்டு செய்து அவரிடம் அன்பு பாராட்டினால்தான் இது நிறைவேறும். இந்தியாவில் ஆதிகாலத்தில் காடுகளிலே வாழ்ந்த

முனிவர்களின் உள்ளத்திலும் இந்தக் கேள்விதான் எழுந்தது: **'கஸ்மை தேவாய ஹவிஷா விதேம** - எந்தத் தெய்வத்துக்கு நாம் அவி படைக்கவேண்டும்?' இன்னும் இதே கேள்வியைத்தான் நாம் கேட்டுக்கொண் டிருக்கிறோம். இதைக் கண்டறிய, ஆழ்ந்த அன்பின் மூலமும், பழுத்த ஞானத்தின் முதிர்ச்சி மூலமும் அந்தப் புருஷன் யார் என உணரவேண்டும். இரக்கத்தின் மூலம் மட்டு மன்றி விஞ்ஞானத்தின் மூலமாகவும், சிருஷ்டி இன்பத்தின் மூலமாகவும், வீரவாழ்வு வாழ்ந்து துன்பங்களை அநுபவிப்ப தன் மூலமாகவும் இதை உணரவேண்டும். **'தேன த்யக் தேந புஞ்ஜீதா**:- தியாகத்தினுல் அவனை உணர்ந்து இன்பம் அடைவாயாக.' இந்தத் தியாகம் அன்பில் பிறந்தது. **'மா க்ருத**:—பிறர் பொருளைக் கவர விரும்பாதே'. ஏனென்றால், பேராசையே நம்மிடம் உள்ள மாயையில் நம்மை ஈடுபடுத்தி விடுகிறது; அதுவே தனித்து நிற்கும் 'அகம்' என்பது. அந்த அகந்தையே மனத்தைச் சத்தியத்தைவிட்டு மாறான வழியில் செலுத்திவிடுகிறது. இந்தச் சத்தியத்தையே நாம் 'பரமபுருஷன்' என்கிறோம்.

விசுவபுருஷனுடைய பண்பான சத்தியத்தை விட்டு-மதிப்பரிய உண்மைப் பொருளை விட்டு - நிலையற்ற உலகப் பொருள்களிடம் நமக்கு நாட்டம் ஏற்படும்படி செய்துவிடுகிறது நம் பேராசை அல்லது அவா; இதனுல் நம்மிடம் அமைந்த ஆத்மிக சிந்தனையின் ஒழுக்கு, பின்னோக்கிச் செல்கிறது. இப்படி ஏற்படும் பெருங் குறையை நிரப்ப நாம் ஓயாமல் செல்வத்தைக் குவிக்கப் பார்க்கிறோம். இவ்வாறு குவியும் சக்தி செல்வத்துக்கு இருந்தாலும் இரண்டற இணைக்கவோ, புதிதாகப் படைக்கவோ அதனுல் முடியாது. பளபளவென்று மின்னும் செருகு மணலுக்குக் கீழே அபாயமான பெரும் பள்ளம் ஒன்று மறைந்திருக்கிறது. அந்த மணலின் மேல்கனம் தாங்காமல் அதற்கடியில் இருக்கும் மணல் திடீரென்று சரிவதால் ஆபத்து நேருகிறது. அது போலவே பொருள் என்னும் மேல்வாரியான செருகு

மணலின் கனமே நாளடைவில் நாம் கண்ணயர்கையில் எதிர்பாராதபடி நம்மைப் படுகுழியில் ஆழ்த்திவிடுகிறது.

உலக இயல்பின்படி நாம் எல்லாப் பாதுகாப் போடும் வாழ்வதில் தீங்கு ஒன்றும் இல்லை; ஆனால் மனித சமூகத்தில் மனிதப்பண்பு மறைந்துவிடுகிறதே, அது தான் ஆபத்து. ஆக்க வழியில் மனிதனது உள்ளம் ஈடு பட்டுச் செயல் புரியும்போது, தன்னைச் சுற்றிலும் விசுவ புருஷன் பரந்து விளங்குவதையும், சொந்த வாழ்விலும் அன்பு செலுத்துவதிலும் மனிதப் பண்பு அமைந்திருப் பதையும் அவன் உணர்ந்துகொள்கிறான். ஆனால் அளவுக்கு மிஞ்சி ஆசையைப் பெருக்கிக்கொள்ளும்போது மனிதன் தனக்குரிய பண்பையே குலைத்துப் பாழாக்கிவிடுகிறான். அப்போது அவன் விரும்பும் சொர்க்க வாழ்வும் பிரம் மாண்டமான அளவுக்குப் பெருகி, அவனுடைய உள்ளத்தை வசப்படுத்திவிடுகிறது; வெறும் மாயை என்ற வகையில் ஒரு பிரபஞ்சத்தை அவன் உள்ளம் படைத்துக்கொள்கிறது. அத்தகைய உலகில் முக்திக்கு - பந்தம் அற்ற நித்தியசத்தியத்துக்கு - இடம் ஏது?

அது கொள்கை என்ற அளவில் உண்மைதான் என்றாலும், ஆகாயமே தெரியாதபடி மூடிக் கிடக்கும் பறவையின் கூண்டுபோல் ஆகிவிடுகிறது. மொத்தத்தில் நம் உலகம் பலவகைக் கொள்கைகள் அடங்கிய பறவைக் கூண்டு என்றே தோன்றும். விதையின்மேல் ஓடு மூடி அதற்குள்ளே முளை அமைந்திருப்பதுபோல் இருக் கிறது இந்த நிலை. ஆனால் இந்தப் பந்தத்துக்குள் இருந்தபடி முக்தி பெறுவது எப்படி என்று விளங்கவில்லை நமக்கு; இருந்தாலும் அந்த முக்திநிலையை நாடி மௌன மாக ஏங்கி வாழ்ந்து வருகிறோம். பேராசை பெருகி, நீடித்த இந்த ஏக்கத்தை அழுத்திவிடும்போது, முளை விடும் சக்தியை இழந்த விதையைப்போல மனித நாகரிக மும் அழிகிறது. பின் இந்த முக்தி எங்கே கிட்டும்? லட்சிய புருஷனுடைய உள்ளத்தில் விளங்கும் நித்திய சத்தியம் அல்லது பரம்பொருளின் உண்மையை உணருவதில்தான்.

## 5. தீர்க்கதரிசி

'நம் புலன்களோடும் ஆராய்ச்சி அல்லது சிந்தனை யோடும் சம்பந்தப்பட்ட இந்தப் பிரபஞ்சம் மனிதப் பிரபஞ்சமே' என்று முன்பே சொல்லியிருக்கிறேன். நேரான அநுபவ அறிவினாலும், உலகத்தோடு பொருந்தப் பழகுவதாலும், நம் பூத உடல், வாழ்வில் வலிமையும் வெற்றியும் பெற்று விளங்குகிறது. பிரபஞ்சக் காட்சி களின் ரகசியங்களை மனிதன் தன் பகுத்தறிவோடு பொருத்திப் பார்த்து அவை இயற்கை விதிகள் என்று பொதுவாக நிர்ணயித்துவிடுகிறான்.

ஆதியில், மனித வரலாற்றின் ஆரம்பத்தில் மற்றப் பிராணிகளைப் போலவே மனிதனும் உயிர் வாழ்வதற்காக வெளியுலகத்தோடு பழக வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகவே, அவனுடைய தருமமும் இந்தப் பூத உடலைப் பொறுத்தே அமைந்தது; இயற்கையில் தோன்றும் சக்தியைக் கண்டு வியப்பும் திகிலும் கொண்ட தால் உண்டானது இந்தத் தருமம். தனக்கும் தன் சுற் றத்தாருக்கும் இந்த இயற்கைச் சக்தியால் பயன் ஏற் படவேண்டுமென அவன் மந்திரம், சடங்குகள் இவை களின் மூலம் இந்தச் சக்தியை வசப்படுத்த முயன்றான். அதாவது, தன் மந்திரசக்தி மூலம் இயற்கையின் மாயா சக்தியோடு சீராக இணைந்துவிடப் பார்த்தான். இதுவே அன்று அவனுடைய தருமமாக - மதக்கொள்கையாக - இருந்து வந்தது. பிறகு அவனுக்கு ஓய்வு நேரம் கிட்டி யது. இப்படிச் சுதந்தரமாகச் சிந்தனை செய்யச் சந்தர்ப் பம் வாய்த்ததும் அவன் ஆத்ம தியானத்திலும் தன் அந்தராத்மாவின் அற்புத ரகசியத்தை அறிவதிலும் ஈடுபட்டான்; ஆத்ம தியானமே உயர்வானதென்று உணர்ந்தான். இப்படியே அவனுடைய ஆத்மா, (பரம புருஷன் என்ற) பரம்பொருளின் உண்மையைக் கண்டறிந்து நிறைவு பெற முயன்றது.

பஞ்ச பூதங்களால் ஆன இந்த உலகத்தின் இயல்பை ஆராயும்போது மனிதன் இதைப்பற்றிக் கொண்ட கருத்துக்கள் பலவிதமாக மாறி வந்திருக்கின்றன. அது போலவே மதம் என்ன என்பதைப்பற்றி ஆராயும்போது ஒன்றுக்கு ஒன்று மாறுன பல முடிவுகளுக்கு வந்திருக்கிறோம். நம் வழிபாட்டு முறையிலும் இது போன்ற மாறுதல்களைக் காணலாம்.

ஆனால் ஒன்று: ஆதியில் புறம் அல்லது வெளியுலகம், மந்திர தந்திரம் இவைகளையே முக்கியமாகக் கருதி வந்தோம். பிறகு நீதி, ஒழுக்கம், ஆத்மிக நோக்கம் இவைகளே முக்கியம் என்று கண்டோம். மனித தருமம் இப்படி ஆத்மிக வழியில் திரும்பியதை முதல்முதலாக ஜாரதுஷ்டிரர் என்ற பாரசீக மகானின் வாக்கில் காணலாம். வழக்கம்போல் அதை அடுத்து ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. பின்னுல் இதேபோல இந்தியாவிலும் ஒரு மாறுதல் நேர்ந்தது. கிருஷ்ணருடன் தொடர்புள்ள பகவத்கீதை உபதேசம் அடங்கிய இதிகாசமான மகாபாரதத்திலே இரு வேறு கொள்கைகளுக்கு இடையே நடந்த போராட்டத்தைக் காணலாம்.

பாரசீக நாட்டின் சரித்திரத்திலேயே ஜாரதுஷ்டிரர் கொண்டு வந்த இந்த மதச் சீர்திருத்தந்தான் மிகவும் முக்கியமானது. முதல்முதலாக மதம் என்பது உண்மையான நீதிநெறி என்று வகுத்தவர் அவரே; அதோடு, ‘ஒன்றே தெய்வம்’ என்ற கொள்கையையும் அவர் போதித்தார். ‘எல்லா உயிருக்கும் நன்மையை விரும்புவதே நிறைவான லட்சியம்’ என்ற உண்மையை அறிய இதுவே ஆதாரமாக இருந்தது. ஆதியில் தோன்றிய மகான்களுக்குள் ஜாரதுஷ்டிரரே, மனிதனுக்குச் சுதந்தர வழியை - நீதிநெறிப்படி நடக்கும் சுதந்தரத்தை - பொருளற்ற உபதேசங்களைக் குருட்டுத்தனமாகப் பின் பற்றுமல் இருக்கும் சுதந்தரப் போக்கை - ஒரே நிலையாக நின்று பக்தி செலுத்த முடியாதபடி தடுக்கும் பல தெய்வ வழிபாட்டை மீறும் தனி வழியை - நமக்குக் காட்டினுர்.

ஒரு சமயம் இருளின் நடுவே தோன்றிய ஒளிபோல் மனிதனுக்கு இப்படி ஒரு மெய்ஞ்ஞான ஒளி புலப்பட்டது. இன்னும் மனித சமூகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் இந்த ஒளி பரவவில்லை. சுற்றிலும் பல மந்திர தந்திரச் சடங்குகள் நடந்து வந்தும், அஞ்ஞான இருள் செறிந்து பகுத்தறியும் நோக்கம் இராத அந்த நாளிலேயே ஜாரதுஷ்டிரர், 'நீதி நெறியைக் கடைப்பிடிப்பதில்தான் சமயத்தின் உண்மைக் கருத்து அடங்கியிருக்கிறது; ஏதோ பெரிதென்று கருதும் வெளிச் சம்பிரதாயம் சடங்குகளில் ஒன்றும் இல்லை. நல்ல சிந்தனைகளையும், நல்ல சொற்களையும், நற்செயல்களையுமே மனிதன் கடைப்பிடிக்க வேண்டும்; அதுவே சிறந்தது' என்றார். 'தம்மைத் திருப்தி செய்யும் ஆற்றல் உள்ள பக்தர்களுக்கே கடவுள் அருள் புரிவார்' என்று மனிதன் எண்ணும்வரையில் ஆண்டவனை அவன் தன் நலம், தன் சுற்றத்தாரின் நலம் இவற்றுக்காகவே ஏற்பட்டவன் என்றுதான் கொள்கிறான்.

ஆனால் நல்லொழுக்கம் என்பதை - அதாவது, மனித சமுதாயம் முழுவதும் தெய்வத் தன்மை உண்டு என்பதை உணரும்போது, மனிதன் தன்னிடமே அது விளங்குவதை, மனித தருமம் இன்னதென்பதை அறிந்துகொள்ளுகிறான். ஏதோ தனக்குமட்டும் அருள் புரிவதற்காகத் திருப்தி செய்து வழிபடக்கூடிய அயலான் அல்ல கடவுள் என்ற உண்மை அவனுக்குத் தெளிவாகிறது. இந்தமாதிரி ஆத்மிக உணர்வு மனித இனம் முழுவதும் பரவி எல்லா மக்களையும் பாரமார்த்திகத் துறையில் ஒன்றுபடுத்துகிறது. இன்ன இனத்துக்குத்தான் கடவுள் சொந்தம் என்ற குறுகிய நிலையிலிருந்து அறநெறியை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் ஜாரதுஷ்டிரரே; பிரபஞ்சம் முழுவதும் ஒன்றாக விளங்கும் பரமபுருஷனை வழிபடுவதே சமயம் என்று போதித்த முதல் தீர்க்கதரிசி ஜாரதுஷ்டிரரே. தரும மார்க்கங்களைப் பற்றிய வரலாற்றில் இது முக்கியமான நிகழ்ச்சியாகும்.

மறைந்து கிடந்த உண்மை என்னும் தீ திடீரென்று இந்தத் தீர்க்கதரிசியின் வாழ்விலும் உள்ளத்திலும் தோன்றி எங்கும் ஒளி வீசியது. இப்படிப்பட்டவர்களுடைய வாக்கே உண்மையான மனித வாக்கு. அது ஒரு காலத்துக்குமட்டும், ஒரு மக்களினத்துக்குமட்டும் உரியதன்று; எக்காலத்துக்கும் எந்த இனத்துக்கும் பொது; மௌனம், மறதி, சோர்வு, தோல்வி இவைகளுக்கிடையே தோன்றி அது செயல் புரிகிறது. ஜாரதுஷ்டிரரின் வாக்கு இன்னும் பொய்க்கவில்லை; அது அப்படியேதான் இருந்து வருகிறது. 'உண்மை என்னும் கதிரவன் எல்லாருக்குமே உரியவன். அவனுடைய ஒளி தூரத்தில் இருப்பவரையும் அருகில் இருப்பவரையும் இணைக்கிறது' என்றார் அவர். எனக்கு ஒரு விஷயத்தில் மிகவும் திருப்தி: பாரசீகத்திலும் சரி, இந்தியாவிலும் சரி, அந்த அந்த மக்கள் சமுதாயத்தில் தோன்றிய மகான்கள் ஒரே நெறியில், இவ்வாறு தருமத்தைத் தூய்மையாக்கிச் சீர்திருத்தம் செய்திருப்பதைக் கண்டுதான் இப்படித் திருப்தி ஏற்படுகிறது. ஜாரதுஷ்டிரர் 'வேள்வி'(யக்ஞம்) என்பதற்குப் பாரமார்த்திகப் பொருள் கண்டார். அதற்குமுன் ரத்தபலி போன்ற வெளிச் சடங்குகளையே 'வேள்வி' யாகக் கொண்டிருந்தார்கள் பாரசீக மக்கள். கீதையிலும் 'யக்ஞம்' என்பதற்குப் பிராணி பலி என்ற பழைய பொருளைவிட (ஜாரதுஷ்டிரர் சொல்வது போன்ற) உயர்வான பொருளே கொடுக்கப்பட்டிருக்கிறது.

'சொந்த நன்மையைக் கருதிச் செய்யும் செயல்கள் ஆத்மாவைப் பந்தத்துக்கு உள்ளாக்குகின்றன. பயன் கருதாமல், விருப்பு வெறுப்பு அற்றுத் தன்னையே தியாகம் செய்துகொள்வதுதான் - அர்ப்பணம் செய்வதுதான் - உண்மையான யக்ஞம்' என்கிறது கீதை. படைப்பே, பயன் கருதாமல் பிரமன் தன்னைத் தானே பரமாத்மனுக்கு அர்ப்பணம் செய்துகொண்டதால் ஏற்பட்டதுதானே? ஆகவே, நம்மை நாமே தியாகம் செய்துகொண்டு,

கடமையைப் புரிவதிலேதான் பரப்பிரம்மத்தை உணரு கிறோம்.

ஜாரதுஷ்டிரருடைய பார்ஸி மதம் ஒழுக்கத்தையே முக்கியமாகக் கொண்டது. அது, ''மக்கள் அழிவில்லாப் பரம்பொருளோடு ஒன்றிச் செயல் புரியவேண்டும். 'க்ஷத்ரம்' என்ற தருமத்தின் ஆட்சியை எல்லாத் தீமை களிலிருந்தும் காத்துப் பரப்பவேண்டும்'' என்கிறது. இந்த லட்சியம், 'ஆண்டவனது அருள் உலகம் முழுவதற் கும் கிட்டும்படி நாமும் அவனுடன் சேர்ந்து தொண்டு புரியவேண்டும்' என்பதையே உணர்த்துகிறது.

இப்படி ஒரு தருமயுத்தம் நடந்ததைச் சம்ஸ்கிருத இலக்கியத்தின் சிறந்த மகாகவி (காளிதாசர்) காவியமாக எழுதியபோது இந்திய சரித்திரத்திலே வீரம் ஓங்கி நின்றது. அவர் குறிப்பிடும் யுத்த லட்சியம் ஜாரதுஷ்டிர ருடைய லட்சியத்தைப் போலவே இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை. சொர்க்கத்தைத் தீய சக்திகளிலிருந்து காவியத் தலைவன் மீட்டாகவேண்டும் என்பதை விஷயமாகக் கொண்டு தொடங்குகிறது அவருடைய காவியம். இதுதான் என்றென்றும் மனித னுக்கு உள்ள பிரச்னை. 'ஸத்' அல்லது உண்மையின் தெய்வமான சதி, மங்களம் அல்லது சிவனிடமிருந்து பிரியும்போது சொர்க்க வாழ்வு சிதைந்து போகிறது. தீய சக்தி இதைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறது. சத்தியமும் சிவமும் - உண்மையும் செம்மையாகிய அற மும் - மணம் புரிந்து இணைந்தால்தான் எங்கும் விளங்கும் செம்மையையும் அழகையும் காக்கக்கூடிய தலைவன் பிறப்பான். ஆகவே, இப்படி இந்த இரண்டுவிதப் பண்புகளையும் இணைக்கக் காமம் (மன்மதன்) முயன்றது.

அப்போது ஈசுவரனுக்குக் கோபம் மூண்டுவிடுகிறது; இதனால் வெற்றிபெறுமல் துன்பமே விளைகிறது. கடைசி யில் தவம் செய்து தூய்மை அடைந்ததும் சத்தியத்துக் கும் (சதிக்கும்), செம்மையாகிய அறத்துக்கும் (சிவத்துக் கும்) மணம் நிறைவேறுகிறது. தீய சக்திகளுடன் போரிட்

டுச் சொர்க்கத்தை மீட்கும் தலைவன் (குமரன்) பிறக்கிறான். இந்தக் காவியம் தருமயுத்தத்தின் லட்சியத்தை விளக்குகிறது. இந்த லட்சியத்தை முதல்முதல் போதித்த தீர்க்கதரிசி ஜாரதுஷ்டிரர்.

அவருடைய தெய்வவாக்கு, 'மனிதர்கள் புரியும் செயல்களுக்கெல்லாம் ஒரு முடிவான லட்சியம் உண்டு; அந்த லட்சியத்திலேயே எல்லாம் அடங்கியிருக்கின்றன. அதுவே சாந்தி; அதுவே அமரநிலை' என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது. 'நன்மை தோன்ற அரும்பாடுபட்டு உழைப்பதாலேயே அன்பு சித்தியாகும் என்ற உண்மையையே அவருடைய பாடல்களில் காண்கிறோம்.

# 6. நான் கண்ட அநுபவம்

அறநெறியின் உண்மையை மனமார நம்பும் தனிப்பட்ட சிலருடைய அநுபவத்தைக் கவனிக்கும்போது எனக்கும் நல்ல வேளையாக அறநெறியின்மேல் ஆர்வம் மேலிட்டு, அதனிடம் எனக்குள்ள மதிப்பும் மிகுதியாகிறது. ஆகையினால்தான் ஏதோ என்னைப்பற்றி ஓரளவு சொல்லிக்கொள்ளவேண்டியிருக்கிறது. வழி வழியாக வந்த ஞானத்தாலோ, வெளி விஷயங்களைக் கற்று உணர்ந்ததாலோ என் வாழ்வில் அறநெறி பற்றி நான் தெரிந்துகொண்டுவிடவில்லை. ஒரு விதமாக அநுபவம் ஏற்பட ஏற்படத்தான் அதை உணர்ந்தேன்.

உபநிடதத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அத்வைத சித்தாந்தத்தை மிகவும் சிரத்தையோடு வளர்க்கப் பாடுபட்டு வந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவன் நான். முதலில் என் மனம் அதில் ஈடுபடாமல் தனித்து நின்றது. எந்த விதமான மதக்கொள்கையும் அப்போது என் மனத்தில் இடம் பெறவில்லை. இப்படிச் சுதந்தரமான ஒரு சூழ்நிலையில் என் மனம் வளர்ந்து வந்தது; சாஸ்திர சம்மதமான எந்தவித அறநெறிக்கும் அது கட்டுப்படவில்லை; குறிப்பிட்ட ஒரு சம்பிரதாயத்தினர் கூடி நடத்தும் தரும போதனைக்கும் அடங்கி நடந்ததில்லை. அந்த நாளைப்பற்றி இப்போது எண்ணிப் பார்த்தால், வேதகாலத்தில் வாழ்ந்த என் முன்னோர் சென்ற வழியைத்தான் நானும் என்னை அறியாமல் கடைப்பிடித்து வந்திருக்கிறேன் என்று தெரிகிறது. இந்த உஷ்ணப்பிரதேசத்து ஆகாய வெளியைப் பார்க்கப் பார்க்க, அதற்கும் அப்பால் பரந்து விளங்கும் ஏதோ ஒன்று உண்டு என்ற எண்ணம் மூண்டது.

பிறகு அந்தணர்க்குரிய முதற்சடங்கு (உபநயனம்) வந்தது. காயத்திரி மந்திரத்தைத் தியானிக்கும்படி சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் காயத்திரி மந்திரத்தின் பொருள் இதுதான்:

''பூமி, காற்று, ஆகாயம் ஆகியவற்றைப் படைத்து எவன் நம் மனத்தில் அறிவு என்னும் சக்தியைக் கொடுக்கிருனே அவனது திவ்விய ஒளியைத் தியானிப்பேனுக.''

இதனுல் எனக்குள்ளே ஒருவிதமான உயர்ந்த நோக்கம் ஏற்பட்டது. என் உள்ளத்தையும் வெளியுலகத்தையும் ஒன்ருக இணைக்கும் நித்தியமான பரம்பொருள் ஒன்றைத் தியானிப்பதில் ஈடுபட்டேன். அதனுல் என் மனத்தில் காற்ருேட்டம் போல் தெளிவாகச் சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி மூண்டது. அது என்னவோ எனக்கு நிறைவானதாகவும் படவில்லை; திருப்தியும் அளிக்கவில்லை. ஏதோ குறை இருப்பதை உணர்ந்தேன்.

எனக்குப் பதினெட்டு வயது இருக்கும். அப்போது முதல்முதலாகத் திடீரென்று இளவேனிலில் வரும் தென்றலைப்போல், தார்மிக அநுபூதி ஒன்று ஏற்பட்டது; அது பாரமார்த்திக உண்மையை உணர்த்திச் சென்றது. ஒரு நாள் விடியற்காலை மரங்களுக்குப் பின்னுல் சூரியன் ஒளி வீசி உதயமாகும்போது என் கண் முன் வெகு காலமாகப் படர்ந்திருந்த பனிப்படலம் ஒன்று ஒரே கணத்தில் விலகியதுபோலவும், உலகத்தில் படியும் காலை வெயிலில் ஆத்மிகச் சுடர் ஒளி வீசுவது போலவும் ஓர் அநுபவம் ஏற்பட்டது. அதுவரையில், 'எல்லாம் சாதாரணக் காட்சி' என்பதுபோல் அவற்றை மறைத்திருந்த மாயத்திரை விலகி, இயற்கையில் அடங்கியுள்ள மகத்தான உண்மையை என்று அகத்தில் உணர்ந்தேன். சௌந்தரியம் அல்லது அழகு என்பதன் தத்துவமே இதுதான். இந்த அநுபவத்திலே நிலையாக என் மனத்தில் பதிந்தது மனிதனைப்பற்றிய உண்மைதான் - எங்கும் பரந்த பரம்பொருளைப்பற்றிய உணர்வுதான்.

எனக்கு வயதாகி, நான் சில கிராமங்களில் பொறுப்பான ஒரு வேலையில் ஈடுபட்டு வந்தேன். காலம் மெதுவாக ஊர்ந்து சென்றது. ஓர் ஊரில் நான் வாழும் போது சுகதுக்கங்கள் பலவற்றை இயற்கையாகக் காண நேர்ந்தது. ஆதியில் எப்படி இருந்ததோ அதே மாதிரி

எளிமையாக இருளும் ஒளியும் கலந்த ஒரு வாழ்வு அது. பகல் வந்தால் போதும்; வாழ்வில் சின்னஞ் சிறு நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக இருப்பது புலப்படும். அன்று காலையில் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து முடித்ததும் குளிக்கப் போகுமுன் ஜன்னலண்டை வந்து நின்றேன்.

ஆற்றங்கரையோரம் சந்தை கூடும் இடத்தைப் பார்த்தபடி இருந்தது ஜன்னல். வற்றியிருந்த அந்த ஆறு புதுமழை நீரை வரவேற்கக் காத்திருப்பதுபோல் இருந்தது. சட்டென்று என் அந்தரங்கத்தில் ஏதோ புதிய உணர்வு ஒன்று ஏற்பட்டது; அதுவரை என் அநுபவத்தில் கண்டதெல்லாம் புது ஒளி பெற்றமாதிரியும், விளங்காது மங்கலாக இருந்த சில நிகழ்ச்சிகளில் பெரியதொரு மெய்ப்பொருள் பொருந்தியிருப்பதாகவும் பட்டது.

சிறு வயதில் முதற் பாடப்புத்தகம் ஒன்றைப் படிக்கும்போது தனித்தனியே கிடந்த ஒவ்வொரு பதத்தையும் சிரமப்பட்டு எழுத்துக் கூட்டின பிற்பாடு, ஒன்றுக்கு ஒன்று எதுகையாக அமைந்த தொடர்கள் கொண்ட வாக்கியத்தைப் படிக்கலானேன்; அப்போதுதான் முழுப் பொருளும் புரிந்தது. திடீரென்று ஒரு புது உலகத்தையே கண்டுவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. அது இன்னும் நினைவிருக்கிறது. இப்படித் தனித்தனியாக இருக்கும் துண்டுப் பதங்களைச் சேர்த்தால் அவைகளின் தனித் தன்மை போய் அவை எல்லாம் இணைந்து பொருள் பொதிந்திய ஒரு வாக்கியம் ஆகும் என்று புரிந்ததும், அதைப்பற்றியே வெகுநேரம் எண்ணமிட்டுக்கொண் டிருந்தேன்.

இதைப் போலவேதான் அன்று காலை அந்தக் கிராமத்திலே ஜன்னல் வழியாக வெளியில் பார்த்தபோது, என் வாழ்வில் கண்ட நிகழ்ச்சிகள் திடீரென்று ஒன்றோடொன்று சம்பந்தம் உள்ளவைகளாக உண்மை ஒளி பெற்று விளங்கின. ஏதோ இயல்பாகச் செல்லும் அலைகள்போல் அதுவரையில் தோன்றிய எல்லாப் பொருளும் 'எல்லையில்லாத பெருங்கடல் போன்ற ஒன்றோடு சம்பந்

தப்பட்டவை' என்பதைத் தெளிவாக உணர்ந்தேன். 'என்னையும் நான் வாழும் இந்த உலகத்தையும் நன்ருக அறிந்த ஏதோ ஒரு ஜீவன் என் அநுபவங்களின் மூலம் தன் கருத்தை நன்ருக வெளியிடப் பார்க்கிறது; தனித் தனியாகக் காணும் ஒவ்வோர் அநுபவமும் விரிவாகிப் பின்னுல் ஒன்றுபடும்படி செய்வது அதுவே. இப்படி ஆத் மிக உயர்வை நாடும் ஒரு மகத்தான கலையில் அந்த ஜீவன் ஈடுபட்டிருக்கிறது' என்று எனக்கு உறுதியாகப் பட்டது.

'இந்தப் பரமாத்மனின்முன் நான் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும்; என்னிடம் அமைந்த சிருஷ்டி விசித்திரம் இந்தப் பரமாத்மனுக்கும் எனக்கும் பொதுவானவை. இந்தப் பரமாத்மனின் சித்தமேதான் எண்ணிய எண்ணத்தின்படி-நித்தியமாக விளங்கக்கூடிய ஒரு கருத்தின்படி - இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கு கிறதோ என்னவோ! இருந்தாலும், அதுவே என் உள்ளத் தைத் தன் முக்கிய இருப்பிடங்களில் ஒன்ருகக் கொண் டிருக்கிறது; ஒற்றுமை உணர்வை அது வளர்த்தது; என் உள்ளுணர்வைத் தூண்டிவிடுகிறது' என்பதை உணர்ந்தேன்; கடைசியாக என் தருமம் இன்னதென, மனித தருமம் இன்னதென அறிந்ததாகப் பட்டது. 'எல்லையற்ற பரம்பொருள் என்பது மனித சமூகத்தி லேயே பொருந்தியிருக்கிறது; அது என்னை நாடிவந்து என் அன்பையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறது' என உணர்ந்தேன்.

இந்த உலகம் உயிர் பெற்று விளங்குவதாகவே எனக் குத் தோன்றியது. அது, 'யாவரும் என் உறவினர்' என் பதை மறைமுகமாகக் காட்டி, என் வாழ்வுடன் நெருங்கி நிற்பதை அறிந்தேன். இந்த உறவினுல் என் வாழ்வுக்குள்ள மதிப்பே உயர்ந்துவிட்டது.

இந்த உலகத்தில் பற்றற்ற உண்மை என்று உண் மையில் ஒரு பகுதி உண்டு. பற்றற்ற விஞ்ஞான நோக் குள்ளவர்கள் இதைக் கடைப்பிடிக்கிருர்கள். தகப்ப னுக்கு மகனிடம், பெற்ருேன் என்ற உறவு முறை இருக்

கிறது. ஆனாலும் அந்தத் தகப்பனே வைத்தியனாக இருக்கும்போது அந்த உறவு முறையை விட்டுத் தன் குழந்தை என்பது வெறும் உடல், இந்த உடலுக்குள்ள இயல்பின்படி இது வேலை செய்கிறது என்று பற்றற்று நோக்கலாம். தன் தொழிலைச் செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து, தனக்கும் தன் மகனுக்குமிடையே உறவு உண்டு என்ற நினைப்பை அடியோடு விட்டுவிடு கிறான் என்று வைத்துக்கொள்ளலாம். அதனால் அவன் தகப்பன் என்பதைவிட மருத்துவன் என்ற முறையில் ஒரு பெரிய உண்மையைக் கண்டறிந்து விட்டதாகச் சொல்லி விட முடியாது. தன் மகனைப்பற்றி அவன் விஞ்ஞான ரீதியாக அறிந்துகொண்டது, விவரம் என்ற அளவில் உண்மையே என்றாலும், அது பரம்பொருளின் உண் மையை உணர்ந்ததாகாது. தன் மகனிடம் உள்ள நெருங்கிய பாசத்தால் முடிவான ஓர் உண்மையை, பிர பஞ்சத்திலே பொருள்கள் ஒன்றுக்கொன்று இணைந்து விளங்கும் உண்மையை, சிருஷ்டிக்கே அடிப்படையான தத்துவத்தை அவன் உணருகிறான்.

மூலப் பொருளில் புரோட்டான் (நேர் மின்சக்தி ஏறிய ஜலஜ அணு), எலெக்ட்ரான் (எதிர் மின் சக்தி ஏறிய அணு) என்ற இருவகை அணுக்களும் ஏராள மாக அமைந்து விளங்குகின்றனவே, அவற்றைவிட அந்த அணுக்களுக்குள் ஆராய முடியாதிருக்கும் பரஸ்பர உறவின் ரகசியமே மகத்தான உண்மையாகும். நம் அரு கிலேயே இப்படிப் பரஸ்பர உறவு என்னும் உண்மையை அன்பு, ஆனந்தம் இவைகளின்மூலம் உணருகிறோம். இந்த அநுபவத்திலிருந்து, 'எல்லாப் பொருள்களையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும் அந்தத் தனிப் பரம்பொருள் பிரபஞ்சம் முழுவதையும் அறிந்தது. அது அன்பின் உருவம்; இந்தப் பூரணமான உறவை அடிப்படை யாகக் கொண்ட அன்பே சிறந்த உண்மை' என்று சொல்ல நிச்சயமாக நமக்கு உரிமை உண்டு. "அசையும் பொருளையும் அசையாப் பொருளையும்

கொண்ட இந்த உலகம் மனித சிருஷ்டியின்மூலம் சிறப் புற்று நிறைவு பெற்றுவிட்டது' என்பதை நான் உறுதி யாக நம்புகிறேன். மனிதன் சிருஷ்டி தத்துவத்தில் பிரம்மதேவனின் பிரதிநிதியாக விளங்குகிருன். அதனுல் தான் மற்றப் பிராணிகளைவிட அவனுல் இந்த உலகத் தைப்பற்றி நன்ருக அறிந்துகொள்ளவும், அநுபவமூலம் உணரவும், கற்பனையினுல் ஆராயவும் முடிந்தது. அதனுல்தான் தன் ஆத்மாவிலேயே அந்தப் பரம் பொருள் இணைந்திருப்பதை அவன் உணருகிருன்.

உலகத்தில் காணும் உண்மைகளைப்பற்றிய விவரம், வெறும் மின்சார சக்தியைக் கண்டுபிடித்தது இவையெல் லாம் புற ஆராய்ச்சிகளே. இது பொருள்களை அகத்தி னின்றும் ஆராய்ந்ததாகாது. ஆனந்தமே சத்தியத்தை அளக்கும் கோல். அதனுல் தோன்றும் இசைமூலம் அந்தப் பேருண்மையை உணருகிருேம். நம் அகத்தில் உள்ள உண்மைப் பொருளை அது மகிழ்ச்சியுடன் வர வேற்கிறது; இந்த மகிழ்ச்சியாலே அந்தப் பேருண் மையை எட்டிவிட்டதை உணருகிருேம். இதுதான் எல்லா அறநெறிகளுக்கும் உண்மையான அடிப்படை. ஆகாய வெளியில் உள்ள ஈதர் அலைகளாக, ஒளி நம்மிடம் வந்து சேருவதில்லை; தன்னை யாராவது விஞ்ஞானி வந்து நமக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டு மென்று காலை நேரம் காத்திருப்பதில்லை. இதே மாதிரி தான் நமக்குள் இருக்கும் பரம்பொருளின் உண்மையை யும் உணர்கிருேம்; அன்பு செலுத்துவதும் நன்னெறி யில் நடப்பதுமே கலப்பற்ற தூய உண்மை என்பதைக் கண்டறியும்போது இந்த அநுபவம் நமக்கு ஏற்படு கிறது. சித்தாந்திகளுடைய விளக்கங்களின் மூல மாகவோ, நீதி நூற் கருத்துக்களைத் துருவி ஆராயும் அறிஞரின் சபையிலோ நாம் அதை உணருவதில்லை.

என்னுடைய மதம் கவியின் மதமே. என்னுடைய அநுபவத்தாலேதான் இவைகளை யெல்லாம் உணர்ந் தேனே தவிர அறிவினுல் ஒன்றும் உணர்ந்துவிட

வில்லை. தீமையைப்பற்றியோ சாவுக்குப் பின் என்ன நேருகிறது என்பதைப்பற்றியோ என்னைக் கேட்டால், அதற்குச் சரியானபடி என்னுல் பதில் சொல்ல முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும், முடிவற்ற அந்தப் பொருளோடு இணைந்து நிற்கும் ஆத்ம அநுபவம் சில சமயம் ஏற்பட்டதென்னவோ உறுதி. என்னிடம் அப்போது உண்டான பேரானந்தத்தின் மூலம் அதை நன்ருக உணர்ந்தேன். 'அந்தப் பரம சத்தியத்தின்முன் நம் மனமும் மொழியும் திகைத்து ஒன்றும் புரியாமல் நின்றுவிடுகின்றன. ஆனுல் தன் உள்ளத்திலேயே ஏற்படும் ஆனந்த அநுபவத்தால் அந்தச் சத்தியத்தை உணர்ந்தவனை ஐயமோ, அச்சமோ ஆட்கொள்ளாது. அவைகளை யெல்லாம் அவன் கடந்தவன் ஆகிருன்' என்று உபநிடதத்தில் கூறப்படுகிறது.

இரவு வேளையில் நாம் சில பொருள்களின்மேல் இடறுகிறோம். அப்போதும் அவை என்ன பொருள்கள் என்பதை உணருகிறோம்; தனித் தனிப் பொருள்கள் அவை என்பதையும் உணர்ந்துகொள்கிறோம். ஆனுல் பகலோ அவை எல்லாவற்றையும் ஒன்ருக இணைத்து அவை அனைத்தும் சேர்ந்ததே உலகம் என்பதை நமக்கு உணர்த்துகிறது. உள்ளுணர்வின் ஒளியில் மூழ்கி ஆத்ம அநுபவம் பெற்றவனே வேற்றுமையிலும் ஒரு மகத்தான ஒற்றுமை நிலவுவதைக் காண்கிருன். அப்படிப்பட்டவன் மனித சமூகத்தில் காணும் தனித்தனி அநுபவ உண்மைகளை வெவ்வேருனவை என்று கருதித் தடுமாறுவதில்லை; அவையே முடிந்த முடிவுகள் என்றும் கொள்ளமாட்டான். 'சத்தியம் என்ற உணர்வில் அடங்கியிருக்கும் ஒருமையுணர்வே சாந்தியைத் தரும். வெளி அமைப்புக்களிலோ ஏற்பாடுகளிலோ அதை உணரமுடியாது. சத்தியத்துக்கும் நமக்கும் உள்ள அந்தரங்க உறவை என்றென்றும் நிலையாக உணர்த்துவது அழகுதான். நம் அன்பின் மூலம் நிறைவு பெறவேண்டுமென்றே அந்தச் சத்தியம் காத்து நிற்கிறது' என்பதை அவன் உணருகிருன்.

# 7. என் உள்ளத்தில் உறைபவன்

என் தகப்பனார் 'ஒன்றே தெய்வம்' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஆதிப் பிரம்ம சமாஜத்தை முன் நின்று நடத்தியவர். அதில் இருந்து அநுபவப் பட்டதால் எனக்கு ஒன்று தெரிந்தது. அறத் துறையிலும் கலைகளைப் பொறுத்தவரையிலும் ஒரு பகுதியினருக்குப் பொதுவாக உள்ளது எதுவும் அவ்வளவு முக்கியம் அன்று என்பதுதான். இன்னும் கேட்டால் அவர்கள் கடைப்பிடிக்கும் நெறிகள் ஒருவரைப் பார்த்து ஒருவர் பின்பற்றும் பழக்கமாகவே ஆகிவிடுகின்றன. இப்படி இருக்கும்போதுதான் ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் ஏதோ பாடிக்கொண்டு வருவது காதில் விழுந்தது. வங்காளத்திலுள்ள பாவுல் என்ற சம்பிரதாயத்தைச் சேர்ந்தவன் அவன். எளிமையான பாட்டுத்தான்; இருந்தாலும், அதில் ஒரு தார்மிக தத்துவம் அடங்கியிருந்தது. அது அப்படி முற்றும் முடிந்த தத்துவமாகவோ, பக்குவப்படாத பலவகைக் கருத்துக்கள் கொண்டதாகவோ, அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றை உணர்த்தும் வகையில் ஏதோ அரிதான உட்பொருள் செறிந்ததாகவோ இல்லை. ஆனாலும், உள்ளூறப் பக்திரசம் அமைந்து உயிருடன் விளங்கியது அந்தப் பாட்டு. மனிதனுடைய உள்ளத்தில் அமைந்த தெய்வத்தன்மை அல்லது பரம்பொருளைத் தீவிரமாக நாடி நிற்கும் பக்தனின் ஏக்கம் அதில் தொனித்தது. கோயில்களிலோ, சாஸ்திரங்களிலோ, மூர்த்திகளிலோ, சின்னங்களிலோ காணும் தெய்வத்தன்மையை அது குறிப்பிடவில்லை. அதில் நித்திய புருஷன் என்ற லட்சியத்தை நோக்கிப் பக்தன் இப்படிப் பாடுகிறான்:

''உன்னை அடையும் வழியைத் தடுக்கவே
உள்ளன ஆலயம், பள்ளிவாசல்;
என்னைச் சுற்றிக் குருமார் கூடி
எரிச்சல் கொண்டே ஏசும் போதினில்

**உன்றன் அழைப்பைக் கேட்கவோ நகரவோ**
**முடியா மல்யான் நிற்கின் றேனே!''**

அன்பு ஒன்றில்தான் அவனுக்கு நம்பிக்கை உண்டு. அதுதான் பேராசைக்காரனையும் தியாக சீலனுக மாற்றும் மந்திரக் கல். இந்த அன்புக்காகவே சொர்க்கமும் பூமியை நாடி ஏங்குகிறது; தெய்வங்களும் மனிதனுக அவதரிக்கப் பார்க்கின்றன.

இந்தப் பாட்டைக் கேட்டதிலிருந்து பாவுல்களை அடிக்கடி அழைத்து, அவர்களை மேலும் மேலும் பாடச் சொல்லிக் கேட்பேன். ஆண்டவனை இப்படிப் பாடல் மூலமே வழிபட்டு வந்தார்கள் பாவுல்கள். ஆகவே, அவைகளைக் கொண்டே அந்தச் சம்பிரதாயத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள முயன்றேன். மனித தருமத்தைப்பற்றிய சாஸ்திரம் எதையும் எழுதி வைக்காமலே அந்தத் தத்துவத்தைத் தீவிரமாக நாடி, அதற்கான சாதனைகளைப் புரிந்த பலர் இந்தியாவில் இருந்திருக்கிருர்கள். எல்லா உயிர்களிடமும் பரந்து விளங்கும் (பரம்)பொருளோடு - தனிப்பட்ட ஒவ்வொரு மனித உடலிலும் உருவற்று விளங்கும் பரமாத்மனேடு - நெருங்கிப் பழகி வாழ்ந்து காட்டிய அநுபவசாலிகள் அவர்கள். இடைக் காலத்திலே இந்தியாவில் வாழ்ந்த பக்தகவி ரஜ்ஜப் என்பவர் அந்தப் 'புருஷ'னைப் பற்றி இப்படிச் சொல்லியிருக்கிருர்:

**''நர நா ராயணர் என்பார் உன்னை;**
**நான்'அது பொய்அன்(று); உண்மை என்பேன்.**
**வரம்பே அற்ற(து) என்னும் அனந்தமும்**
**உன்னிடம் முடிவை நாடுதல் கண்டேன்.**
**'நிறைவும் அன்பை நாடும்; பக்தியால்**
**நிறைவுறும் அவ்வன்(பு)' என்பதும் உண்மை;**
**உருவமும் அருவமும் இணையும் போதினில்**
**உணரலாம் அதனை நாமும் கண்டே.''**

அதே சமயத்தில் வாழ்ந்த ரவிதாஸ் என்ற கவி,

**''நர ஹரி! நீஎனைக் கண்டருள் புரிந்தாய்!**
**நானும் உன்னைக் கண்டேன்; ஆதலின்,**

இருவர் அன்பும் பரஸ்பர அன்பெனும்
இதனை உணர்ந்தேன் அன்பன் ரவிதாஸ்''
என்று பாடியிருக்கிறார்.

இந்த நரஹரியைப்பற்றியே கிராமாந்தரத்தைச் சேர்ந்த வங்காளக் கவி ஒருவர் இவ்விதம் கூறுகிறார்:

''நமக்குள் இருப்பான் அவனே உண்மை;
நாம்இதன் ஆழம் காண்பதும் அரிதே!
நமையே நாம்அறி வதனால் அவனையும்
நன்றாய் அறிவோம்; மற்றவருடனே
அமைந்து நாமும் அவனிடம் உண்மை
அன்புடன் இணைவோம் அனைவரும் வாரீர்!''

இன்னும் ஒரு கவி இப்படிப் பாடுகிறார்:

''மனிதன் என்னுள் இறனைத் தேடிட,
எனையே இழந்துநான் ஓடு கின்றேன்.''

அந்த லட்சிய புருஷனைப்பற்றி வேறொரு கவி,

''மனிதர் வாழும் இந்த உலகில்
வந்து விளையா(டு) ஈசன் கருத்தைத்
தனிஒரு சாத்திரம் எப்படி அறியும்?
சண்டீ தாசன் சொல்வது கேளாய்;
மனித உண்மையே சிறந்த உண்மை
மற்றெது வும்இலை அதனுக்(கு) ஈடே''
என்று பாடினார்.

நித்திய புருஷன் என்ற பேருண்மையில் அடங்கியவர்கள் நாம். இதை நம் உள்ளுணர்வு அகன்று விரிவதால் அறிகிறோம். அதன் மூலம் நாமும் ஆத்மிக உயர்வை நாடுகிறோம். பிறரிடம் காணும் சிறந்த பண்புகளைப் போற்றுவதாலும், பிறரிடம் அன்பு செலுத்துவதாலும், 'நம் வாழ்வின் எல்லையையும் கால எல்லையையும் கடந்து நாமே யாவருமாக விளங்குகிறோம்' என்ற நம்பிக்கையினாலுமே அந்த ஆத்மிக உயர்வு கிட்டும்.

மனிதன் எல்லை கடந்து நோக்கும்போது இந்த உண்மையைக் காணுகிறான்; இதுதான் மனித தருமம் என்பதையும் கண்டுகொள்கிறான். விண்வெளியையும் அதற்கு அப்பாலுள்ள உலகங்களையும் விஞ்ஞானம் தன்

எல்லேக்கு உட்பட்டவைகளாகக் கொண்டு ஆராயலாம். மூலகாரணமான பிரபஞ்ச தத்துவம் ஒன்றைத் தத்துவ சாஸ்திரம் கண்டறிய முயற்சி செய்யலாம். ஆனுல் தருமம் என்னவோ மனித சமூகத்தினிடம் அமைந்த பண்பையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்தப் பண்பே நம் பகுத்தறிவை விளங்க வைக்கிறது; நம் அறிவுக்கு ஊக்கமூட்டுகிறது; நம் அன்பைத் தூண்டு கிறது; நாம் அறிவோடு பொருந்தத் தொண்டு புரிய வேண்டும் என்கிறது. பிரகிருதி அல்லது இயற்கை என்று நாம் குறிப்பிடுவது வெறும் சித்தாந்தமோ, ஒழுங்கான இந்தப் பிரபஞ்ச அமைப்போ அன்று. மனிதனுக்கு இயல் பாகப் படும் உண்மையே இயற்கை. அவனிடமேகூட அது அடங்கியிருக்கிறது. ஆகவே, அவனுடைய மனமும் அந்த இயற்கையோடு பொருந்தி நிற்கிறது. இந்த நிலேயில் மனிதன் தன்னேயே அறிந்துகொள்ளுகிருன்.

நம் உள்ளுணர்வு பந்தத்திலிருந்து விடுபட்டுச் செயல்படும்போது **எல்லா உயிர்களிடமும் பொருந்தியிருக் கும் அந்தப் புருஷனேக்** காணமுடிகிறது. விஞ்ஞானத்தின் உயர்வான நோக்கம், மனித அறிவுக்கு உட்பட்ட பிரபஞ்சத்தைக் கண்டறிவதுதான். மனிதனுடைய விசுவ ரூபம் - மானசிகமான உடம்பு என்பது - காலம், பரப்பு இவைகளின் எல்லேயையும் தொட்டு நிற்பது; தனக்குள் இந்த உலகம் முழுவதையும் அடக்கிக்கொண்டிருப்பது. இந்த ஆத்மனிடம் மனித வாழ்வுக்குள்ள உயர்ந்த மதிப் பைத் தருமம் நாடி நின்றது. மனிதன் தனக்குள்ளே - வெகு சமீபத்தில் - கண்டறியக்கூடிய ஒப்பற்ற உண்மை இதுவே: ''புருஷனேத் தவிர உயர்ந்தது ஏதும் இல்லே; அவனே பரம்பொருள்; அவனே முடிவான லட்சியம்''.

''அந்தப் புருஷனேடு உறவு கொண்டு இருப்பதாலே தான் பிரபஞ்சம் நிலவுகிறது'' என்று வங்காளத்தில் வாழ்ந்த கிராமாந்தரக் கவி ஒருவர் பாடியிருக்கிருர்.

''பந்தத்திலிருந்து விடுபட்ட உள்ளுணர்விஞல் அநு பூதி ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து பேரானந்த

நிலை கிட்டும்'' என்பது நம் நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வரும் ஒரு மரபு. இது உண்மை அன்று என நான் மறுக்கவில்லை. இருந்தாலும், மனத்தத்துவ ரீதியான ஓர் அநுபவம் என்று இதற்கு மதிப்புத் தருவேனே யொழிய இதையே தருமம் என்று கொள்வதற்கில்லை.

அணுக்கள் சேர்ந்து உருவாகி அமைந்த பிம்பங்களைச் செய்பவன் கலைஞன். அணுவின் மிக நுண்ணிய நிலை இன்னதென்று அவனுக்குத் தெரிந்து என்ன ஆக வேண்டும்? அதேபோலத்தான் இதுவும். அணுவைவிட ஒன்ருய்த் திரண்ட பிண்டப்பொருள் நிறைவானது - பரிபூரணமானது - என்றே சொல்லவேண்டும். அவ்வாறே, ஆதியில் இன்னதென்று நிலையாக உணரமுடியாத ஏதோ ஒன்ருக மனிதன் மங்கி மறைந்து விடுவதைவிடச் சாமானிய மனிதன் என்ற முறையில் அவன் நிறைவு பெற்றவனுகவே அமைந்திருக்கிருன். அதாவது, நிறைவு பெற்றது என்ற ஒரு லட்சியமாகப் பார்க்கும் போது, அது நிலைபெற்றதாகவே இருக்கிறது. ஆனுல் அதையே உண்மை என்ற நிலைக்களனில் வைத்து ஆராயும் போது நிறைவு பெறவேண்டி அந்த லட்சியம் மேலும் மேலும் வளருவதால், அது நிலையற்றதாகவும் இருக்கிறது. 'பரமபுருஷன் அடிப்படையில் அனந்தமானவனே. அவன் நம்மைப்போல் தனித்தனி உயிர்களாகத் தோன்றும் போது முடிவுள்ளவன்' என்றுதான் சொல்கிறேன்.

ஈசோபநிடதமும், 'மனிதன் தான் வாழவேண்டிய ஆயுட்காலம் முழுவதும் வாழ்ந்து, பேராசை கொள்ளாமல் உழைக்க வேண்டும். அப்படியே அவன் எல்லா உயிர்களிடமும் விளங்கும் பரமஜீவனைத் தன்னிடமும் உணரவேண்டும்' என்று சொல்லுகிறது. அதாவது, பற்றற்ற தன் செயல் மூலம் அவன் அந்தப் பரமபுருஷன் தன்னிடம் இருப்பதைக் காட்டவேண்டும்.

# 8. கீதம் இசைப்போன்

**நா**ம் காணும் இந்த நிலவுலகில் ஒரு மணல்துகள் என்பது அதன் நிலைக்களனைப் பொறுத்துத்தான் ஒரு பொருளாகக் கருதப்படுகிறது. இல்லாவிட்டால், அது ஒன்றுமே இல்லை (சூனியம்) என்றுதான் ஆகிவிடும். பிரபஞ்சம் என்ற ஒன்று இருப்பதால்தான் மணல்துகள் என்ற ஒரு பொருள் அதில் இருப்பதை நம் புலன்களால் அறிகிறோம். ஒரு மணல்துகள் **இருக்கிறது** என்னும் போது, 'அது உண்மைதான்' என்பதற்கு இந்தப் பூலோகமே சான்றாக விளங்குகிறது.

மணல்துகள் தான் இருப்பதற்குச் சான்றாக வையத்தைக் காட்டும்போது, 'அது உண்மைதான்' என்பதை அறிவு என்னும் மர்மமான ஒரு பண்பு புரிந்துகொள்கிறது; ஆனால் இந்த அறிவைப் படைத்த 'நான்' என்ற 'ஆத்மன்' உண்மையானது என்பதற்கு என்ன சான்று இருக்கிறது?

மணல்துகளுக்குப் பின்னே பிரபஞ்சம் அமைந்திருப்பது போலவே இந்த ஆத்மன் உண்மையானதுதான் என்பதற்கும் ஏதோ ஒரு பரந்த ஆத்மன் (பரமாத்மன்) பின்னால் சாட்சியாக விளங்குகிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். மற்றப் பொருள்களுக்கும் மனிதனிடம் இருக்கும் ஆத்மனுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். அவைகளுக்கு வெளியே, 'அவை இருப்பது உண்மைதான்' என்பதற்கு அத்தாட்சியாக நிலைக்களனாய்ப் பிரபஞ்சம் இருக்கிறது. 'ஆத்மன்' உண்மை என்பதை அறியும் பண்பு, இந்த ஆத்மனுக்கு வெகு சமீபத்திலேயே - ஏன், அதற்கு உள்ளேயே - இருக்கிறது.

மனிதனுடைய அறிவு, உணர்ச்சி, உறுதி, செயல் இவைகளின் அடிப்படையாகத் தோன்றும் எல்லா நிகழ்ச்சிகளைப்பற்றியும் இதற்குத் தெரியும். இதைத்

தான் மனிதனிடம் அமைந்த பரமாத்மன் என்கிறேன். இந்தப் பண்பு அடங்கிக் கிடக்கும்போது, 'நாம் தனித் தனி ஆத்மா' என்ற உணர்ச்சியாகவே நின்றுவிடுகிறது. இந்தப் பண்பு செயல்படும்போது அறிவு வளர்ச்சி, அன்புப் பெருக்கு, பல முயற்சிகளில் ஈடுபாடு - இப்படி எத்தனையோ விதமாக இது எல்லை இல்லாமல் பரந்து விளங்குகிறது.

மனிதனைப் பொறுத்தவரை மிகப் பெரிய உண்மை என்னவென்றால், 'அனந்தமாயும் அடைய முடியாத தாயும் இருக்கும் ஒன்றை நாம் கற்பனையினால் காண்கிறோம்' என்பதுதான். நாம் அடையப் பார்க்கும் ஒரு லட்சியத்துக்கு இந்தக் கனவு அல்லது கற்பனை ஒரு குணத்தை உண்டுபண்ணுகிறது. எல்லா உயிர்களுக் குள்ளும் மனிதனுடைய வாழ்வுதான் எல்லையற்ற எதிர் காலத்திலும் படர்ந்து விளங்குகிறது. நாம் நிகழ்காலம் என்பது இப்படி முடிவற்றுக் காணும் மனித வாழ்வில் ஒரு பகுதியே. இன்னும் தோன்றாத கருத்துக்களும், உருவாகாத உணர்ச்சிகளும், சுற்றிலும் காணும் பொருள்களைவிடத் தாமே உண்மையானவை என்று நமக்குப் படும்படி, அவ்வளவு தீவிரமாக நம் சிந்தனை யைக் கிண்டிவிடுகின்றன. நாம் நிகழ்காலத்தில் வாழும் போது எதிர்காலச் சூழ்நிலையும் அதோடு பொருந்தி யிருக்கவேண்டும். அப்போதுதான் உயிர்வளம் பெற்ற தாகவும், நிரந்தரமானது என்று கருதும்படியும் இந்த நிகழ்காலம் விளங்கும். தான் அனந்தமானவன் என்ற லட்சியத்தில் மனிதனுக்கு இயல்பாகவே நம்பிக்கை உண்டு. அதனால்தான் நம் நாட்டில் தோன்றிய சமயாசாரியர்கள் நம்மிடமே அந்த எல்லையற்ற பரம்பொருளின் பான்மை இருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இப்படி நம்மிடம் அமைந்த (பரம) புருஷனுக்கு அவர்கள் அஞ்சலியும் செலுத்தியிருக்கிறார் கள். நாம் உயர்ந்த லட்சியம் உள்ளவர்களாக வாழ வேண்டுமென்ற அடங்காத் துணிவோடு இருப்பதே பரம

புருஷனுக்கு நாம் செய்யும் உண்மையான வழிபாடு ஆகும். மனிதனிடம் தெய்வத்தன்மை இருப்பதற்கு நமக்கு நாமே சான்ருக விளங்கவேண்டும். எட்டாத அந்தப் பரம்பொருளை அடையும் சுதந்தர வழி என்றென்றும் திறந்திருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து நீடிக்கும் எதிர்காலமும் நமக்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கப் போகிறது. அந்த எதிர்காலம் நம் கனவு அல்லது கற்பனைகளில் இருக்கிறது. நம்பிக்கை இருந்தால் நிறைவு ஏற்படும்; அந்த நம்பிக்கையில்தான் நம் எதிர்காலமே இருக்கிறது. மனிதன் எதிர்காலத்தில் இன்னபடி விளங்கவேண்டும் என்று கனவு கண்டதை அவன் விட்டுச் சென்ற ஆக்கச் செயல்கள் அல்லது சாதனைகளின் மூலம் காணலாம். எத்தனையோ மனித இனத்தார் மறைந்து அவர்களை மறந்தும் விட்டோம். அவர்கள் ஆதரிசமாகக் கொண்ட கொள்கைகளில் காம்பீரியமும் அழகும் பொருந்தி யிருந்தன; அவைகளின் மூலம் அவர்கள் ஆத்மாவின் பெருமையைப் புலப்படுத்திஞர்கள். அவர்களுடைய நம்பிக்கையும், அன்பும், வியந்து போற்றும் பண்பும் அதன் மூலம் வெளியாயின.

இத்தகைய மனித இனத்தார் ஒருவர்பின் ஒருவராகத் தோன்றி மறையும்போது பல பெருஞ் செயல்களைச் சாதித்திருக்கிருர்கள். 'பூலோகத்துப் பேரரசை வென்று ஆண்டவர்கள்' என்ற பெருமையைவிட, 'சொர்க்க வாழ்வைக் கற்பனையில் வகுத்துக் கனவு கண்டவர்கள்' என்றே அவர்களைச் சொல்லவேண்டும்.

மனிதன் தன்னைத்தானே இப்படி உருவாக்கிக் கொண்டபோது சில உணர்ச்சிகளையும் லட்சியங்களையும் படைத்துக்கொண்டான். அவைகளையெல்லாம் மொத்தமாகவே நாம் நோக்கவேண்டும். நம்முடைய குணத்திலோ, விருப்பங்களிலோ முழுக்க முழுக்க நல்லது என்ரே, முழுக்க முழுக்கக் கெட்டது என்ரே ஏதும் இல்லை. எல்லாக் குணங்களும் அந்தப் பரமபுருஷ

னிடம் அமைந்திருப்பவைகளே. தவமுன இடத்தில் இருந்தால் எதுவும் அபஸ்வரமாகத்தானே ஒலிக்கும்! இவைகளையெல்லாம் பரம புருஷன் என்ற மகத்தான இசையோடு பொருந்த வைப்பதைத்தான் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். காட்டுமிராண்டியாக இருந்தபோது தன்னிடம் இருந்த மிருக சுபாவம் மாறி, மனிதன் படிப் படியாக உயர்ந்து நாகரிகனுக இன்று விளங்குகிருன். இந்த நிலையில் அவன் பரமபுருஷனை உண்மையில் நெருங்கி இணைந்திருக்கிருன் என்றே சொல்லலாம். பஞ்ச பூதங்களில் எதையும் விலக்கியதால் மனிதன் இந்த நிலையை அடையவில்லை. 'முன்னும் பின்னும், எந்த எந்த இடத்தில் வாழ்வு ஒளியும் நிழலும் பொருந்த அமையவேண்டும்? எங்கெங்கே அடக்கம் வேண்டும்? எங்கெங்கே மனிதப்பண்பு விளங்க வேண் டும்?' என்றெல்லாம் கடுமையான மனக் கட்டுப்பாட் டின் மூலம் உணர்ந்தே இந்த நிலையை அடைந்தான். இந்தக் கட்டுப்பாடே ஒரு தனிக் கலை ஆகும். 'நிறைவு பெற்ற மனிதன்' அல்லது 'சர்வகுண சம்பன்னன்' என்ப தற்கு ஒரு தனி மதிப்பு ஏற்பட்டது.

இதில் நமக்கு நம்பிக்கை இருக்கும் வரையில் நம் சக்தி நீடித்திருக்கிறது. மனிதனுடைய சாதனைகளில் - நீடித்த அவனுடைய ஆக்க வேலைகளில் - இந்தச் சக்தியைக் காணலாம். நித்தியபுருஷனுடைய தன்மை யைப் புலப்படுத்துவது இதுவே. இலக்கியம், கலை, புராணம், சின்னங்கள், சடங்குகள், திடநம்பிக்கை யுடன் வாழ்ந்து வழி காட்டிய வீரபுருஷர்களின் நினைவு கள் ஆகியவை இந்த நம்பிக்கைக்குப் பக்கபலமாக அமைந்திருக்கின்றன.

# 9. கலைஞன்

உலகத்தில் நாம் எவ்வளவோ அறிந்துகொண்டிருக்கிறோம். 'அவ்வளவையும் நம் மனத்தால் அளந்து வைத்திருக்கவேண்டும்' என்று விஞ்ஞானம் நமக்கு அறிவுறுத்துகிறது. நம் நாட்டுச் சமயாசாரியர்கள், 'பிரபஞ்சத்தில் எத்தனையோ செயல்கள் நிகழ்ந்து, மாறுதல்களும் நேருகின்றன. அவைகளுக்கெல்லாம் மூலாதாரமாக இருப்பவன் பரமாத்மன். நம் ஆத்மாவின் மூலம் அவனை உணர வேண்டும்' என்கிறார்கள். நாம் காணும் இந்தப் பிரபஞ்சத்தில் அந்தப் பரமபுருஷனுடைய தோற்றமே எங்கும் பரவி விளங்குகிறது. 'வாழ்வு என்பது சத்தியம். நம் உள்ளத்தில் குடிகொண்ட சத்தியத்தோடு அது இழைந்து நிற்கிறது.' - இதையே நம் கலைப்பண்பு நமக்கு உணர்த்தி ஊக்கமூட்டுகிறது.

இது போன்று அவ்வுண்மை இழைவதை நாம் தீவிரமாக உணராதபோது, இந்த உலகத்திலேயே நாம் யாரோ அயலார்போல ஆகிவிடுகிறோம்; நமக்கு நம் சொந்த வீடுபற்றிய ஏக்கம் மூண்டு விடுகிறது. மனிதன் இயல்பாகவே ஒரு கலைஞன். தன்னைச் சுற்றியுள்ள பொருள்களின் உருவை மாறுதல் ஏதும் இல்லாமல் அப்படியே மனத்தில் அவன் ஏற்றுக்கொண்டு விடுவதில்லை. இடைவிடாமல் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி தான் கண்ட உண்மைகளைத் தன் கற்பனையால் மாற்றி அமைத்துக்கொள்கிறான். தன் உணர்ச்சிகள், கற்பனை சக்தி ஆகியவை மூலம் இச் செயலை நிறைவேற்றுகிறான். மிருகத்துக்குத் தான் பிறந்த இடம் நன்றாகத் தெரியும். மனிதனுக்கும் அதே மாதிரி தன் நாடு அல்லது சூழ்நிலை என ஒன்று உண்டு. வெறும் கண்ணால் காணும் பௌதிகக் காட்சி இல்லை அது. கலைப்பண்போடு இணைந்து பொருந்தி நீடித்துப் படைத்துக்கொண்டே போகிறது. தன் சொந்த நாட்டில் அவனுடைய உள்ளுணர்வுக்குக்

குந்தகம் ஏதும் இல்லையாதலின் (அங்கே அவன் எல்லாவற்றையும் அறிந்திருப்பதால்) மற்றவருடன் கலந்து பழகி உறவை வளர்த்துக்கொள்கிறான். இது அவனுடைய ஆத்ம வளர்ச்சியைக் காட்டுகிறது.

திறமையுடன் வாழவேண்டும் என்றால், உலகத்தில் தான் கண்ட அநுபவ உண்மைகளையும் அவற்றின் விதி முறைகளையும் அவன் உணர்ந்தாக வேண்டும். அமைதியுடன் வாழ்வதற்கு, அவன் தனக்குச் சம்பந்தமுள்ள எல்லாவற்றோடும் ஒத்துப் போக வேண்டும். உலகப் படைப்பே இத்தகைய உறவை அந்த அந்த நிலைமைக்கு ஏற்றபடி மாற்றி அமைத்துக்கொள்வதிலேதான் இருக்கிறது.

பலவித உண்மைகளையும் ஒன்றோடு ஒன்று பொருந்தும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மகத்தான உண்மையை நாம் உணர முடியும். கலையின் தொழில் இதுவே. பொருள்கள் எவற்றால் ஆனவை என்று பார்ப்பதால் அந்தப் பொருள்களின் உண்மையை உணர்ந்துவிட முடியாது. முக்கியமானது, மனிதர்களுக்கிடையே கலந்து உறவு கொள்வது தான்; அதன் மூலமாகத்தான் இந்த உண்மையை உணர முடியும்.

இயற்கையையும் சிந்தனையையும் ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் 'அனந்தம்' (Infinite) என்பது 'உண்மை' என்று பொருள்படுகிறது. விஞ்ஞான முறைப்படி பார்த்தால் 'அனந்தம்' என்பது 'அநுபவ உண்மை' (Fact) என்றாகிறது; (பரம)புருஷனோடு சம்பந்தப்பட்டது என்று கொள்ளும்போது 'அனந்தம்' என்றால் 'நித்திய சத்தியம்' எனலாம். இந்தச் சத்தியம் என்பது மனிதனோடு சம்பந்தப்பட்டது. நமக்கு உண்மை என்று படுவதுதான் சத்தியம். எதனால் நாம் பாதிக்கப்படுகிறோமோ அதுவே சத்தியம்; இதை ஆழ்ந்து உணர்ந்தால் நம்மை நாமே உணர்ந்தவர்கள் ஆவோம்.

இதனுல் நமக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. நம் வாழ்வே இதில்தான் இருக்கிறது. இந்தச் சத்தியத்தின் எல்லையை நாம் எப்போதும் விரிவாக்கிக்கொண்டே யிருக்கிருேம். மனிதனிடம் அடிப்படையாக உள்ள 'சத்தியம்' என்ற இந்த ஆக்க முயற்சிக்கு அறிகுறியாகவே நம் கலைகளும் இலக்கியங்களும் விளங்குகின்றன.

மனிதர்கள் தங்கள் இலக்கிய, கலைப் படைப்புக் களிலெல்லாம் பரமபுருஷனையே - சிருஷ்டிகர்த்தாவான பரப்பிரம்மத்தையே - கண்டு, உணர்ந்து, விளக்கவேண் டும். தனக்கு உண்மை என்று படுவதை மனிதன் தன் உணர்வால் அறிகிருன்; இந்த உணர்வு அழியாமல் அப்படியே விளங்க வேண்டும் என்பது அவனுடைய ஆவல். சத்தியத்தின் குரல் அழைக்கும்போது ஆக்க வழியில் ஈடுபட்ட ஆத்மா செயல் புரிகிறது. இந்தச் செயலே கலை ஆகும்.

# 10. மனித இயல்பு

மனிதனுக்குத் 'தான்' என்ற நனவு ஏற்பட்டதுமுதல் ஆழ்ந்து அறிய முடியாத ஓர் ஒற்றுமை உணர்வு உலகத்தில் இருப்பதை அறிந்தான். சமூகத்தில் அவன் மற்றவர்களோடு பழகும்போது இந்த ஒற்றுமை உணர்வு வெளியாயிற்று. தனித்தனிப் பிறவிகளை இணைக்கும் நுட்பமான உணர்வு இது; ஏதோ பயனைக் கருதி இது ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை. 'முடிவான சத்தியம் இதுதான்' என்பதை உணர்த்தவே இந்த உணர்வு தோன்றியது; ஏதோ கணக்குப் போடுவது போன்ற விஷயமும் இல்லை இது. வாழ்வில் மதித்துப் போற்றக்கூடிய ஒரு பண்பே இது. இந்த மெய்யுணர்வுக்குத் தெய்வத் தன்மை உண்டு என்று எப்படியோ மனிதனுக்குப் பட்டுவிட்டது. 'நாம்', 'நமது' என்று உரிமை பாராட்டும் எல்லாவற்றையுமே இது கேட்கிறது; அவை தனக்கே உரியவை என்று உரிமை கொண்டாடுகிறது. ஒரு வரம்புக்கு உட்பட்ட 'ஆத்ம'னையும் மிஞ்சிய உயர்வான 'பரம்பொருள்' இந்த ஒற்றுமையுணர்வில்தான் அடங்கியிருக்கிறது. 'நம் உன்னதமான சுதந்தர உணர்ச்சிக்கு அறிகுறியாக இது விளங்குகிறது' என்று மனிதனுக்குத் தோன்றியது.

இந்த உணர்வை மனிதன் பக்தி சிரத்தையுடன் போற்றி வந்தான். இதை அவனுடைய அறநெறிகளில் காணலாம். தன் தெய்வங்களுக்கு அவன் வைத்த பெயர்களிலும் இதைக் காணலாம். இதனால்தான் அந்தத் தெய்வங்கள் முதலில் ஒரு குழு அல்லது கூட்டத்தாருக்கே உரிய தெய்வங்களாக விளங்கின; ஒரே குழுவிலும் வெவ்வேறு சமூகத்தின் தெய்வங்கள் அந்த அந்தச் சமூகத்துக்கே உரியவையாக இருந்தன. மனித சமூகம் ஒன்று என்ற உணர்வு பரவியதும், பிரபஞ்சம்

முழுவதற்கும் தெய்வம் ஒன்றே என்பது புலனாயிற்று. மனித சமூகம் ஒன்றுபட்டதே என்ற உண்மையும், மனிதன் போற்றும் பரம்பொருளின் உண்மையும் ஒன்றே என்பதை இது நிரூபித்தது.

சம்ஸ்கிருத மொழியில் மதம் அல்லது சமயம் என்பதற்குத் 'தருமம்' என்று பெயர். 'நம்மையெல்லாம் உறுதியாக இணைக்கும் ஒரு கொள்கை' என்று இதற்குப் பொருள் கூறலாம். வேறொரு விதத்தில் பார்த்தால், 'ஒரு பொருளிடம் அமைந்த நற்குணம்' என்றும் இதற்கு நுணுக்கமாகப் பொருள் சொல்லலாம். ஓர் உதாரணம்: நெருப்பில் உஷ்ணம் சில சந்தர்ப்பங்களில் வெளிப்படாமல் இருந்தாலும், மொத்தத்தில் நெருப்புக்குரிய முக்கியமான குணம் உஷ்ணந்தானே?

'நித்திய புருஷனிடம் அமைந்த குணங்களை நாமும் வளர்த்து அவற்றை நம்மூலமாக வெளிப்படுத்த வேண்டும்' என்று முயன்று அந்தப் புருஷனிடம் நம்பிக்கை கொள்வதே தருமத்தின் லட்சணம். இப்படிப்பட்ட குணங்கள் தனித்தனி மனிதனிடம் இயல்பாகவே அமைந்திருந்தால், பின்னர்த் தருமம் என்பது தேவையில்லை, அதனால் ஆவது ஒன்றும் இல்லை என்றே சொல்ல வேண்டி வரும். ஆதியில் தோன்றியது மிருக சுபாவம்; மனிதனை அது தூண்டி வருவதையே அவன் தோன்றியதுமுதல் பார்த்து வருகிறோம். இந்த மிருக சுபாவம் நமக்கு அவசியமான உடனடித் தேவைகளை நிறைவேற்றிகொள்ளப் பயன்படுகிறது.

ஆனால் அந்தரங்கத்தில் இதற்கு மாறான ஒரு விதப் போக்கைக் காணலாம். இதுதான் எங்கும் பரந்த மனித சுபாவம். இப்படி ஒன்றுக்கொன்று முரணாக உள்ள போக்கை இணைப்பதுதான் தருமத்தின் வேலை. புருஷன் என்ற சத்தியத்துக்கு இந்த மிருக சுபாவம் பணிந்து போகும்படி செய்கிறது தருமம். நாம் பல பெயர்களும் உருவங்களும் கற்பித்துப் போற்றும் நித்திய புருஷனிடம் நமக்குள்ள நம்பிக்கை உறுதிப்படும்போது,

தருமத்துக்கு அது பக்கபலமாக விளங்குகிறது. நம்மிடம் காணும் இந்த இரண்டு சுபாவங்களுக்கும் மிக அகன்ற முரண்பாடு உண்டு. பரமபுருஷனுடைய உண்மையை உணர்த்தும் தம் தருமத்தை உலகத்துக்குக் காட்டுவதற்காகவே பலர் தமக்கு அவசியமாக இருந்த தேவைகளை மனப்பூர்வமாகத் துறந்து மரணத்தையும் விரும்பி ஏற்றிருக்கிறார்கள்.

பரமபுருஷன் யார் என்பதை நம் கற்பனைசக்தியினாலேயே உணருகிறோம்; மனத்தினால் அவனைப் படைத்துக்கொள்ள முடியாது. தனி மனிதர்களைவிட அவனே உண்மையானவன்; நம்மையெல்லாம் கடந்து - நமக்கு அப்பாற்பட்டு - எங்கும் பரவி விளங்குபவன் அந்தத் திவ்விய புருஷன். மகத்தான ஒரு குறிக்கோளைக் கருத்திலே கொண்டு அவன் எண்ணும் எண்ணமெல்லாம், நாம் உலகில் அநுபவ உண்மைகள் (Facts) என்று கருதும் தடைகளையெல்லாம் மீறி முறையான சத்தியத்தை நாடிச் செல்கின்றன. தனித்தனிப் பிறவிகளான நாம் அவனுடைய படைப்பில் ஒரு பகுதியாக இருப்பவர்கள். அவனுடைய நோக்கமும் நம் குறிக்கோளும் ஒத்துப் போகாமல் இருக்கலாம். அவன் செல்லும் வழிக்குக் குறுக்கே எவ்வளவோ தடைகளை நாம் ஏற்படுத்தி, நமக்கு நாமே அழிவைத் தேடிக்கொள்ளலாம். ஆனால் நாம் ஒருமைப்பட்டு அவனோடு ஒத்துழைப்பதாலேயே உண்மையான தருமத்தை உணர முடியும். அப்போது நாம் படும் துன்பமும், நாம் புரியும் தியாகமும் நமக்குப் பேரானந்தம் அளிப்பதைக் காணலாம். அந்த மகாத்மனிடம் - பரமபுருஷனிடம் - நாம் அன்பு செலுத்துவதால், அவனிடமிருந்து தோன்றி ஒளி வீசும் பேரன்பை நாமும் உணருகிறோம்.

சீனாவில் வாழ்ந்த லாவா-த்ஸே என்ற மகான்,

''இறந்தும் அழியா தவனேஎன் றென்றும்
நிலைபெற்று வாழு பவன்''

என்று கூறியிருக்கிறார். அந்த மாதிரி ஒரு மனிதன்

நித்திய புருஷனின் அம்சமாக விளங்குகிருன் என்பதே இதன் பொருள். இத்தகைய 'நிலைபெற்ற வாழ்வு' வாழ வேண்டுமென்ற உற்சாகத்தில்தான் மனிதர்கள் நீடித்து உயிர் வாழ எவ்வளவோ பாடுபடுகிருர்கள். நம் சாஸ்திரங்களிலும், ''அதருமத்தினுல் மனிதன் செழித்தோங்கிப் பலரும் ஆவலோடு விரும்பும் பொருளை அடைந்தாலும் சரி, பகைவர்களை வென்ருலும் சரி, அவன் வேருடன் கெடுவான்'' என்று சொல்லியிருப்பதைக் காணலாம். 'நிலையற்ற உலக வாழ்வைவிட நிலையான உண்மை வாழ்வு ஒன்று உண்டு' என்பதையே இது உணர்த்துகிறது.

அறிவிலும் இரக்கத்திலும், செயலிலும், பண்பிலும், ஆக்க முயற்சிகளிலும் நித்திய புருஷனிடமுள்ள விசேஷ அம்சங்களைக் காணலாம். வாழ்வு இந்தத் தன்மையால் மதிப்புப் பெற்றுப் பயன் அடைகிறது. மனித சரித்திரம் தொடங்கியதிலிருந்து எதனை இழந்தாலும் நாம் வாழ்வுக்குரிய இந்த 'மதிப்பை'யே முக்கியமாகப் போற்றி வருகிருேம்; வாழ்வில் வெற்றி பெறுவதை மட்டுமே முக்கியமாகக் கொள்வதில்லை. ''நம்மிடமே அந்த நித்தியபுருஷனை உணர முயற்சி செய்து வருகிருேம். அப்போதுதான், இறந்தும் அழியாதிருப்போம்'' என்றும் இதை விளக்கலாம்.

**'தம் வேத்யம் புருஷம் வேத, யதா மா வோ ம்ருத்யு: பரிவ்யதா:'**- 'இறப்பால் அவதிப்படாதிருக்கப் பரம் பொருளை உணர்வாயாக.'

இந்த வார்த்தைகளின் பொருளைப் பார்த்தால் முரணுக இருப்பதாகவே படும்; நாம் நம் புலன்களாலும் பகுத்தறிந்து ஆராய்வதாலும் இது பொருத்தம் என்பதை நிரூபித்துவிட முடியாது. ஆனுலும் இந்த உபநிடத வாக்கு மிகவும் சக்தி வாய்ந்தது; இதனுல் பலர் அச்சம், அவா (பேராசை) ஆகியவற்றை விட்டு, மிருக சுபாவத்தோடு ஒட்டிய உணர்ச்சிகளையெல்லாம் வென்றிருக்கிருர்கள். ஏன் தெரியுமா? பரமபுருஷனுக்கு

உரிய (நித்திய)வாழ்வை ஏற்று அமரர்களாக விளங்குவதற்குத்தான். இதில் விசேஷம் என்னவென்ருல், ''வாழ்வாவது மாயம் (வாழ்வு உண்மையல்ல)'' என்று அவர்கள் கருதி வருகிருர்கள். அப்படி இருந்தும் நித்திய வாழ்வுக்காகத் தாம் முடிவாகக் கொண்ட எதையும், கண்ணெதிரில் கண்டு தாம் நம்பி வந்த அநுபவ உண்மைகளையும் புறக்கணிக்கத் தயாராயிருக்கிருர்கள்.

இந்த லட்சியத்தைத்தான் 'பாரமார்த்திகம்' அல்லது ஆத்மிகம் என்கிருேம். இந்தச் சொல் தெளிவாக இல்லை: ஆனுலும், பூவுலக வாழ்வுக்கு அப்பால் மங்கலாக ஆத்ம சொரூபமாய் விளங்கும் புருஷனை இதிலிருந்து ஒருவாறு உணர்கிருேம். ஸ்தூல உடல் கொண்ட மனிதனைவிட (ஆத்ம சொருபமாய் விளங்கும்) அந்தப் புருஷனிடமே நமக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. மனித சரித்திரம் தெளிவற்று இருந்த ஒரு காலத்திலேகூட, தான் காணும் அநுபவ உண்மைகள் நிலையற்றவை என்றே மனிதனுக்குப் பட்டது. 'நாம் நலமுடன் வாழ, திரைக்குப்பின் உள்ள பரம ரகசியத்துடன் பூரண உறவு கொள்ளவேண்டும்; பெருவாழ்வு ஒன்று நமக்காகக் காத்திருக்கிறது; அது இந்த உலகத்தில் வெறும் ஊன் உடலுடன் நீடித்து வாழ்வதைவிடச் சிறந்தது' என்பதையும் உணர்ந்தான்.

நம் ஸ்தூல உடல் இந்த மண்ணுலகில் வாழ்வது உண்மை என்பதற்கு இந்த உலகமே சான்ருக விளங்குகிறது. ஆகையால், இந்த உலகத்தையே நம் விசுவரூபம் என்று சொல்லலாம். அதுமட்டும் இராவிட்டால் தனித்தனியாக உள்ள மனித உடல் ஒன்றுமே செய்ய முடியாது. இந்தப் பூவுலகத்தில் நாம் சுதந்தரமாகப் பழகப் பழக, நாம் இங்கே வாழ்வது எதற்காக என்று மேலும் மேலும் புரிந்து வருகிறது. உலகத்தில் நமக்கு வேண்டியன யாவும் கிடைத்துவிட்டன என்ற திருப்தியால் ஒரு மகிழ்ச்சி ஏற்படும்; வாழ்வின் உண்மை

விளங்க விளங்க அதைவிடப் பெருமகிழ்ச்சி ஏற்படும். நிறைவான ஒரு லட்சியத்தை உணரும்போது, அது ஆழ்ந்த பொருள் பொதிந்திருப்பதாய் நமக்கு ஓர் (ஆத்ம) அநுபவம் ஏற்படுகிறது. அழகும் கம்பீரமும் பொருந்திய ஒரு தத்துவத்தை உணரும்போதும் நம் உள்ளத்தில் ஒரு நிறைவும், நாம் வாழ்வது உண்மையே என்ற பெருமிதமும் தோன்றுகின்றன. அப்போதும் அதே மாதிரி (ஆத்ம) அநுபவம் நமக்கு ஏற்படுகிறது. இதனுல் மனிதனுடைய நம்பிக்கை-நிரந்தரமாக இல்லா விட்டாலும் - உறுதியாகிறது. மனிதர் வாழும் உலகத்தை நன்கு உணர்ந்த ஒரு லட்சியத்தில் அவனுக்குள்ள நம்பிக்கை வலுக்கிறது. மனிதனுடைய உள்ளுணர்வு எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறதோ அதற்கேற்ப அவன் அநுபவத்தில் கண்டறிந்த உண்மை அழகாகவோ அழகின்றியோ, ஒளிபொருந்தியோ, மங்கலாகவோ இருக்கும்.

மனிதனுடைய மதக் கோட்பாட்டுக்கு என்ன பெயர் இருந்தாலும் சரி, அது எத்தகையதாக இருந்தாலும் சரி, நிறைவான புருஷன் என்ற அவனுடைய லட்சியம், தனி மனிதர்முதல் (மனிதனுடைய நித்தியத் தன்மையை உணர்த்தும்) பரமபுருஷன்வரை உள்ள ஓர் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கிறது. மனித நாகரிகத்தில் இந்தக் கருத்துப் பூரணமாக உருப்பெற்று அமையும்போது சத்தியம் பலவகையில் சிறப்புற்று விளங்குவதைக் காணலாம். மனிதனுடைய தன்மையை விளக்குவதே இந்தச் சத்தியத்தின் தொழில்; வாழ்வில் வெற்றி பெறுவது ஒன்றே இதன் லட்சியம் அன்று. ஆனுல் இது போன்று ஆக்கம் தரும் ஒரு லட்சியம் அல்லது தருமம் இருக்கவேண்டிய இடத்தில், பல பேருக்குத் தீயவேட்கை தலைதூக்கி விட்டால் போதும்; ஒரு நட்சத்திரம் குபீரென்று பற்றி எரிந்து பேரொளி வீசித் தானே அழிந்து போவதுபோல் மனித நாகரிகமும் அழிகிறது.

குழந்தையாக இருந்தபோது எனக்குத் தோன்றிய படியெல்லாம் சிறு சிறு பொருள்களால் பொம்மை செய்துகொள்வேன். என் கற்பனையில் தோன்றிய விளையாட்டெல்லாம் ஆடுவேன். அவ்வளவு சுதந்தரம் இருந்தது எனக்கு. என் நண்பர்களும் இதில் கலந்து கொண்டு மகிழ்ச்சியோடு இருப்பார்கள்; இன்னும் கேட்டால், அவர்கள் என் விளையாட்டில் கலந்துகொண்டதால்தான் எனக்கும் ஆட்டத்தை நன்றாக ரசிக்க முடிந்தது.

இப்படிக் குழந்தைகளாகிய நாங்கள் எல்லாரும் சொர்க்கத்தில் இருப்பதுபோல் ஆனந்தமாகப் பொழுது போக்கி வந்தோம்; ஒரு நாள், பெரியவர்கள் வியாபாரத்துக்காக விளையாட்டுச் சாமான் தயாரித்து விற்கும் இங்கிலீஷ் கடையிலிருந்து, எல்லாருக்கும் ஆவலூட்டும் ஒரு பொம்மை வந்து சேர்ந்தது. இதை என் நண்பர்களுள் ஒருவனுக்கு வாங்கிக் கொடுத்தார்கள். இது நன்றாகவே இருந்தது; பெரியதாகவும், உயிரோடு இருப்பது போல அற்புதமாகவும் இருந்தது. அந்தப் பையனுக்கு இந்தப் பொம்மையை வைத்திருப்பதே ஒரு பெருமையாக இருந்தது. அப்புறம் ஆட்டத்தில் அவன் அவ்வளவாக ஈடுபடவில்லை. அதிக விலை கொடுத்து வாங்கின அந்தப் பொம்மையை அவன் எங்கள் கைக்கு எட்டாமல் பாதுகாப்போடு வைத்திருந்தான். தனக்கே அது சொந்தம் என்று பெருமைப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய நண்பர்களான எங்களிடம் இருந்த பொம்மைகள் விலை மலிவானவை. அதனால், அவன் மற்றவர்களைவிடத் தான் உயர்வானவன் என்று எண்ணிக்கொண்டிருந்தான். இந்தக் காலத்துச் சரித்திரப் புத்தகங்களில் காணப்படும் மொழிநடை அவனுக்குத் தெரிந்திருந்தால், அவன் என்ன சொல்லியிருப்பான் தெரியுமா? எங்களையெல்லாம்விடத் தான் நாகரிகமானவன் என்றுதான். அவ்வளவு ஒழுங்கான பொம்மைக்குச் சொந்தக்காரன் இல்லையா அவன்?

ஆனல் அந்தப் பரபரப்பில் அவன் ஒன்றைக் கவனிக்கத் தவறிவிட்டான்; அந்தச் சமயத்தில் அவனுக்கு அது ஒன்றும் முக்கியமாகப் படவில்லை. அந்தப் பொம்மையையும்விட அழகுடன் அமைந்த ஒன்றை அவனுடைய சபலம் மறைத்துவிட்டது; மனிதனுடைய உள்ளத்தில் குடிகொண்ட ஈடு இணையில்லாத குறையற்ற குழந்தைத் தன்மையைத்தான் அது மறைத்துவிட்டது. அந்தப் பொம்மை பையனுடைய செல்வ நிலையைத்தான் வெளிப்படுத்தியதேயொழிய, அவனுடைய இயல்பையோ குழந்தைக்குரிய ஆக்க உணர்ச்சியையோ, விளையாட்டில் தாராளமாக அநுபவிக்கும் குழந்தையின்பத்தையோ, தனக்கு ஈடான மற்றக் குழந்தைகளோடு குழந்தையாக ஒன்றியிருக்கும் தன்மையையோ அது காட்டவில்லை. நாகரிகம் என்பது மனிதனுடைய தருமத்தை உணர்த்துவதற்காக ஏற்பட்டதே தவிர, அவனுடைய திறமை, வலிமை, உடைமை இவைகளை மட்டும் காட்டிக்கொள்வதற்காக ஏற்பட்டுவிடவில்லை.

ஒரு சமயம் கல்கத்தாவுக்கு நூறு மைல் தூரத்தில் இருந்த ஓர் ஊரிலிருந்து மோட்டார் காரில் கல்கத்தாவுக்குப் புறப்பட்டேன். யந்திரத்தில் ஏதோ கோளாறு; ஆகவே, அரை மணி நேரத்துக்கு ஒரு தரம் ரேடியேட்டரில் தண்ணீர் ஊற்றவேண்டியிருந்தது. முதல்முதல் ஒரு கிராமத்தில் மோட்டார் நின்றுவிட்டதும், அங்கே இருந்த ஓர் ஆளைப் பார்த்து, ''கொஞ்சம் தண்ணீர் வேண்டும், அப்பா'' என்றேம். தண்ணீர் கொண்டுவர அவன் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமன்று. அப்புறம் அவனுக்கு இனம் கொடுக்கப் போனேம். ஏழையாக இருந்தும் அவன் அதை வாங்கிக் கொள்ளவில்லை; வேண்டாம் என்று சொல்லிவிட்டான்.

இப்படியே பதினைந்து கிராமங்களில் நடந்தது. உஷ்ணப் பிரதேசத்திலே வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர் தேவையாக இருப்பது இயல்பு. அதிலும் கோடையில் (கிணறு குளங்களில்) தண்ணீர் வற்றிவிடு

வதால், தண்ணீர் மொண்டு வைத்து வேண்டுபவருக்கு ஊற்றுவது வழக்கம்; இதை ஒரு கடமையாகவே அங்குள்ளவர்கள் கொண்டிருக்கிறார்கள். தேவை இருந்தால் சாமான் வாங்கி விற்பனை செய்வதுபோல் இதையே வியாபாரமாக வைத்துக்கொண்டு அவர்கள் பணம் சம்பாதிக்க முடியும். ஆனால் அவர்கள் தருமம் என்று கொள்ளும் ஒரு லட்சியம் அவர்களுடைய வாழ்வோடு வாழ்வாக இணைந்துவிட்டது. இந்தத் தருமசிந்தை தங்களிடம் இருப்பதுபற்றிக் கூறித் தாங்கள் புண்ணியசீலர்கள் என்று அவர்கள் பெருமை பாராட்டிக்கொள்வதுமில்லை.

லாவோ-த்ஸே என்ற மகான், நல்லவனுடைய லட்சணத்தைப்பற்றி விவரிக்கும்போது, ''அவன் யாவற்றையும் இயக்குகிறான்; ஆனால் தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்வதில்லை. அவன் செயல் புரிகிறான்; ஆனால் உரிமை பாராட்டுவதில்லை. புண்ணியம் செய்கிறான். ஆனால் அந்தப் புண்ணியத்தின் பெருமையில் பங்கு கொள்வதில்லை'' என்று சொல்லியிருக்கிறார். நமக்கு வெளியே உள்ளதை நாம் விற்கலாம்; நம்மோடு இணைந்திருப்பதை எப்படி விற்க முடியும்? இப்படி நம்மோடு சத்தியத்தை ஒன்றுபடுத்திப் பார்ப்பதுதான் நிறைவான சொர்க்க வாழ்வு. அகந்தை என்ற நரகத்தைக் கடந்து விளங்குவது அது. அதை அடைந்துவிடுவது என்றால், மனித நாகரிகம் வெகுதூரம் முன்னேறிவிட்டது என்பதுதான் பொருள். யாரோ வழிப்போக்கனுக்குத் தண்ணீர் வேண்டும் என்பதற்காகத் தாங்கள் சிரமப்பட்டுங்கூட அதைப்பற்றி இவர்கள் பெருமை பாராட்டிக்கொள்ளாமலே இருப்பதைப் பார்க்கிறோம். பார்ப்பவர் ஆச்சரியப்படும்படி ஒரு நிமிஷத்துக்கு ஏராளமான சாமான்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில் திறமையையும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ''இதென்ன மடமை! இவ்வளவுதானே; இதென்ன பெரிது!'' என்றெல்லாம் தோன்றலாம்.

ஒரு கோடீசுவரன், 'உணவுப் பண்டம் எங்கெங்கே கிடைக்கிறதோ அங்கெல்லாம் போய் அவைகளை மடக்கி வாங்கி, உலகம் முழுவதையும் பட்டினி போட்டுப் பின்னும் பணக்காரன் ஆகலாம்' என்ற எண்ணத்துடன் சுற்றுப் பிரயாணம் செய்யக் கிளம்புகிறான். அவன் மணிக்கு அறுபது மைல் வேகத்தில் மோட்டாரில் வேக மாகப் போய்க்கொண்டிருக்கிறான். அப்போது கிராமவாசி நீர் கொண்டுவந்து உதவின 'எளிமை'யான செயலை அவன் நிச்சயமாகப் பொருட்படுத்தமாட்டான். 'நம் மைப்போல் பெரிய மனிதன் இதைக் கவனிப்ப தாவது!' என்ற மனோபாவத்தோடுதான் போவான்.

'எளிமை'யானதுதான்; இயல்புதான்! கனவான் கனவானாக இருப்பது வழக்கந்தான் என்பது போலவே இதுவும் இயல்புதான். ஆனால் இந்த எளிமையான பண்பு மனிதன் யுகம் யுகமாக இத்தகைய ஒரு பண்பாட்டில் ஊறியிருப்பதால் ஏற்பட்டது. இப்படிப்பட்ட எளிமை யான சுபாவம் அவ்வளவு விரைவில் கற்றுக்கொண்டு விடக்கூடியதல்ல. இன்னும் சில வருஷங்களில் 'ஒரு சக்கரத்தைச் சுழற்றினால் எப்படி ஆயிரக்கணக்கான ஊசிகளுக்குத் தொளை போட முடியும்' என்ற வித்தையை நான் கற்றுக்கொண்டுவிட முடியும். ஆனால் பகைவனாக இருந்தாலும் சரி, அந்நியனாக இருந்தாலும் சரி, 'விருந் தாளி என வருபவனை உபசரிக்க வேண்டும்' என்ற எளிய மனப்பான்மை இருக்கிறதே, அது உண்டாகத் தலைமுறை தலைமுறையாகப் பயிற்சியும் அநுபவமும் பெற வேண்டும். எளிமை தனக்குள்ள மதிப்பைப் பாராட்டிக் கொள்வதில்லை; கூலியும் கேட்பதில்லை. இதனால்தான் அதிகாரப் பித்துப் பிடித்தவர்கள், 'இப்படி எளிமை யாக ஆத்மிக உணர்ச்சியை வெளியிடுவதுதான் நாகரிகத் தின் சிறப்பு' என்பதை உணரவில்லை.

நாகரிகம் சீர்குலைந்தால் உயர்வான வாழ்வின் விளை வாகக் கிடைத்த எளிமை என்னும் அருமையான கனி சிதைந்துவிடும். நாகரிக ஆயுதங்களைக் கொண்டு மட்ட

மான இயல்பு உள்ள பேராசைக்காரர்கள், அற்புத அழகு படைத்து அருமையாகக் காணும் ஒரு பறவை யினத்தை நிர்மூலமாக்குவது மாதிரிதான் இதுவும் முடியும். இப்படியும் நடக்கும் என்பதைக் கல்கத்தாவி லேயே ஒரு பேட்டையில் பார்த்துத் தெரிந்துகொண் டேன். பணக்காரர்கள் வாழும் இடம் அது; பல திசை களிலும், பல துறைகளிலும் முன்னேறி விளங்கும் இடம். தண்ணீர் அங்கே சுலபமாகக் கிடைக்கும்; ஏராளமாகவும் கிடைக்கும். அந்த ஓர் இடத்தில்தான் எங்களுக்குத் தண்ணீர் கொடுத்ததற்காகக் காசு வாங் கினார்கள்!

இதிலிருந்து ஒன்று தெரிகிறது: ''ஒரு சமயம் நல்ல குணமெல்லாம் இணைந்திருந்த அந்த மக்கள் இப்போது அதை இழந்துவிட்டார்கள்; 'சொந்தத் தேவைகளை முக்கியமாகக் கவனிப்பதைவிட உள்ளத்தில் பரந்த நோக்கம் பொருந்தி வாழ்வதுதான் உயர்வானது' என்ற பண்பை இழந்துவிட்டார்கள்'' என்பதுதான். தன்னலம் கருதும் ஆத்மா லாபத்தைக் கணக்கிடுவதிலேயே நாட் டம் செலுத்துவதால் அழகு உணர்ச்சி, ஈகை இவற்றை இழந்துவிடுகிறது. அப்போது அது வெறும் 'அகந்தை' யாகவே காட்சியளிக்கிறது; விசுவபுருஷனாக விளங்குவ தில்லை.

அதர்வ வேதத்தில் ஓர் இடத்தில் இவ்வாறு கூறப் படுகிறது: 'மனிதனுக்கு இசை அறிவைக் கொடுத்த வன் யார்?' என்ற கேள்வி எழுகிறது. பறவைகள் ஒரே பண்ணைத் திரும்பத் திரும்பப் பாடுகின்றன. மனிதனோ சங்கீத உலகத்தையே படைத்துவிடுகிறான். புதுப் புதுச் சீர்கள் பொருந்தும்படி பல சுரங்களைக் கொண்டு எவ்வளவோ பண்களை அமைத்துவிடுகிறான். விவரிக்க முடியாத பிரபஞ்ச சிருஷ்டி ரகசியத்தை அவ னுக்கு இவை உணர்த்துகின்றன. இவற்றால் அவனுடைய உள்ளத்தில் ஓசை இன்பம் ஏற்படுகிறது. அதனால் அவன் கண்ட அநுபவ உண்மைகள் நித்திய சத்தியமாக மாறுகின்

றன. இந்தப் பண் ஒலிகள் அவனுடைய செவிப்புலனுக்கு மட்டும் இன்பம் அளிக்கவில்லை; அவனுடைய அந்தரங்கத்தில் இருக்கும் 'ஆத்ம'னுக்கும் இன்பம் அளிக்கின்றன; எல்லாப் பண்புகளும் பொருந்திச் சீராக அமையும் ஒரு லட்சியம் சித்தியாகிறது. 'ஆத்ம'னுக்கு இதனால் திருப்தி ஏற்படுகிறது.

'இதுபோன்று சீராக இணைந்த ஒரு நிலையில்தான் உண்மை உருவாகித் தன்னைத் தானே அறிந்துகொள்கிறது' என்று மனிதனுடைய மனத்தில் எப்படியோ பட்டுவிட்டது. தன் சிறப்பான தன்மையை வெளியிட அவன் ஒரு கருவியைத் தேடுகிறான். அதில் லயமும் ஒற்றுமையும் இருக்கின்றனவா என்று பார்க்கிறான்; சங்கீதம் அத்தகையதுதான். விசுவபுருஷனை உலகத்துக்குக் காட்ட வேண்டும் என்ற உணர்ச்சி நமக்கு ஏற்படும்போது நாம் கலைகளையும் இலக்கியத்தையும் படைக்கிறோம். நிறங்கள், அசைவுகள், இலக்கியச் சொற்கள், எண்ணங்கள் முதலியவை தம்மிடம் பொருந்திய லயத்தின் மூலம், நாம் மேலாகக் காண்பதைவிட விரிவான ஒரு பொருளை நமக்கு உணர்த்துகின்றன; அடைபட்டுக் கிடந்த மனச் சாளரத்தின் கதவைத் திறந்து 'நித்திய புருஷன்' என்ற பெரிய உண்மையை அவை நமக்கு உணர்த்துகின்றன. பொங்கி வழியும் செல்வம் அவை; நாம் எந்த நாட்டினராக இருந்தாலும் சரி, எந்தக் காலத்தவராக இருந்தாலும் சரி, அந்த இலக்கிய - கலைச் செல்வங்கள் நம் எல்லாருக்கும் பொதுச் சொத்து என்று உரிமை கொண்டாடுகிறோம். ஏனென்றால், விசுவபுருஷனுடைய சிந்தனையினால் தூண்டப்பெற்று எழுந்த படைப்புக்களே அவை.

கலைகள், இலக்கியங்கள் மூலமாக மட்டுமன்றித் தன் நடத்தையினாலும் தனி மனிதன் தன் சிறப்பை உணர்த்த ஒரு லட்சியத்தை வலியுறுத்த வேண்டும்; அந்த லட்சியம் எல்லாரும் பொதுவாக மதித்துப் போற்றக்கூடிய உண்மைச் சிறப்புப் பொருந்தியதாக இருக்க

வேண்டும்; அதாவது, தன் ஒழுக்கத்திலும் சூழ்நிலையிலும் இசைப் பொருத்தம் தோன்றும்படி மனிதன் பார்த்துக் கொள்ள வேண்டும். நாகரிகம் என்பதே மனித இனத்தின் படைப்புத்தான். விசுவபுருஷனுடைய ஆற்றலை மனித இனம் இப்படி வெளியிடுகிறது.

முதல் முதலாக நான் ஜப்பானுக்குப் போயிருந்த போது மனித வாழ்க்கையில் ஒன்றுக்கு ஒன்று மாருன இரண்டு பண்புகளைக் காண முடிந்தது. ஒரு பகுதியில் பழைய சமூக லட்சியம், அழகு வகைகள், ஒழுக்க விதிகள் ஆகியவை ஓங்கிநின்றன. மற்ருெரு பகுதி, உலகத்திலுள்ள எல்லா இடங்களிலிருந்தும் செல்வம் ஓயாமல் கொண்டு வந்து சேர்க்கும் நீரோட்டம் போன்றது. ஒரு நாள் திடீரென்று முன்னேற்றம் என்னும் பெருஞ் சக்தி புயல் போல் வந்து அந்த நாட்டுக்கு அவமானம் விளைத்தது; அதை மிரட்டி உருட்டியது. அப்போதுதான் ஜப்பான் தானும் முன்னேற்றத்தைக் கைக்கொண்டு அரை நூற்ருண்டுக்குள் வெகு தூரம் முன்னேறிவிட்டது.

பல வருஷ காலம் அநாதைபோல் திண்டாடிய சீனுவும் விழித்தெழுந்துவிட்டது; முன்னேற்றத்திஞல் ஆதியில் பாதிக்கப்பெற்ற சீன நாடும் அந்த முன்னேற்றத்தையே கைக்கொண்டு வெற்றி பெற அதிக நாள் பிடிக்காது என்று உறுதியாகச் சொல்வேன். ஆனுல் ஜப்பானிய நாகரிகத்துக்கு உயிரும் உடலும் அளித்த லட்சியங்கள், எண்ணற்ற எத்தனையோ தலைமுறையாக நம்பிக்கையோடு போற்றி வளர்த்தவை; அந்தப் பழைய யுகங்களில் ஜப்பான் சந்தர்ப்பத்தை நாடி அதைப் பயன்படுத்தும் வழியையே முக்கியமாகக் கொண்டிருக்கவில்லை. ஓய்வு அப்போது அதிகமாக இருந்தது. வாழ்வு அழகுடன் மலர்ந்து, அறிவு கனிந்து விளங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை அதுதானே?

ஒரு பக்கம் ஜப்பானில் தற்கால ரீதியில் அமைந்த ஆலைகளைப் பார்க்கலாம்; யந்திர முறையைப் பயன்படுத்தி இயங்கும் நிலையங்கள், உற்பத்தி செய்யும்

யந்திரங்கள், புத்தம் புதிய அழிவுச் சாதனங்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. மற்ருெரு பக்கம் பார்த்தால், நல்ல வேலைப்பாடு அமைந்த மெல்லிய பீங்கான், கண்ணுடிக் கிண்ணங்கள், பட்டுத் துணிகள், உயர்வும் எளிமையும் கலந்து விளங்கும் கட்டிட வேலைப்பாடு, அங்க அசைவில் பரிபூரணமான ஒரு நயம் (ஒயில்) இவற்றைக் காணலாம். ஜப்பானியர் அன்ருடம் பிறரிடம் மரியாதையோடு பழகும் முறையைக் கவனிப்போம். அதற்காக, நேரம் போவதையும் கவனியாமல் எவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்கிருர்கள், தெரியுமா?

ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாகக் கற்று அறிந்ததால் இந்தப் பண்புகள் அவர்களிடம் தோன்றி விடவில்லை; உண்மையான இயல்புக்கு மதிப்புக் கொடுத்து அது தீவிரமாக நனவில் ஊறி ஊறி ஏற்பட்டவை அவை. இப்படிப் பரிபக்குவம் அடைய வெகு காலம் பிடித்திருக்கிறது. 'தந்தி, ரெயில், உற்பத்தி யந்திரம், மக்களைக் கொல்லும் ஆயுதங்கள் இவைகளையெல்லாம் ஜப்பான் மிகவும் திறமையாகக் கையாளும் போது வெளியாகும் ஒரு பண்பை, அதே மாதிரி பயிற்சி பெறச் சந்தர்ப்பம் கிட்டிய மற்ற நாடுகளிலுந்தான் பார்க்கிருேம். ஆனால் வாழ்க்கைக் கலையிலும், சித்திரங்களிலும், ஒழுக்க விதிகளிலும், மதம், சமூகம்பற்றிய லட்சியங்களிலே பல உருவில் காணும் சௌந்தரியத்திலும், ஜப்பான் தன் தனித்தன்மையை - தன் தருமத்தை - வெளியிடுகிறது. அது மதிக்கக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் தனிப்பட்ட பண்பு அதில் விளங்க வேண்டும்; அதோடு நித்திய புருஷனையும் அந்தப் பண்பு விளக்குவதாக அமைய வேண்டும்.

லாவோ-த்ஸே, "முடிவற்ற பொருளை அறியாததால் காமம், பகை முதலியவை தோன்றுகின்றன. இதுவே தீமை என்பது" என்கிருர். அதோடு, "நாம் இறந்து போகலாம்; ஆனால் நாம் அழிந்து போகக் கூடாது" என்றும் கூறுகிருர். நம் உடல்வாழ்வை

இழக்கும்போது நாம் சாகிறோம்; நாம் மனித சமூகத்தின் பண்பை மறந்து விடும்போது அழிந்து போகிறோம். மனித சமூகத்தின் பண்புதான் மனித தருமம்.

ஒரு முடிவும் இல்லாமல் இந்த உலகத்தில் பொருள்கள் இயங்கி வருவதை நாம் காண்கிறோம்; ஆனால் அதை விட மேலான ஒன்றை நாம் உணர வேண்டும்: மனிதர் வாழும் இந்த உலகில் (ஒப்பற்ற) மனிதப் பண்பு என்ற பரமசத்தியம் உண்டு என்பதைத்தான். இன்று நாம் ஒன்றை மறக்கக்கூடாது: ஒரு நாட்டில் இயக்கம் இருந்தால் மட்டும் அதைச் சிறப்பாகக் கொள்வதற்கில்லை. ஒருவித ஆபத்தான சோம்பல் தன்மைக்கும் அது அறிகுறியாக இருக்கலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். புத்தருடைய உபதேசத்தினால் ஒரு பெரிய ஆத்மிக எழுச்சி ஏற்பட்டது; அது மனிதனுக்குள்ள உண்மையான கௌரவத்தை எங்கும் உணரும்படி செய்தது; அதனால் பல நூற்றாண்டுகள் இலக்கியம், கலை, விஞ்ஞானம் ஆகியவற்றிலும், பொது மக்களுக்குப் பயன்படும் முயற்சிகளிலும் அறிவு ஒளி வீசியது. இந்த இயக்கத்துக்கு மூல சக்தியாக இருந்தது அபரிமிதமான ஞானமோ, அதிகாரமோ, வெறியோ அன்று. நம் தருமம் அல்லது நித்திய புருஷனுடைய உண்மையை அறிந்து நாம் சுதந்தரமாக விளங்க வேண்டுமென்பதற்காக நமக்கு ஊக்கமூட்ட வந்தது இந்த இயக்கம்.

லாவோ - த்ஸே ஓர் இடத்தில், ''தருமசீலர்கள் தங்கள் கடமையைக் கவனிப்பார்கள். தருமத்தைக் கடைப்பிடிக்காதவர்களோ அதற்கு உரிமை கொண்டாடுவார்கள்'' என்று சொல்லியிருக்கிறார். வெளிப் பகட்டைக் கண்டு ஏற்படும் முன்னேற்றம் - அந்தரங்க தருமத்தோடு பொருந்தாத முன்னேற்றம் - நாம் ஓயாமல் விரும்புவதையெல்லாம் கொடுத்து நமக்குத் திருப்தியூட்டப் பார்க்கிறது. ஆனால், (உண்மை) நாகரிகம் என்ற

லட்சியம் எல்லாவற்றையும் துறக்கும் பெருஞ் சக்தியை நமக்குக் கொடுக்கிறது. இந்தச் சக்திதான் அனந்தமான பொருளை உணருகிறது; படைப்புக்கும் ஊக்கம் அளிக்கிறது.

அந்தச் சீன மகானே, ''வாழ்வு நீடிக்கும்படி பார்ப்பதே (உண்மையில்) வாழ்த்தாகும்'' என்கிறார். வாழ்வு நீடிப்பதால் நித்திய வாழ்வு சித்திக்கிறது. வாழ்வில் காணும் ஒற்றுமையுணர்வுக்கு ஓர் எல்லை உண்டு; நித்திய வாழ்வு கிட்டினாலும் இந்த எல்லையையும் மீறி உயிர் வாழ்வு நீடித்துக்கொண்டு போகாது. மலையில் தேவதாரு மரம் உயரமாகவும் பெரிதாகவும் வளருகிறது. அந்த மரத்தைச் சேர்ந்த பகுதிகளில் ஒவ்வோர் அங்குலமும் மரத்தினுள் அடங்கிய லயம் அல்லது இசைவு கெடாதபடி அமைந்து விளங்குகிறது. பார்வைக்கு ஏதோ மிதமிஞ்சிய அலங்கார ஆடம்பரத்தோடு இருப்பதுபோல் தோன்றினாலும் அந்த மரத்துக்கும் ஓரளவுக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் அடக்கமான பண்பு உண்டு. அந்த மரத்துக்கும் அதிலிருந்து உற்பத்தியாகும் பொருள்களுக்கும் அடிப்படையாக இருப்பது ஒன்றே; மரத்தினிடம் அமைந்திருக்கும் லயந்தான் அது. தேவதாருக் கட்டை, பூ, இலை, பழம் எல்லாம் அந்த மரத்தைச் சேர்ந்தவைதான். அவை செழித்து வளர்ந்திருப்பது வீக்கம் போன்ற நோய் அல்ல; அதை வாழ்த்த வந்தவைதான்.

# 11. முக்தி

நம் வாழ்வில் நம்மைப் பல துன்பங்கள் தாக்கு கின்றன. வாழ்வு ஒழுங்காக நடப்பதற்கு அவை தடையாக இருக்கின்றன. இந்த மண்ணுலகத்தோடு நம் பூத உடல் பொருந்தி வாழ்வதே, வாழ்வில் எல்லாம் ஒழுங்காக நடப்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. வாழ்வைத் தாக்கும் துன்பங்களைத்தான் நோய் என்கிறோம். இவை தவிர நம் புத்தியைப் பாதிக்கும் சில துன்பங்களும் உண்டு. இவை, பகுத்தறி யும் இயல்பு உள்ள நம் மனமும், காரண காரியத்தை அடிப்படையாகக் கொண்ட பிரபஞ்சமும் ஒன்றோடு ஒன்று பொருந்தி நிற்பதற்குத் தடையாக இருக்கின்றன. இவைகளைத்தான் மடமை, அறியாமை, பைத்தியக் காரத்தனம் என்று சொல்கிறோம். அடக்க முடியாத காமக்குரோதங்கள் மிதமிஞ்சியதன் விளைவே இவை. நம் மனித இயல்பில் பொருந்திய சிறப்பை இவை குலைத்துவிடுகின்றன; ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக் கும் உள்ள இசைவு புலப்படாதபடி செய்துவிடுகின்றன. இவைகளைத்தான் பாவம் என்கிறோம்.

விசுவபுருஷனை நாம் நம் உடலாலும், பகுத்தறி வாலும் அறிய முயற்சி செய்யும்போது, மடமை, அறியாமை, பைத்தியக்காரத்தனம் ஆகியவை தலை தூக்கிநிற்கும் சந்தர்ப்பங்களில் தடை ஏற்படுகிறது; உலகப் பொருள்கள், மனம், ஆத்மாவைப் பொறுத்த விஷயங்கள் இவைகளைச் சுதந்தரமான முறையில் பார்க்க முடியாமல் குறுகிய ரீதியிலும் கோணல்மாணலாகவும் பார்க்கிறோம்.

இந்தியாவில் உள்ள உன்னதமான அறநெறிகளெல் லாம் ஆத்மாவின் விடுதலை அல்லது முக்தி அடை வதற்கான சாதனையைப்பற்றிக் குறிப்பிட்டிருக் கின்றன. நமக்குள் நாம் தனித்தனிப் பிறவிகள் என்ற

நனவு இருந்து வருகிறது; நம் தனித்தனி இயல்பை முற்றும் அறிந்து அநுபவிப்பதிலும் வெளியிடுவதிலுமே இந்த நனவு ஈடுபடுகிறது. நம் ஆத்மாவில் விசுவபுருஷன் அல்லது பரமபுருஷன் குடிகொண் டிருக்கிருன் என்ற மகத்தான உண்மையை உணருகிறேம். நம் ஆத்மா பரமாத்மனே அடைவதற்காக, 'தான்' என்ற அகந்தையைத் துறப்பதிலே இன்பம் காணுகிறது. துறப்பது என்ருல் தன்னே அழித்துக்கொள்வதன்று; தன்னேயே அர்ப்பணம் செய்வதுதான். ஒருவித உள்ளுணர்விஞலேயே இப்படித் துறக்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்படுகிறது. இதன் பொருள் என்ன என்பது இந்த உள்ளுணர்வுக்குச் சிறிதளவே புரிந்திருக்கிறது; தன் கருத்தை விளக்கும் முறையில் இதற்குப் பொருத்தமான பெயர் என்ன என்றும் தேடுகிறது. நிறைவான ஒரு லட்சியத்தோடு இணேவதுதான் அதன் கருத்து; தனி மனிதனும் பரம புருஷனும் இணேந்து விளங்கும் ஒருவித உறவைத்தான் அது நாடுகிறது.

இந்த இணேப்பு அல்லது லயத்தைப்பற்றித்தான் உபநிடதங்கள் பேசுகின்றன; பொருளற்ற வெறும் சூனியத்தை அவை குறிப்பிடவில்லே: 'எல்லாப் பொருளிலும் தன்னேக் கண்டறிந்தவனிடம் உண்மை ஒளிந்து கிடப்பதில்லே; எங்கும் காணும்படி அது ஒளிருகிறது' என்பதுதான் உபநிடத வாக்கு.

ஒரு சமயம் வங்காளத்தில் ஒரு சிற்றூருக்குப் போயிருந்தேன். அங்கே இருந்தவர்களில் பெரும்பாலானவர் உழவர்கள்; முஸ்லிம்கள். எனக்காக ஒரு நாடகம் நடத்திக் காட்டிஞர்கள் அந்தக் கிராமவாசிகள். பல நூற்ருண்டுகளுக்குமுன் அந்தப் பக்கத்தில் பெயர் பெற்ற ஒரு மதசம்பிரதாயத்தாரின் இலக்கியப் படைப்பு அது. அந்தச் சம்பிரதாயம் இப்போது இல்லே; அது அழிந்து விட்டது; என்ருலும், அதன் குரல்மட்டும் இன்னும் ஒலித்துக்கொண் டிருக்கிறது; அது தன் தத்துவப் பொருளே இந்த மக்களுக்குப் போதித்து வருகிறது.

இத்தனைக்கும் இவர்கள் கலாசாரமே வேறு. அப்படி இருந்தும் இந்தத் தத்துவப் பொருளைக் கேட்பதில் இவர்களுக்குச் சலிப்புத் தட்டவில்லை. அந்தப் பழைய மதசம்பிரதாயக் கொள்கையின்படி இந்தப் பூலோகத்தோடு சம்பந்தப்பட்டும், இதற்கு அப்பாற்பட்டும் விளங்கும் பஞ்ச பூதங்களைப்பற்றி - மனிதனிடம் அமைந்து உடல், 'தான்' என்ற அகந்தை, ஆத்மா என்பனவாய் விளங்கும் மூலாதாரமான பொருள்களைப்பற்றி - நடக்கும் விவாதம் அது. அதில் ஓர் இடத்தில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்கிறது. பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டுப் போக விரும்புகிறுன் ஒருவன். அவனைக் காவற்காரன், 'நீ திருடன்' என்று சொல்லி நிறுத்துகிறுன். யாத்திரிகனுடைய உடைகளைச் சோதனை போட்டதில் அவன் 'தான்' என்ற பொருளையும் வெகு ரகசியமாக ஒளித்து எடுத்துச் செல்வது வெளிப்படுகிறது. அதாவது,' தான்', 'தனது' என்ற தன்மையை விட்டுவிட்டால்தான் நிறைவு கிட்டும்; அதை உணராமல் அவன் இன்னும் தன்னிடம் அகந்தையை ஒளித்து வைத்திருந்தான். இப்படி 'அகந்தை' என்ற பொருளோடு அவன் கையும் மெய்யுமாக அகப்பட்டுவிட்டான்; இந்த 'அகந்தை'யை ஒளித்து வைத்திருந்ததால் அவனுக்கு முக்தி (பிருந்தாவனம்) கிட்டவில்லை.

கிழிந்து கந்தலான துணிப் பந்தல்; அதை மூங்கில் கழிகள் நாலு தாங்கிக்கொண் டிருந்தன. அந்தத் துணிப் பந்தலின்கீழ் மண்ணெண்ணெய் விளக்குகள் ஏற்றி வைத்திருந்தார்கள். அவை புகைந்துகொண்டேயிருக்க, சுற்றிலும் கிராமமக்கள் கூடியிருந்தார்கள். அருகில் நெல் வயல்களிலிருந்து அடிக்கடி நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டுக்கொண்டே யிருந்தது. அப்படியிருந்தும் அலுப்புச் சலிப்பில்லாமல் விடியற்காலை வரையில் அவர்கள் அந்த நாடகத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாததுபோல் தோன்றும் ஆட்டம், பாட்டு, நகைச்சுவை உரையாடல்

ஆகியன அடங்கிய நாடகம்; எல்லாவற்றுக்கும் மூலப் பொருள் என்ன என்பதை அது உணர்த்தியது.

இந்த உதாரணத்திலிருந்து, இந்தியாவில் கவிதையும் தத்துவமும் எத்துணை இயல்பாகக் கைகோத்துக் கொண்டு நடப்பதுபோல் ஒத்து விளங்கின என்பது தெரியும்; மக்களின் வாழ்வு நிறைவு பெறுவதற்குத் தத்துவம் நேரான வழிகாட்டும் உரிமை பெற்றிருந்ததே இதற்குக் காரணம். இந்த நிறைவு என்பதுதான் என்ன? பந்தமற்ற சத்தியத்தை அடைவதே நிறைவு. 'பொய்ம்மையிலிருந்து உண்மைக்கு எங்களை அழைத்துச் செல்வாய்' என்பதே அந்த நிறைவின் கோரிக்கை; ஏனென்றால், உண்மையேதான் ஆனந்தம்.

கலை உலகத்தில் 'தான்', 'தனது' என்ற தளைகளிலிருந்து நம் உள்ளுணர்வு விடுபட்டு விளங்குவதால், எல்லாம் ஒன்று என்ற ஒற்றுமையுணர்வு எந்தவிதத் தடையுமின்றி நமக்குப் புலப்படுகிறது. சத்தியமே இப்படி வெளிப்படுகிறது; இதுவே நித்தியானந்தம் ஆகும்.

கலை உலகத்தைப் போலவே ஆத்மிக உலகத்திலும் நம் ஆத்மா அகந்தை நீங்கிப் பற்றற்ற பேரானந்தத்தை அடையக் காத்து நிற்கிறது. இந்தப் பேரானந்தமே படைப்புக்கு மூலம்; இதுவே படைப்பின் லட்சியம். மகத்தான உண்மை அல்லது சத்தியத்தோடு பொருந்திய விடுதலையை அது நாடி நிற்கிறது; 'முக்தி! முக்தி!' என்று விடுதலையை வேண்டிக் கதறுகிறது. நம் வாழ்வில் இந்த முக்தி என்ற கருத்தினுல் எவ்வளவோ பயன் விளைந்திருக்கிறது; புனிதமான பக்தியுணர்ச்சிக்கும் பிரார்த்தனைகளுக்கும் ஊக்கம் அளித்து ஊற்ருக அவை பெருகும்படி செய்திருக்கிறது. கவிதை என்னும் சிறகு படைத்துச் சொர்க்கத்தை நாடி நிற்கிறது, முக்தி என்ற இந்தத் தத்துவம். குறைந்த கல்வியறிவேயுள்ள சிலர் - ஆடம்பரமின்றிப் பக்தி செலுத்தும் மக்கள் - அம்பிகையான தாரா தேவியைக் குறித்து இப்படிப் பிரார்த்திப்பதைக் கேட்டிருக்கலாம்:

''மாயத் தோற்ற மாக விளங்கும்இவ்
வுலகெனும் இருட்டறை யகத்தே என்ன
பாவம் செய்ததற்(கு) என்னை அடைத்தாய்?
பவப்பிணி அறுக்கும் தாரா தேவி!''

சத்தியலோகத்திலிருந்து எங்கே விலகித் தனித்துப் போய்விடுவோமோ என்றுதான் அவர்கள் அஞ்சுகிறார்கள். பொங்கி நுரையுடன் வழியும் பொருளாசைக்கு இடையே மிதந்து மாறி மாறி வரும் இன்ப துன்பம் என்னும் அலைகள் தூக்கி எறிய, 'எங்கே வாழ்வின் முடிவான பொருளை - லட்சியப் பொருளை - அடையாமல் போய்விடுவோமோ' என்று அஞ்சுகிறார்கள். இத்தகைய மனோபாவம் படைத்தவர்கள் எத்தனையோ பேர்; அவர்களில் ஒருவன் சந்தைக்கு வண்டி ஓட்டிச் செல்லும் சாதாரண வண்டிக்காரனாக இருக்கலாம்.

இன்னும் ஒருவன் வலைவீசி மீன் பிடிக்கும் செம்படவனாக இருக்கலாம். 'இந்தப் பாட்டின் உட்கருத்து என்ன?' என்று கேட்டால் அவர்கள் அவ்வளவு மதி நுட்பமாகப் பதில் சொல்லாமலும் இருக்கலாம்.

ஆனாலும் அவர்களுடைய மனத்தில் என்னவோ ஒரு விஷயத்தைப்பற்றிச் சந்தேகமே இராது; 'துன்பத்துக்கெல்லாம் நிலையான காரணம், வாழ்வில் தேவையான பொருள் நமக்குக் கிட்டவில்லையே என்பதன்று. வாழ்வின் முக்கியமான லட்சியம் மனத்தைவிட்டு மறைந்துவிடக்கூடாது' என்பதுதான் அது.

இந்தமாதிரி மக்கள் பேசும்போது கேட்டால் தெரியும்:

''நான், என்னுடையது என்பதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது; அந்தப் பழக்கம் ஒழியவேண்டும். இந்த அகந்தை இருந்தால் சத்தியத்தை நேராகக் காணமுடியாது. சத்தியமே உருக்குலைந்துவிடும்'' என்றுதான் வழக்கமாகப் பேசிக்கொள்வார்கள். தங்களைவிட மேலான நிலையோ, கல்வியறிவோ இல்லாத பலர் - தங்களைப்போலவே எளிய மக்கள் -

யாவற்றையும் துறந்துவிட்டுச் சத்தியத்தை நாடிப் புறப்பட்டுவிடுவதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள்.

'இப்படித் துணிச்சலாக இவர்கள் புறப்பட்டுவிடுவதற்குக் காரணம் ஏதோ உலகச் செல்வமோ, அதிகாரமோ இல்லை; முக்திதான் இவர்களுடைய லட்சியம்' என்பது பொதுமக்களுக்குத் தெரியும். தங்களைப் போலவே ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஓர் ஏழைக் கிராமவாசி, தினமும் உலகத்தில் தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவந்தாலும் 'பரமாத்மனை மனத்தகத்தே அறிந்த மகாஞானியாகவும் அவன் விளங்குகிறான்' என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

இத்தகைய ஒரு செம்படவனைப் பார்த்திருக்கிறேன்: நாள் முழுவதும் கங்கையில் மீன் பிடித்துக்கொண்டே பக்தி பரவசமாய்ப் பாடிக்கொண் டிருந்தான் இவன். எங்கள் படகோட்டி இவனைப் பயபக்தியுடன் காட்டி, ''அந்த ஆள் மகாஞானி; ஜீவன்முக்தர்'' என்றான். மற்ற மனிதர்களைப்போல் இந்தச் செம்படவனை இன்னரகத்தைச் சேர்ந்தவன் என்று மதிப்பிட முடியாது; பொம்மைக் கடையில் வைத்திருக்கும் பொம்மைகளின் தராதரத்தை நிர்ணயிப்பதுபோல் இவனைச் சீர்தூக்கிப் பார்க்க முடியாது. அவற்றையெல்லாம் கடந்த ஒரு நிலையில் இருந்தான் இவன்.

இவனைப்பற்றிய நினைவு வரும்போதெல்லாம், 'இந்தமாதிரி ஜீவன்முக்தர்களாக இன்னும் எத்தனைபேர் இருக்கிறார்கள்! இவர்கள் ஊரோ பெயரோ யாருக்குத் தெரிகிறது! அப்படியே வாழ்ந்து மறைந்துவிடுகிறார்கள்' என்றுதான் எனக்குப் பட்டது. பாமரர்களான இந்த எளிய மக்களுக்கு, 'உலகத்தை ஆளும் பேரரசன் ஆடம்பர ஆடை அணிகள் பூண்ட வெறும் அடிமைதான்; எப்போதும் தன் பேரரசோடு அவன் விலங்கு பூட்டியதுபோல் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டியிருக்கிறது. அதே மாதிரிதான் கோடீசுவரனும் செல்வம் என்னும் தங்கக் கூட்டில் அடைபட்டுக் கிடக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் இந்தச் செம்படவனே ஞான ஒளியில் ஈடு பட்டுப் பந்தம் எல்லாம் நீங்கி ஜீவன்முக்தனாக விளங்கு கிறான்' என்று தெரியும். (அஞ்ஞான) இருளில் துழாவும் போது எந்தப் பொருள் தட்டுப்பட்டாலும் அதையே முழு நம்பிக்கையுடன் பற்றிக்கொள்கிறோம். ஆனால் (ஞான) ஒளி ஏற்படும்போது நாம் பெரிதென எண்ணிக் கொண்ட பொருள், எல்லாமாக விளங்கும் பரம் பொருளின் ஏதோ ஒரு சிறு பகுதியே என்று புரிந்து கொள்கிறோம். எளிய கிராமவாசிக்கு முக்தி அல்லது விடுதலை என்றால் என்னவென்று தெரியும். " 'தான்' என்பதிலிருந்தும், 'தன் உடைமைகள்' என்ற எண்ணத்தி லிருந்தும் விடுபட்டிருப்பதுதான் முக்தி" என்ற விஷய மும் அவனுக்குத் தெரியும். " 'பந்தம் என்பதே இல்லை; சொந்தம் என்பதும் இல்லை' என்று இருந்துவிடுவது மட்டுமே முக்தி ஆகாது. நம் ஆத்மாவுக்குப் பேரின்பம் ஊட்டும்-தூய்மையான ஆனந்தத்தை அளிக்கும்-ஒருவித அநுபவமே முக்தி" என்பதும் அவனுக்குத் தெரியும்.

அதனால் அவன்,

"ஆழத்தில் மூழ்கி னால்நாம்
அடையாத பொருளும் உண்டோ?"

"என் இருமனமும் கூடி
இந்தஅற் புதநகர்க்(கு) என்னைக்
கொண்டுசெல் வதையே நான்என்
கருத்தினில் கொண்டேன், ஐயா!"

என்றெல்லாம் பாடுகிறான் அவன்.

பல பொருள்களாகக் காட்சியளிக்கும் இந்த வெளி யுலகத்தில் அந்தப் பொருள்களையே நாடி அலையும் வெளி மனமும், ஆத்ம அநுபவத்தால் ஒருமையுணர்வைக் கொண்ட உள்மனமும் முரண்படாமல் இணையும்போது அந்த 'அற்புத'த்தை, சொல்லொணாத ஆனந்தத்தை உணருகிறோம்; இரண்டு மனமும் அதற்குத் துணையாக இருக்கின்றன. பக்த கவி கபீரும் இதையே கருத்தில் கொண்டு பாடுகிறார்:

"'பரம்பொருள் என்ப(து)இவ் வாத்மனிலேயே
பரவியிருப்ப(து); இதுவே உண்மை' என்(று)
உரைத்தால் வெளியுல கம்தனைப் பழித்ததற்(கு)
ஒப்பாம்; 'வெளியே மட்டும் அப்பொருள்
விரவி விளங்கு கின்ற(து)' என்றால்,
வீண்பொய் அதுவும்; உண்மை அன்றே!''

''இரண்டும் இணைந்திருப்பதுதான் உண்மை; இதை உணருவதே முக்திநிலை'' என்பதுதான் இந்தக் கவிகளின் கருத்து. தினந்தோறும் பூஜையின்போது நாம் மந்திரமும் தியான சுலோகமும் சொல்லுகிறோம். நாமும் இந்தப் பிரபஞ்சமும் வேறு வேறு இல்லை என்பதை உணர்ந்துகொள்ளத்தான் - 'நாம் தனி என்று ஒதுங்கி வாழ்வதே பந்தம்' என்று நம் மனம் அறிந்துகொள்ளுவதற்காகத்தான் - இவை ஏற்பட்டன; அத்வைதம் அல்லது பரம ஐக்கியம் என்பதை நாம் உணர்வதற்காகத்தான் இந்த மந்திரம், தியானம் எல்லாவற்றையும் வகுத்தார்கள். இந்த அத்வைதமே அனந்தம் (முடிவில்லாத பொருள்).

இந்தத் தத்துவ உணர்வுதான் - பாரமார்த்திக ஞானந்தான் - இந்தியாவில் பொதுமக்களின் உள்ளத்தில் பரவி விளங்குகிறது. இதுதான் நம் பிரார்த்தனை, தினந்தோறும் நாம் செய்துவரும் தரும அநுஷ்டானங்கள் இவைகளுக்கு ஊக்கம் அளிக்கிறது; வெறும் தோற்றமாக உள்ள இந்த உலகத்துக்கு அப்பால் ஓர் இடத்தை அடையவேண்டும் என்று எப்போதும் நம்மைத் தூண்டியபடி இருக்கிறது. நாம் அநுபவத்தில் கண்ட உண்மைகள் அப்போது நமக்கு உண்மைகளாகவே படமாட்டா; ஏதோ வெளிநாட்டுச் சங்கீதத்தின் ஒலி காதில் விழுவதுபோலத்தான் இருக்கும். இந்தத் தத்துவ உணர்வு நமக்கு, ''பொருள்களின் அந்தரங்க உண்மையை அறிவதிலேயே முக்தி கிட்டும். முடிவற்ற பல பொருள்களும் அந்த ஒரு பரம்பொருளில் இணைந்து விளங்குவதைக் காணலாம்'' என அறிவுறுத்துகிறது.

இந்த வையத்தில் விடுதலை என்றால் இதே பொருள் தான்; உலக இயல்புக்கு ஏற்றபடி அதை உணர்ந்து கொள்கிறோம். ஒரு சமயம், இயற்கையில் காணும் பல வகை நிகழ்ச்சிகள் நமக்குப் பொருத்தமற்றவைகளாக வும், நமக்குப் புலப்படாத ஏதோ சூழ்ச்சியால் பலவித மாகக் காட்சி அளிப்பதாகவும் தோன்றின. நாம் அப் போது ஏதோ அந்நிய உலகில் இருப்பதுபோலவே வாழ்ந்து வந்தோம். இந்த உலகத்திலேயே நாம் விரும்பும் ஆத்மவிடுதலை கிட்டும் என்று கனவுகூடக் கண்டிருக்க மாட்டோம். இந்த இயற்கை நிகழ்ச்சிகளை நம் பகுத்தறிவைக் கொண்டு ஆராயும்போது, ஓர் ஒற்றுமை அல்லது லயம் இவைகளில் இருப்பது தெரியும். அப்போது நாமும் இயற்கையில் இணைந்து நிற்கிறோம் என்பதை உணருகிறோம். இதுவே முக்தி அல்லது விடுதலை.

உலகத்தின் போக்கைத் தவறாகப் புரிந்துகொண்ட வர்கள் அறிவு, புத்திநுட்பம் இவற்றால் அதைத் தம் மிடமே உணரலாம் என்று தெரிந்துகொள்வதில்லை; ஏதோ பயங்கரமான ஒரு விதி இருட்டில் இருந்து கொண்டு தங்களைத் தாங்குவதாகவே நம்பிவிடுகிறார்கள். இதுபோன்ற பயனற்ற நம்பிக்கையிலேயே உழன்று உழன்று இவர்கள் கோழைகள் ஆகிவிடுகிறார்கள். மனித உரிமைகள் தங்களுக்குக் கிட்டாதபோது - அதிகாரம், இந்த உரிமைகள் அவர்களுக்குக் கிட்டாதபடி தடுக்கும் போது - அதை எதிர்த்துப் போரிடாமல் அதற்கு அடி பணிந்துவிடுகிறார்கள்; தாங்கள் இந்த உலகத்தில் பிறக் கும்போதே அடிமைகளாகத்தான் பிறந்துவிட்டதாக எண்ணிவிடுகிறார்கள். தங்களுக்குப் புரியாத பல விபரீத மான அதிசயங்கள் நிறைந்த இந்த உலகத்திலே இப்படி அடிமைகளாகக் கிடப்பது இயல்புதான் என்று அவர் களுக்குத் தோன்றிவிடுகிறது.

சமூகத் துறையிலோ அரசியல் துறையிலோகூட விடு தலை உணர்ச்சி கிட்டாததற்குக் காரணம், 'நாம் வேறு;

பிறர் வேறு' என்ற உணர்ச்சியே-அனைவரும் ஒன்று என்ற உண்மையைச் சரிவர உணராததுதான். துன்புறுத்தி ஏற்படுத்தும் இணைப்பில் அடிமைத்தனந்தானே இருக்கும்?

'மற்றவர்களோடு உறவு கொள்வதென்ருல், ஏதோ நாம் அவர்களுக்குக் கடமைப்பட் டிருப்பதாகத்தான் பொருள்; ஆகவே, தன் கூட்டாளிகளை விட்டுப் பிரிந்து வாழும் மனிதனே உண்மையில் சுதந்தர புருஷன்' என்று நாம் எண்ணிக்கொண் டிருக்கலாம். ஆனல் அதே சமயம், இன்னும் ஒன்றும் உண்மைதான் என்று நமக்குத் தோன்றுகிறது: 'மனித சமூகத்தில் ஒருவரோடு ஒருவர் நன்ருக ஒத்துப் பணிந்து நடந்தால்தான் சுதந்தரம் கிட்டும்' என்பதுதான் அது. இது ஏதோ முரண்போலத் தோன்றலாம். மனிதர்களுக்குள் காட்டு மிராண்டிகள்தான், தாங்களே முக்கியம், தாங்களே வாழவேண்டும், வேறு எந்தப் பொறுப்பும் தங்களுக்கு இல்லை என்று எண்ணிக்கொள்வார்கள். பூரணமான மனிதப் பண்பு அவர்களிடம் உண்டாவதில்லை. எங்கோ கண்காணுத மூலையில் புகை கவியும்படி மூட்டிவைத்த நெருப்பைப்போல் கிடப்பவர்கள் அவர்கள். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒத்துழைக்கும் சக்தி உண்டாலுல்தான் மறைவாக எங்கோ ஒதுங்கி வாழும் நிலையிலிருந்து மீண்டு, சுதந்தர வாழ்வு வாழ முடியும். சுதந்தரம் வளர்ந்த வரலாறும், மனிதர்களுக்குள்ளே உறவு சீர்பட்ட வரலாறும் ஒன்றேதான்.

'வாழ்வே கெடுதலானது' என்று ஏன் பலபேர் சொல்கிருர்கள் தெரியுமா? நம் அகக்கண் குருடாக இருப்பதால், ஏதோ ஒரு முக்கியமான பொருள் நமக்குப் புலப்படாமல் போய்விடுகிறது. அதிலேதான் வாழ்வின் உண்மையே அடங்கியிருக்கிறது. ஒரு பறவை ஒரே இறக்கையோடு பறக்கப் பார்க்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது காற்று அதைக் கீழே மண்ணில் தள்ளிவிடுகிறது. இதற்காகப் பறவை காற்றின்மேல் கோபப்பட்டு என்ன பலன்?

ஆகவே, அரைகுறை உண்மைகளால் தீமையே விளையும். இந்த அரைகுறை உண்மைகள் தங்களிடம் இல்லாத ஒரு பொருளை உணர்த்துவனபோல் பாவனை செய்கின்றன. இந்த நிலையில் அவை மனிதனை நிச்சய மாகவே பாதிக்கின்றன. சாவு என்ற உண்மை நம்மைத் தாக்கவில்லை. ஆனால், நோய் என்ற உண்மை நம்மை மெய்யாகவே தாக்குகிறது. ஏன் தெரியுமா? நம் ஆரோக் கியத்தைப்பற்றி நமக்கு உணர்த்திக்கொண்டே, அதே சமயம் நமக்கு ஆரோக்கியம் கிட்டாதபடி செய்து விடுகிறது, நோய். அரைகுறையாக நாம் அறிந்து கொண்ட உலகத்தில் வாழ்வதும் தீமையையே விளைக் கும். ஏனென்றால், அரைகுறையாக இருந்தும் ஏதோ நிறைவானதுபோல் அது காட்டிக்கொள்கிறது; அமுதத்தைத் தராமல் வெறும் அமுத கலசத்தைத் தான் அது நமக்குத் தருகிறது.

ஆகவே, அரைகுறை உண்மையினால் தீங்கே விளையும். அந்த உண்மை நிறைவு பெற்றுச் சக்கர வட்டம்போல் (Cycle) உருவாகாததே இதற்குக் காரணம். தனி மனிதன் விசுவபுருஷனை உணர்ந்து விடுதலை பெற்றால்தான் உண்மையும் சக்கரவட்டம்போல் நிறைவுள்ளதாகும்.

ஆனால் இந்த விதமான விடுதலை, உண்மையை நன்கு உணர்வதால்தான் கிட்டும்; உண்மை என்ற வெறுந் தோற்றத்தால் அது கைகூடாது. அவசரப் பட்டுக்கொண்டு அதை அடையும் குறுக்கு வழி ஏதும் இல்லை. பயனைக் கருதிப் பேராசைப்பட்டு வகுக்கும் வழி உண்மை வழி ஆகாது. கௌரவம் படைத்தவர் களையே மதித்துப் பாராட்டும் இந்த உலகத்தில், யாரோ ஓர் எளிய நாட்டுப்புறக் கவிஞன் பாடின பாட்டு இது:

"அவசரத் தேவை தன்னை நாடும்
கொடுமைக் காரா, இதனைக் கேளாய்!
மொட்டுப் போன்ற இந்த மனத்தை
சுட்டு நீஏன் பொசுக்கு கின்றாய்?
உன்றன் ஆத்திரம் தன்னால் உள்ளம்

**துண்டு துண்டாய் வெடிக்க, மலரின்**
**நறுமணந் தன்னைக் கெடுத் திடாதே!**
**பரம குருவாம் ஐயன் இதனைச்**
**சீருடன் உருவாக் கிடவே பலயுகம்**
**பாடு பட்டான்; சினமோ விரைவோ**
**ஏதும் இன்றி இதனைப் படைத்தான்;**
**ஆயினும் நீயோ பேரா சையினுல்**
**ஆணவங் கொண்டு வலிமையை நம்பி**
**வீணும் முயற்சியில் ஈடு பட்டாய்!**
**உன்றனக்(கு) ஏது நற்கதி, அப்பா!**
**தன்னையே மறந்து, வாழ்வு செல்லும்**
**போக்கில் மிதந்து செல்பவன் தானே**
**கேட்டிட முடியும் ஆண்டவன் குரலை;**
**அதுவே உண்மையின் குரலும் ஆகும்;**
**மதனன் சொல்வது இதுதான் கேளாய்!''**

'முக்தி அல்லது விடுதலை எளிதில் கிட்டிவிடாது. மென்னியைப் பிடித்து அதைக் கொண்டு வந்துவிடவும் முடியாது. நாமே நம்மை அறிவதில் ஈடுபட்டு நம்மை மறந்தால்தான் அது கிட்டும். அடிமைத்தனம் எந்த உருவில் இருந்தாலும் சரி, நம் அந்தரங்கத்தில்தான் அது குடிகொண்டிருக்கிறதே தவிர வெளியுலகத்தில் இல்லை. நம் உள்ளுணர்வு அல்லது பிரக்ஞை மங்கி விடுவதால்தான் - நம்முடைய நோக்கம் குறுகியிருப்ப தால்தான் - நாம் பொருள்களைத் தவருக மதிப்பிடுவதால் தான் - அடிமைத்தனமே தோன்றுகிறது' என்பது கவிக்குத் தெரியும்.

சுமார் நூறு வருஷங்களாகப் 'பாவுல்' சம்பிர தாயத்தார் பாடி வரும் ஒரு பாட்டை இங்கே குறிப் பிட்டுவிட்டு இந்த அத்தியாயத்தை முடித்துக்கொள்கி றேன். அதில் கவி, பரமாத்மனுக்கும் ஜீவாத்மனுக்கும் உள்ள நிரந்தர உறவைப்பற்றிப் பாடுகிருர். இந்த ஒற்றுமைத் தளையிலிருந்து யாராலும் முக்தி பெற முடி யாது. ஏனென்ருல், அன்பு அல்லது பிரேமையே முடி வானது. பரிபூரண சத்தியம் என்பதே ஒன்றை யொன்று

இணைக்கும் இந்த அன்பினுல்தான் உருவாகிறது; பரிபூரண முக்தி என்பது முழு அடிமைத்தனத்திலுள்ள வெறும் சூனியம் போன்றதே - ஒன்றுமே இல்லாத நிலையே!

அந்தப் பாட்டு இதுதான்:

'யுகம்யுக மாக ஆத்தும கமலம்
மலர்ந்து வருகுதே; அதனிட மிருந்து
மீளவே முடியா(து); அதனுள் கட்டுண்(டு)
இருக்கின் றேன்;அம் மலரின் இதழ்கள்
திறந்து கொண்டே இருப்பது கண்டேன்;
இதற்கு முடிவே காண்பதற்(கு) இல்லை.
மலருள் அமைந்த தேனின் இனிமை
அளவிடற்(கு) அரிதே; இதனுல் தான்நீ
மயங்கிக் கிடக்கும் வண்டு போலே
அதனை விட்டு நீங்க இயலா(து)
இருந்திடு கின்ருய்; ஆதலின், அதிலே
கட்டுண் டிருக்கிருேம் நீயும் நானும்*.
அப்பால் முக்தி எனஒன்(று) ஏது?

---

* பரமாத்மனும் ஜீவாத்மனும்.

# 12 நான்கு ஆசிரமங்கள்

மனிதனோடு பொருந்திய அறநெறியையே பொருளாகக் கொண்டு இங்கு அதை ஆராய்வதில் ஈடுபட்டிருப்பதாக முன்பே தெரிவித்திருக்கிறேன். இந்த அறநெறியே அவனுடைய நோக்கத்தையும் நடத்தையையும் உருவாக்கி, பரம்பொருளை மனிதனிடமே உணரத் துணை புரிந்திருக்கிறது. அதே சமயம் இன்னும் ஒன்றையும் கவனிக்கவேண்டும்: இந்திய மக்கள் தருமம் அல்லது அறம் என்பதை முடிவான லட்சியமாகக் கொள்ளாமல், அதற்கு அப்பாற்பட்ட ஒன்றை அடையும் ஒரு சாதனமாகவே அதைக் கொண்டிருக்கிறார்கள். இந்த முடிவான லட்சியம் என்ன தெரியுமா? தான் என்ற தனித்தன்மையிலிருந்து விடுபட்டு ஆத்மா மனித சமூகத்தின் எல்லையையும் கடந்து, பரம்பொருளில் ஒன்றி விளங்குவதுதான்.

இத்தகைய ஓர் அரிய தத்துவத்தை, விஞ்ஞானத்தில் வரும் ஓர் உதாரணத்தைக் கொண்டு மேல்நாட்டு வாசகர்களுக்கு உணர்த்தலாம். உலகப் பொருள்களைப் பற்றிய அறிவுத் துறையில் விஞ்ஞானமும் ஒரு தத்துவந்தான். பொருளின் தோற்றத்தைக் கொண்டு ஒரு முடிவுக்கு வராமல், பொருளில் அடங்கிய உண்மையைச் சில சித்தாந்தங்களின் மூலம் அது கண்டறிகிறது; நம் மனத்தை ஐம்புலன் உணர்ச்சியிலிருந்து மீட்டு, பகுத்தறிந்து ஆராயும் சுதந்தர நிலைக்கு அது கொண்டுவந்து விடுகிறது.

பொதுவாக நோக்கும்போது, நாம் காணும் இந்த உலகந்தான் நம்மைப் பொறுத்தவரையில் முக்கியமாகப் படுகிறது. பூமி தட்டையாகத்தான் நமக்குத் தோன்றுகிறது; சூரியன் மேற்கு அடிவானத்தில் மறைந்து விடுகிறான். கணித நிபுணன் என்னதான், 'காலம் என்பது நிலையில்லாதது' என்று முடிவு கட்டினாலும் நாம் அந்தக் காலத்தை நம்பி நம் கடிகாரங்களைத் திருப்பி

வைக்கிறோம். கலைகளையும், அன்றாடம் செய்யும் வேலைகளையும் பொறுத்தவரை உலகப் பொருள்களை நாம் பார்க்கிறபடிதான் மதிப்பிட வேண்டியிருக்கிறதே தவிர, அவைகளின் மூலத்தன்மையை ஆராய்ந்து அதன்படி மதிப்பிடுவதில்லை.

ஆனால் மனிதன் நேராகக் கண்டறிய முடியாவிட்டாலும் விஞ்ஞானத்தின் மூலம் கண்டு கொண்ட புதுமைகள், மாசற்ற ஒருவித மகிழ்ச்சியை, பற்றற்ற ஓர் ஆனந்தத்தைக் கொடுக்கின்றன; உலகத்தில் நம் புலனுக்கு எட்டாத ஓர் அறிவு (விஞ்ஞான அறிவு) உண்டு என்பதையும் அவை தெரிவிக்கின்றன. பொருள்களைப்பற்றி நம் கற்பனைக்கு எட்டாத ஆழ்ந்த உண்மை அறிவை விஞ்ஞானம் நமக்கு அளிக்கிறது. இப்படி அறிந்த விஞ்ஞானிகளின் சொல்லை நாம் பணிவுடன் ஏற்றுக்கொள்கிறோம். அவர்கள் தங்கள் பகுத்தறிவு வெறும் தோற்றத்திலோ, சொந்த விருப்பங்களிலோ சிக்கிச் சீர்குலையாதபடி பார்த்துக்கொண்டவர்கள்; அவர்களுடைய மனம் 'பற்றற்ற அனந்தம்' என்பதில் ஈடுபட்டிருக்கிறது; அங்கே நன்மை தீமை, உயர்வு தாழ்வு, அவலட்சணம் அழகு, பயனுள்ளது பயனற்றது என்ற பேதமே இல்லை. 'இவை எல்லாம் உண்டு' என்பது ஒன்றே அங்கே முக்கியம். இவைகளை அந்த விஞ்ஞானிகளின் 'அனந்தம்' ஏற்றுக்கொண்டது.

இந்தியர் அடைய விரும்பும் ஜீவன்முக்தி என்ற நிலையும் இதே மாதிரியானதுதான். இதுவும் பற்றற்றது; 'இது நன்மை, இது தீமை' என்ற வேற்றுமையோ, 'இது அவலட்சணம், இது அழகு' என்ற பேதமோ இதற்கு இல்லை. நிலைபெற்று வாழும் **'சத்'**தான பொருள் அது; அதுவே சத்தியம்; அதுவே **'நித்திய ஆனந்த'**மாக ஒளி வீசுகிறது.

விஞ்ஞானம் மனத்தின் கடைசி எல்லை வரைக்கும் நம் சிந்தனை செல்லும்படி நம்மைப் பழக்கியிருக்கிறது;

ஆனல் தானே வகுத்துக்கொண்ட தர்க்க நியாயப் பொருத்தத்திலிருந்து மீறிச் செல்ல அதனல் முடியாது. 'கோழிக் குஞ்சு முட்டையை விட்டு வெளியே வந் தாலும் இன்னும் அது குஞ்சாகவேதான் இருக்கிறது' என்பது விஞ்ஞான தத்துவம். ஆனல் இந்தியாவில் **யோகிகள்,** தீவிரமான தியானத்திலும் சமாதியிலும் ஆழ்ந்த நம் பிரக்ஞை அந்த அனந்தத்தை எட்டியிருப்ப தாகச் சொல்கிருர்கள்; ''அங்கே அறிவென்பது அறிய முடியாததாகவும், விஷயம், நோக்கம் என்பவை எல்லாம் ஒன்ருகவும் ஆகிவிடுகின்றன; சொல்லால் விவரிக்க முடியாத ஒரு நிலை அது'' என்கிருர்கள்.

'தான்' என்ற உணர்வு நம்மிடம் இருக்கிறது; அதற்கு எவ்வளவோ விருப்பங்கள் உண்டு; தங்கு தடை இல்லாமல் அந்த விருப்பங்கள் நிறைவேறவேண்டுமென் ருல், அத்தகைய ஓர் உலகத்தைப் படைக்க வேண்டி யிருக்கிறது. இதற்காக அவை அரும்பாடு படுகின்றன. இப்படி விருப்பங்கள் எல்லாம் நிறைவேற நிறைவேற, 'நாம் நம்மை முற்றும் அறிந்தோம்' என்பதற்குத் 'தான்' என்பதை அகற்றிவிடவேண்டும் என்று கண்டு கொள்கிருேம். இதிலிருந்து நமக்கு ஒன்று தெளிவா கிறது: தனிப்பட்ட ஒருவன் தான் யார் என்ற உண் மையை, மனித சமூகத்தில் உள்ள எல்லாரிடமும் கண்டு உணருகிருன்.

இந்த உண்மையே மனிதப் பிரபஞ்சத்தில் உயர் வாக மதிக்கும் ஒழுக்கம், ஆத்மிகம் இவைகளுக்கெல் லாம் அடிப்படையாக விளங்குகிறது. இந்த உண்மை நம் தருமத்தோடு பொருந்தியது. எதையும் எந்த இடத் திலும் பகுத்தறிந்து ஆராயும்போது அறிவு பந்தத்தி லிருந்து விடுபடுகிறது; இதுவே விஞ்ஞானம்; மனித அறிவுதான் இப்படி ஆராயும் தன்மை படைத்தது; அதைத் தவிர வேறு எதுவும் அப்படி ஆராயாது. நம் தனிப்பட்ட ஆத்மா (ஜீவாத்மா) பரமாத்மனிடம் ஒன்றி முக்தி அடைவதைத்தான் தருமம் என்கிருேம்;

இங்கும் பரமாத்மன் என்பவன் அந்த மனிதனேடு சம்பந்தப்பட்டவன்தான்.

மனத் தத்துவத்தை ஆராய்வதிலே இந்தியாவில் ஆதிகாலத்தில் ஈடுபட்ட ஞானிகள், "மனிதனுக்குரிய குறைகளையெல்லாம் கடந்து நிற்கும் - அவைகளால் பாதிக்கப்படாத - அனந்தமான ஒரு நிலையை எட்டி, நாம் முக்தி பெறலாம்'' என்று கொள்கை அளவில்மட்டும் கூறவில்லை; இந்த உயர்வான லட்சியத்தை அடையும் மார்க்கத்தையும் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதற்காக நம் வாழ்வு முழுவதும் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று ஒழுக்க நெறியையும் திட்டமிட்டு வகுத்திருப்பதைக் காணலாம். மனித சமூகம் நிறைவு பெற்று முன்னேற இது உதவுகிறது; முக்தி நிலையை அடையும்போது வாழ்வு இப்படி உன்னதமாக விளங்குகிறது.

மனிதனிடம் அமைந்த நிறைவு இரண்டு விதமானது; இவைகளை வெவ்வேருகப் பிரித்துக் கூறலாம். ஒன்று, ஆத்ம நிறைவு; மற்ருென்று, செயல் நிறைவு. சிலபேர், 'பழக்கத்தாலோ, வலுக் கட்டாயமாகவோ, நல்ல சுபாவம் படைத்திராத ஒருவன் மூலமாகவும் நல்ல காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளலாம்' என்று எண்ணக்கூடும். ஆபத்தான சில காரியங்களில் 'இது அபாயம்' என்று தெரிந்தேகூடக் கோழைகள் அடிக்கடி ஈடுபடுகிருர்கள். இந்த மாதிரி செயல்கள் பயன்படக்கூடியவைகளாகவும் இருக்கலாம்; இப்படி ஈடுபட்டவனின் வாழ்நாளுக்கு அப்பாலும் நீடித்திருக்கலாம்.

ஆனுலும், பயன் என்பதைக் கருதாமல், சீரான ஒழுக்கம் என்ற முறையில் பார்க்கும்போது இந்த மாதிரி ஒரு செயலில் ஈடுபடுபவன் உண்மையிலேயே நேர்மையானவனு என்பதைத்தான் கவனிக்கிருேம். அவன் வெளிப்படையாகச் செய்த நன்மை நல்ல பயனை அளித்துக்கொண்டிருக்கும் என்பதோடு அவனுடைய ஆத்ம நிறைவும் ஒப்பற்ற பெருமதிப்புடையதாகிறது. இதுவே

அவனுடைய ஆத்மிக விடுதலை அல்லது முக்தியாகிறது. நமக்குத் தெரியாவிட்டாலும் இதுவே மனித சமூகத்துக்குப் பெரும் பலமாகவும் விளங்குகிறது. நேர்மை என்ருல் வேறு என்ன? அகந்தையை விட்டொழித்து நம் ஆத்மா பற்றற்று இருப்பதுதான். நல்ல காரியம் செய்யும்போது மனித சமூகம் என்ற விசுவபுருஷனேடு ஐக்கியமாகி விடுகிறோம். ஏதோ நம்மோடு வாழும் மக்களுக்கு நன்மை ஏற்படவேண்டும் என்பது மட்டுமே இதில் முக்கியமன்று; "அதுவே உண்மையான லட்சியம்; அதன் மூலமே மனிதன் வெறும் மிருகம் இல்லை" என்பதை உணருகிருன். தன் ஆசைகளும் கோபதாபங்களும், பசி பட்டினியுமே முக்கியம் என்று அவன் அவைகளால் கட்டுண் டிருக்கவில்லை; பந்தமற்ற புனிதமான ஆத்மனே அவன் என்ற மதிப்பு அவனுக்கு ஏற்படுகிறது. இதுவும் முக்கியமானதுதான்.

மனிதர் வாழும் இந்த உலகில் நேர்மை என்பதும் அன்பு என்பதும் அந்த ஆத்மிக விடுதலையையே குறிக்கும். நாம் மனமாரச் சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். உலகத்தில் செய்யவேண்டிய கடமைகளைக் கருதி இப்படி இருக்கவேண்டும் என்பதில்லை; ஆத்ம நிறைவுக்காகத்தான் சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆத்ம நிறைவு என்ருல் வேறென்ன? தூய்மையான பரம்பொருளுடன் ஈடுபட்டு விடுவதுதான்; ஒன்ருகிவிடுவதுதான். இதுமட்டும் உண்மையாக இல்லாவிட்டால் ஆத்மிக நிறைவைவிட யந்திர நிறைவுக்குத்தானே மதிப்பு ஏற்பட்டிருக்கும்? இப்படி விசுவபுருஷனுடன் இணைய வேண்டுமானுல் தனி மனிதன் நேர்மையான வாழ்வு-நிறைவான வாழ்வு-வாழவேண்டும். அதுதான் உலக வாழ்வுக்கும் அப்பால் உள்ள முக்தி நிலையை அவனுக்கு அளிக்கும்.

இயற்கை, உயிர் வளர்ச்சிக்காக வாழ்வில் நமக்கு உறுதியான நம்பிக்கை ஏற்படும்படி செய்திருக்கிறது. சாவு நேர்ந்தாலும் அந்த நம்பிக்கை நம்மை விட்டுப்

போகாதபடி இயற்கை கவனித்துக்கொள்கிறது; இதில் சந்தேகமில்லை. இருந்தாலும், நாம் இந்தப் பூலோகத்தில் வாழும் இந்த வாழ்வும் சரி, அது தன்னைச் சுற்றி எழுப்பிக்கொள்ளும் சூழ்நிலைகளும் சரி, வெற்றி கிட்டும் சமயத்தில் நம்மைக் கைவிட்டு விடலாம். மகத்தான செல்வச் செழிப்பும் அழிந்து போகிறது; வெறும் சூனியமாகிவிடுகிறது. வலிமை பொருந்திய பேரரசுகூட, விளக்கேற்றி விழாக் கொண்டாடும் நேரத்தில் கீழ்ப்படிய நேரிடுகிறது. இவைகளெல்லாங்கூட உண்மைதானே? இந்த நினைவு வரும்போது நமக்கு அந்த உண்மை சலித்துத்தான் போகும்.

இதேபோல உலகத்தில் நாம் வாழும்போது கொள்ளும் உறவுகளுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதும் உண்மைதான். ஆனாலும் இந்த உறவுகளை எளிதில் மறந்துவிட நமக்குத் துணிவு வருமா? அவை நீடித்திருக்கும் வரையாவது அவைகளை நிச்சயமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அவைதான் நிலையாக நீடித்திருக்கப் போவதில்லையே என்ற எண்ணத்தில் அப்படி ஏதுமே இல்லை என்பதுபோல் நாம் நடந்துகொண்டாலும், அவைகளால் நமக்குப் பாதகமே ஏற்படும்; பலன் பின்னும் கடுமையாகவே இருக்கும். நிலையற்றதானாலும் உண்மையான உறவை அவமதிப்பது, அதனால் ஏற்படும் பந்தத்தைத்தான் நீடிக்கச் செய்யும்; அந்தப் பந்தமும் முன்னைவிட உறுதியாகிவிடும். ஆத்மன் என்பது மகத்தான ஒன்று; அதை அடையவேண்டுமானால் 'தான்' என்பதை விட்டொழித்தாக வேண்டும். போகும் வழியை அழித்து லட்சியத்தை அடைந்துவிட முடியுமா?

ஆதிகாலத்தில் இந்தியாவிலே வாழ்ந்த குருநாதர்கள் மனிதனுடைய ஆத்மா சிறப்பானது என்று அறிந்திருந்தார்கள். அதன் பெருமைக்கு ஒரு முடிவில்லை, பரப்பிரம்மத்துடன் அது ஐக்கியமாகிறது என்று கண்டார்கள். ஆகவே, மனிதனைப்பற்றி இவ்வளவுதான் மதிப்பிட முடியும் என்று எண்ண வேண்டியதில்லை; அவ்

வாறு எண்ணுவது பொருத்தம் இல்லை; அது அரை குறையான நோக்கமே. ஒரு குடிமகனுகவோ, தேசாபி மானியாகவோ அவனை மதிப்பதோடு அவன் வாழ்வு முடிந்துவிடவில்லை. இதனுலெல்லாம் அவன் சம்பூர்ண மனிதனுகிவிடவுமில்லை. அவனுடைய நித்தியமான ஆத்மாவுக்கு நாடு ஏது, நகரம் ஏது? நீர்க்குமிழி போன்ற இந்த உலகந்தான் அவனுடைய ஆத்மாவைத் தாங்கி நிற்க முடியுமா?

பர்த்ருஹரி ஒரு காலத்தில் அரசராக இருந்தவர்; அவர், ''வற்ருத ஆசை ஊற்றுக் கிட்டினுல்தான் என்ன? பகைவனுடைய கழுத்தில் காலை வைத்தால்தான் என்ன? உன் அதிருஷ்ட வசமாக உன்னைச் சுற்றி நண்பர்கள்தான் இருந்து என்ன? அநித்தியமான இந்த உடலை யுகக்கணக் கில் உயிரோடு வைத்திருந்தால்தான் என்ன? தத: கிம்? (அப்புறம் நடப்பது என்ன?)'' என்று கேட்கிருர்.

அதாவது, மனிதன் தான் விரும்பிய பொருள்களை யெல்லாம்விட உயர்ந்தவன்; முக்திநிலையில் அவன் நித்திய சத்தியமாய் விளங்குகிருன்.

ஆனல் இப்படி முக்தி அடைய முயலும்போது சித்தத்தை மனிதன் கட்டுப்படுத்த வேண்டும். முக்திக் குப் பக்கபலமாக உள்ள பண்புகள் கவனக்குறைவால் பாழாகி, வீண் முயற்சிகளால் பயனற்றுப் போகாதபடி காக்க வேண்டும். இப்படிக் காத்தால் அந்தப் பந்தத்தி லிருந்தேகூட அதிலிருந்து மீளும் சக்தியைப் பெறலாம். அரசியல் துறையில்மட்டுமே விடுதலை வேண்டும் என்று பாடுபடுபவர்கள்கூட இப்படித்தான் தங்கள் சுதந்தரத் தைக் கட்டுப்படுத்தி, அரசியல் அதிகாரம் கிடைப்பதற் குத் தேவையான அளவு சுதந்தரமாகச் சிந்தித்துச் செயல் புரிந்தால் போதும் என்று ஓர் அளவுக்குள் தங்கள் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தி வேலை செய்கிருர்கள். சில சமயம் மனச்சாட்சிக்குக்கூட அவர்கள் சுதந்தரம் தருவதில்லை; அதையும் துறந்து அரசியல் அதிகாரம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு விடுகிருர்கள்.

ஆதியில் இந்திய மக்கள், சமூகம் வகுத்த கட்டுத் திட்டங்களை, அந்தச் சமூகத்தையும் கடந்த ஒரு நிலையை அடைவதற்காக ஏற்று வாழ்ந்தார்கள். குதிரையில் ஏறிச் சவாரி செய்பவன், தான் போய்ச் சேரவேண்டிய இடத்துக்கு விரைவாகச் செல்வதற்காகக் குதிரைக்குக் கடிவாளமும், தன் காலுக்குச் சேணமும் பூட்டுகிறானே, அதுபோலத்தான் இதுவும்.

முடிவில்லாமல், ''ஆசை என்பதே நிலையானது'' என்று புகழ்ந்து பாடும்படி அப்படி ஒன்றும் பிரபஞ்சம் பைத்தியக்காரத்தனமாக அமைந்துவிடவில்லை. பாதிப் பாட்டில் நிறுத்துவது எவ்வளவு சிரமமோ, அவ்வளவு இன்பமாக இருக்கும் முத்தாய்ப்பு வைக்கும்போது.

வேலையில் மனிதன் ஈடுபட்டிருக்கும்போது சட்டென்று அதை விட்டு வந்துவிடும்படி இந்திய ஞானிகள் உபதேசிக்கவில்லை. படைப்புத் தொடங்கினது முதல் உலகத்தில் பல நிகழ்ச்சிகள் நடந்துகொண்டே போகின்றன; எத்தனையோ உயர்வு தாழ்வுகளை இன்று வரை உலகம் பார்த்திருக்கிறது.

ஆனால், 'தனித்தனி மனிதர்களுக்கும் உலகத்துக்கும் உள்ள உறவு அவர்கள் சாவோடு நின்றுவிடுகிறது' என்பதைப் பார்க்கிறோம். மனிதன் எதையும் சாதிக்காமலேதான் போய்விட வேண்டுமா? இதனால்தான் மனிதன் உலகத்தில் வாழும் வாழ்வைப் பகுத்துக் காட்டும்போது, இந்தியாவில் தொழில் என்பதை நடுவிலும், முக்தி நிலையைக் கடைசியிலும் வைத்தார்கள்.

காலை, நடுப்பகல், பிற்பகல், மாலை என்று நாளைப் பகுத்திருப்பதுபோல் இந்தியாவிலும் மனிதனுடைய வாழ்நாளை அவனுடைய அவ்வப்போதைய நிலைக்கேற்றபடி நாலு பாகமாகப் பிரித்தார்கள். பகற்பொழுது வளர்ந்து மங்குவதுபோல் மனிதனுடைய உடற்பலமும் பெருகிச் சுருங்குவது இயல்புதானே? இந்த உண்மையை உணர்ந்த இந்தியர்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்ச்சியாக இருக்கும் விதத்தில் மனிதனுடைய வாழ்நாளையும்

ஆரம்பம் முதல் முடிவு வரையில் பொருத்தமாக, பொருள் இருக்கும்படி, அமைத்தார்கள்.

முதலில் **'பிரம்மசரியம்'** வந்தது; கல்வியைக் கட்டுப் பாட்டுடன் கற்பதுதான் இந்த நிலைக்கு உரிய கடமை. பிறகு **'கிருகஸ்த'** ஆசிரமம் அல்லது இல்லறம்; உலகத் துக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வது. அதற் கடுத்தது **'வானப்பிரஸ்தம்'**; அதாவது, பந்தங்கள் நீங்கக் காட்டுக்குப் போவது. கடைசியாகப் **'பிரவ்ரஜ்யம்'**; அதா வது, சாவு வரும்போது முக்தி அடையக் காத்திருக்கும் துறவு நிலை.

நாம் வாழ்வைச் சாவோடு போராடும் நிலையிலேயே நோக்குகிறோம் - சாவு என்பது இயற்கையான முடிவு என்று எண்ணுமல் அது என்னவோ குறுக்கே வந்த பகைவன் என்பதுபோல் வாழ்நாளின் ஒவ்வொரு பகுதி யிலும் சாவோடு வீணுகப் போராடிக் கொண்டிருக் கிறோம்; இளமை கழியும் நேரம் வரும்போது நாம் அதை அழுத்திப் பிடித்துக்கொள்கிறோம்; ஆசையில் ஊக்கம் மங்கும்போது நாமாக அதற்குப் புதிய ஊக்கம் தந்து அதைக் கிண்டிவிடுகிறோம். நம் புலன்கள் பலவீனம் அடையும்போது அவைகளை வற்புறுத்தி வேலை வாங்குகிறோம். நம் பிடி தளர்ந்துவிட்டாலும் - உடல் சோர்ந்துவிட்டாலும் - உடைமைகளின் மேல் ஆசை விடவில்லை. 'நடக்கப்போவது நடந்தே தீரும். அது இயற்கைதான்' என்றபடி நாம் பழகிப் பயிற்சி பெற வில்லை. ஆகவே, 'கையை விட்டுப் போகத்தானே போகிறது' என்று நாமே பெருந்தன்மையாக அதை விட்டுக் கொடுப்பதுமில்லை; நம் கையைவிட்டு அதைப் பிடுங்கிக்கொள்ளும் வரையில் காத்திருக்கிறோம்! அப் போது உண்மை என்பது வெற்றி வீரனுக வருகிறது; இந்தச் சத்தியத்தை விருந்தினனுக ஏற்று உபசரிக்கும் கலையை மறந்துவிட்டதுதான் காரணம்.

பழுத்த பழத்தின் காம்பு தளர்ந்துவிடுகிறது; பழத்தின் உட்பாகம் மெதுவாக இருக்கிறது. ஆனல்

அதிலுள்ள விதைகள் இறுகி மறுபடியும் உயிர் பெற்று வாழ்வதற்கேற்றபடி அமைகின்றன. முதுமையால் நம் உடலின் வெளிப்புறம் பழுதடைய அடைய உள்ளுக்குள்ளே உரம் பெற்று வருகிறோம். ஆனால் மனிதனுடைய அந்தரங்கத்தில் முக்கியமாக இருப்பது, அவனுடைய ஆத்மசக்தியே. இதனால் அவனுடைய கட்டுப்பாடான வாழ்வுக்கு ஏற்ப - முயற்சிக்குத் தக்கபடி - பயன் கிட்டுகிறது. கட்டுப்பாடும் ஒழுங்கும் இல்லாதவன் அடுத்த ஆசிரமத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்னதாகவே செய்துகொள்ளாமல் போய், தசை தளர்ந்து காட்சியளிக்கிறான். அப்படியும் உயிரை விட்டுவிட மனம் வராமல் கெட்டியாகப் பிடித்துக்கொண் டிருக்கிறான். தான் செத்த பிறகும் தான் விரும்பியது நிறைவேற வேண்டுமென்ற கவலையுடன் இன்னும் உலக விவகாரங்களிலேயே ஈடுபட்டுக் கிடக்கிறான்.

ஆனால் எப்படியும் நாம் எல்லாவற்றையும் துறந்தே ஆகவேண்டும்; அதனால் நமக்கு நல்ல பயனே கிட்டும்; அதாவது, ஆத்ம ஞானம் என்ற உண்மையறிவுதான்.

பூ காயாகிப் பழுப்பதற்காகத் தன் இதழ்களை உதிர்த்துத்தானே ஆகவேண்டும்? அதேமாதிரி பழமும் மறுபடியும் மரமாவதற்கு விழுந்துதான் தீரவேண்டியிருக்கிறது. கருப்பத்தையே நம்பி அதில் இருந்த குழந்தை உடலும் மனமும் நன்றாக வளர்ச்சி பெற அந்தக் கருப்பப் பையை விட்டு வெளியே வரவேண்டியிருக்கிறது. அந்த வளர்ச்சியில்தானே குழந்தையின் வாழ்வு முழுவதும் அடங்கியிருக்கிறது?

இப்படி உடலும் மனமும் கொண்டு தோன்றிய ஜீவன் பெரிதாக ஆக அதன் ஆத்மா தலைதூக்குகிறது. அப்போது உறவினர்கள், அண்டை வீட்டார் இவர்களோடு அதற்குப் பழக்கம் ஏற்பட்டு, அது பின்னும் பெரிதாகிறது; மனிதனாகிறது. கடைசியில் அந்த உடல் குலைந்து, ஆசைகள் மங்குகின்றன. பலவித அநுபவங்களால் பயன்பெற்ற அந்த ஆத்மா குறுகிய உலக

வாழ்வைத் துறந்து பரம்பொருளுடன் வாழும் பெரு வாழ்வை நாடித் தான் திரட்டிய அறிவுக்களஞ்சியத்தை யெல்லாம் அந்த நித்திய வாழ்வுக்கே அர்ப்பணம் செய்து, அதோடு உறவு கொள்கிறது; இதனால், அழியும் உடலிலிருந்து கடைசியாக ஆத்மா வெளியேறும்போது எல்லாம் இயல்பாகப் படுகின்றன; அனந்தமான பொருளோடு தான் இணையப் போவதையே எதிர்பார்த்திருக்கும் ஆத்மாவுக்கு அப்போது உடலை விட்டுப் பிரிவதால் வருத்தம் ஏதும் இல்லை.

தனி மனிதன் என்ற நிலையிலிருந்து மனித சமூகம், மனித சமூகத்திலிருந்து பிரபஞ்சம், பிரபஞ்சத்திலிருந்து பரம்பொருள் - இதுதான் ஆத்மாவின் இயல்பான முன்னேற்றம். இந்த முன்னேற்றத்துக்குரிய லட்சியத்தை மனத்தில் கொண்டே பரமாசாரியர்கள், மனிதன் கல்வி கற்கத் தொடங்கும் முதல் நிலையிலேயே வெறும் புத்தக அறிவையோ, பொருள்களைப்பற்றிய அறிவையோ முக்கியமாகக் கொள்ளாமல், பிரம்மசரியம் அல்லது கட்டுப்பாடான - ஒழுக்கம் மிகுந்த - வாழ்க்கையை வகுத்தனர்; இன்பத்தை அநுபவிப்பது போலவே துறவாகிய துன்பத்தையும் உறுதியான தன்மையினால் எளிதில் ஏற்று அநுபவிக்க முடியும் என்றுதான் இப்படி வகுத்தார்கள். வாழ்வே ஒரு பெரிய யாத்திரைதான்; பரப்பிரம்மத்தில் ஐக்கியமாகி முக்தி பெறுவதே அதன் லட்சியம்; பல நிலைகளிலும் பக்தி சிரத்தையோடும், கவனமாய் மனவுறுதியோடும் இருந்து யோகசாதனம் போல் அந்த வாழ்வை வாழ்ந்து காட்ட வேண்டும். பிரம்மசாரி ஆனதிலிருந்து, முக்தி அடைவதே லட்சியம் என்ற நோக்கத்தையே அந்தக் காலத்து மாணவன் கருத்தில் கொண்டிருந்தான்.

ஓரளவுக்குத் தேவையைக் கட்டுப்படுத்தாமல் மனம் எல்லை மீறினால் பின்னர் அது எங்கே போய் நிற்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஏன் நிற்கத் தான் போகிறது? ஆகவே, நெருப்பை எண்ணெயைக் கொண்டு அணைக்க முயல்வது விபரீதமாக முடிவதுபோல்

மனத்தில் கெட்ட எண்ணங்கள் ஏற்பட ஏற்பட ஆசைக் கனல் கொழுந்துவிட்டு எரியத்தானே எரியும்? இதனுல் தான் ஆரம்பத்திலிருந்தே மனத்தைப் பொருத்தமான ஓர் எல்லைக்குள் வைக்கப் பழகிக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. இந்த எல்லையை எப்போதும் நினைவில் வைத்திருக்கவே விரும்பவேண்டும். ஆகையால், நுகரும் ஆர்வத்தைச் சரியானபடி வளர்த்துக்கொள்ளவேண்டும்; இது, 'முக்தி பெற வேண்டும்' என்ற ஆர்வத்தோடு - 'எந்த நேரமும் துறக்கச் சித்தமாக இருக்கிறது' என்ற மனநிலையோடு - சம்பந்தப்பட்டதுதான்.

இப்படிப் பிரம்மசரியத்தில் பயிற்சி பெற்றபின் உலக வாழ்வு அல்லது இல்லற வாழ்வு தொடங்குகிறது,

மநு, ''நல்ல அறிவுடன் (ஞானவானுக) இல்லறத்தைக் கடைப்பிடித்து வாழும்போதுதான் கட்டுப்பாடு என்பது ஏற்படும். இப்படி உலகத்தோடு ஒட்டி வாழாவிட்டால் எந்தக் கட்டுப்பாடும் சிறக்காது'' என்று சொல்லியிருக்கிருர். அதாவது, 'வாழும் வகையறிந்து வாழ்ந்தால்தான்' பூரண ஞானம் கிட்டும். இல்லாவிட்டால் அதை அடைய முடியாது. பூரண ஞானத்துடன் பொருந்தாத கட்டுப்பாடு உண்மையான கட்டுப்பாடு ஆகாது; ஏதோ பொருளற்ற வழக்கமாகத்தான் இருக்கும்; மடமையே இப்படி வழக்கம் என்ற மாறு வேடத்தில் காட்சியளிக்கிறது என்றுதான் கொள்ள வேண்டும். அதிலும், முக்கியமாக, ஆசை தன்னைக் கட்டுப்படுத்த அறிந்தால்தான் செயல் புரிவதும், நல்ல முயற்சிகளும் கைகூடும். அப்போதுதான் இல்லறம் நல்லறமாக விளங்கும்; உலகத்துக்கே அதனுல் நன்மை ஏற்படும். கடைசியாக, முக்தியை நாடும்போது இல்லறத்தில் கண்ட அநுபவம் தடையாக இராமல் அதற்குத் துணையாகவே அமையும்.

இரண்டாம் ஆசிரமம் அல்லது நிலையில் எல்லாவற்றையும் இவ்வாறு அநுபவித்த பிறகு, உடற்சக்தி தளர்வடைவதைக் கொண்டு மனிதன் தனக்கு இயல்

பான மரணம் நெருங்குகிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும்; இது அவனுக்கு ஓர் எச்சரிக்கை. இதை, ஏதோ உத்தியோகத்தில் நீடித்திருக்க விரும்புபவனை உடனடியாக வேலையை விட்டு நீக்குகிறமாதிரி எண்ணிச் சோர்ந்து போய்விடக் கூடாது; நம் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேறும்போது நாமும் அதற்கு ஏற்றபடி முதியவர்கள் ஆகிவிட்டோம் என்ற ரீதியில் மகிழ்ச்சியுடனேயே மரணத்தை வரவேற்க வேண்டும்.

கருப்பத்தை விட்டு வெளிவந்த குழந்தை சிலகாலம் தாயுடன் இருக்கிறது; புதிய சுதந்தரச் சூழ்நிலைக்கு ஏற்றபடி பழகிச் சமாளித்துக்கொள்ளும் வரையில், தாயை விட்டுப் பிரிந்திருந்தும் அவளோடு ஒட்டிக் கொண்டுதான் வாழ்கிறது. மூன்றும் ஆசிரமம் அல்லது நிலை இத்தகையதுதான். மனிதன் உலகத்தை விட்டுத் தனித்து இருந்தாலும் இன்னும் அதோடு உறவு வைத்துக் கொண்டுதான் இருக்கிறான்; கூடவே, கடைசி நிலையான முக்தியை நாடும் நெறிக்கும் தன்னைத் தயார் செய்து வருகிறான். தன் அறிவுக் களஞ்சியத்திலிருந்து உலகத்துக்கு இன்னும் வழங்கிக்கொண்டுதான் இருக்கிறான்; அதனிடமிருந்தும் ஆதரவு பெற்றே வருகிறான். ஆனால் இது இல்லறத்தில் இருந்தது போன்ற நெருங்கிய உறவாகாது. தொலைவிலுள்ள காட்டுக்கு வந்துவிட்டான் அல்லவா?

கடைசியாக ஒரு நாள் அந்த உறவையும் விட்டுப் பரமாத்மனை அடைய அவனது சுதந்தர ஆத்மா எல்லாப் பந்தங்களிலிருந்தும் மீளுகிறது. ஆரம்பம் முதல் முடிவு வரையில் மனிதன் உலகத்தில் உண்மையாக வாழ, நான்காக அமைந்த இந்த நிலையே நன்னெறியாகும். அப்போது ஒவ்வோர் அடி எடுத்து வைக்குந்தோறும் சாவுபற்றி எண்ணிக்கொண்டிருக்கவே தேவையில்லை; உரிய சமயத்தில் சாவு நேரினும் யாரோ பகைவன் வந்து வெற்றி கொள்வதுபோல் எண்ணவேண்டியிராது. இந்தியாவில் இப்படி நாலு ஆசிரமங்களாக வாழ்

வைப் பகுத்து வாழ்கிறான் மனிதன். அதனால் பிரபஞ்சத்தில் காணும் இசைவோடு தானும் ஒன்றி விளங்குகிறான். இப்படிப்பட்ட வாழ்வில், அடங்கிப் பழக்கப் படாமல் கண்டபடி அலைந்து அழிவை நோக்கிச் செல்லும் தனி மனித ஆசைகளுக்கு இடம் இல்லை. அவைகளை அடக்கிப் பரம்பொருளிடம் மனத்தை ஈடுபட வைக்கிறது இத்தகைய வாழ்வு.

நாம் இதை உண்மையில் நம்பினால், இப்படி ஒரு லட்சிய வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். இதன் எதிரே தனி மனிதனுடைய அதிகாரம், வல்லரசுகளின் வலிமை இவை எல்லாம் பணிவாகி விடவேண்டும்; மனிதனுடைய ஆத்மா வெற்றி பெற்றுத் 'தான்' என்ற பந்தத்திலிருந்து விடுபட்டு விளங்க வேண்டும். அந்த ஆத்மாவை எப்போதும் சுழலும் தடை என்னும் சக்கர வட்டத்தில்(ever revolving cycle) அடக்கி வைத்திருப்பது, 'தான்' என்ற அகந்தைதானே! இத்தகைய வாழ்வு வாழ முடியவில்லை என்றால், அப்புறம் என்ன? (ததः கிம்?)

ஆனால் இவ்வாறு மனிதன் தன் தனித்தன்மையை அடியோடு அழித்துக்கொள்வதை இந்தியாவில் அப்படி எல்லா ஞானிகளுமே ஏற்றுக்கொண்டு விடவில்லை. நம் நாட்டில் அத்தகைய பலர் உண்டு. அவர்கள் கோரி நிற்பது **துவைதமே.** ஆண்டவனிடம் நிரந்தரமாகப் பக்தி செலுத்துவதே அவர்கள் நோக்கம். அவர்களைப் பொறுத்தவரையில் தருமம் என்பதே முடிவான உண்மை; மனிதர் வாழும் உலகத்துக்கு அப்பால் அக்கரையில் விளங்கும் பெருவாழ்வை (அத்வைத நிலையை) நாடிச் செல்பவர்களைப் பார்த்து அவர்கள் ஏங்குவதும் இல்லை. அவர்கள், ''மனிதனிடமுள்ள பந்தங்களே துன்பத்துக்கெல்லாம் காரணம். ஆனால் மனிதர்கள் தங்களால் இயன்றவரை எல்லாரிடமும் அன்பு செலுத்தி வாழ்வில் நிறைவை எய்த முடியும். இந்த அன்பு எல்லாத் துன்பங்களையும் ஏற்றும், அதே சமயத்தில் அவைகளைக் கடந்தும் நிற்கும்'' என்கிறார்கள்.

# 13. முடிவுரை

சம்ஸ்கிருத மொழியில் பறவையை 'இருபிறப்பு' (த்விஜ:) என்பார்கள்: முதலில் அது முட்டையிலிருந்து தோன்றுகிறது; கடைசியில், எல்லையற்ற ஆகாய வெளியில் பறக்கத் தொடங்குகிறது; இது மறு பிறவி போன்றது. நம் சமூகத்தில், 'பரமாத்மனிடம் ஜீவாத்மா முக்தியைக் காணுகிறது' என்று நம்புபவர்கள் இப்படியே பறவையுடன் தம்மை ஒப்பிடுவார்கள். மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும் இந்த இருமை அல்லது துவைத உணர்வு அமைந்திருப்பதைக் காணலாம்: கண்ணெதிரில் காணும் அநுபவ உண்மைகள் நிறைந்த இந்த உலகத்தில் மனிதன் வாழ்வது, அதைக் கடந்து மெய்ப்பொருள் நிறைந்த ஆத்மலோகத்தில் வாழ்வது - இந்த இரண்டுந்தான் அவை.

இத்தகைய உணர்வு அவன் மனத்தில் ஏற்கனவே, 'உலக எல்லையைக் கடந்து அப்பால் செல்ல வேண்டும்' என்ற எண்ணத்தை மூட்டி விடுகிறது. ஆகவே, அவன் தன் கண்ணால் காண்பதையே முடிவாகக் கொள்வதில்லை. முட்டையின் ஓடுபோல் அமைந்த உலக பந்தங்களிலிருந்து அவன் விடுபடுவதற்காக இடைவிடாமல் பாடுபடுகிறான். இப்படி முயலும்போது தன் முக்கியமான இயல்பு காரணமாகத் தோன்றிய உள்ளுணர்ச்சிகளையும் மீறிவிடுகிறான். அப்போது இந்த உலகத்தின் கடுமையான சட்டங்களையும் விதிகளையும் மீறுவதில்கூட இன்பம் காணுகிறான். இந்த உணர்ச்சிகளைக் கொண்டு, முடிவற்ற மேல்நிலையை அறிய விடாமுயற்சி செய்கிறான். இதனால் நாகரிகத்தின் மூலம் கிட்டும் சிறந்த பயனை அவன் அடைகிறான். அவனுடைய தேவைக்கும் அப்பால் ஓர் உண்மையைக் கண்டறிகிறான்.

தன்னையே உணர்வதால் 'தான்,' 'தனது' என்ற வரம்பைக் கடந்து நிற்க முயலுகிறான். இது அவன் அனந்தமானவன் (புருஷன் முடிவில்லாதவன்) என்

பதைக் காட்டுகிறது. தான் உண்மையையும் நேர்மையையும் கடைப்பிடித்து வாழ்வதே நேர்மையான தருமம் என்பதை அவன் உணருகிறான். மனிதனுக்கே தருமம் என்ற ஒன்று இருக்கமுடியும். ஏனென்றால், இயற்கையில் திறமை படைத்த ஜீவன் என்ற நிலையிலிருந்து அவன் ஆத்ம பரிபக்குவம் அல்லது ஆத்ம நிறைவுபெற்ற நிலையை அடைகிறான்.

வேதாந்தக் கொள்கைக்குச் சில உரைகள் உண்டு; அதாவது, ''பிரம்மம் என்பதே பரமசத்தியம் **(ஸத்)**; பற்றற்ற நிர்க்குணம் அது (**தத்**); அதில் 'இது'-'அது', நன்மை-தீமை, அழகு-அவலட்சணம் என்ற எதுவுமே இல்லை. விவரிக்க முடியாத ஓர் '**ஆனந்த**'த்தைக் குணமாகக் கொண்டு தன் நினைவிலேயே அது நித்தியமாய்த் தனித்து விளங்குகிறது. எப்பொருளும் அதில் இல்லை; எந்தவிதமான சிந்தனையும் அதற்கு இல்லை'' என்பது தான். ஆனால் மனித ஆத்மா பழகி அறிந்து வெறும் காட்சியாக விளங்கும் உலகத்தில்தான் நாம் தருமம் என ஒன்றைக் கொண்டாடுவதற்குப் பொருள் உண்டு.

ஆகவே, எட்டாத ஒரு பரமசத்தியமாக விளங்கும் அந்தப் பரப்பிரம்மத்தைப்பற்றி இங்கே சொல்வதற்கில்லை; அது நான் எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் புறம்பானது. இங்கே ஒன்றைக் குறிப்பாக விளக்க முயன்றிருக்கிறேன்: அந்தத் தெய்விக சத்தியத்துக்கு என்ன பெயர் யார் கொடுத்திருந்தாலும் சரி, அதனிடம் அமைந்த மனிதப்பண்பு காரணமாக நம் சமய வரலாற்றில் அது சிறப்பான இடம் பெற்று விளங்குகிறது; பாவம், புண்ணியம் என்ற கருத்துக்களுக்கு ஒரு பொருள் கொடுத்து நிற்கிறது; மனிதனுடைய இயல்போடு இணைந்த நிறைவான லட்சியங்களுக்கெல்லாம் அழியாத நிலைக்களனாக விளங்குகிறது.

முன்பே நான் சொன்னதுபோல் நம் நாட்டில் ஆதி காலம் முதல் ஒரு மரபு இருந்து வருகிறது: யோக

சாதனையினால் மனிதன் இந்த உலக எல்லையையும் க
பரம்பிரம்மத்தோடு இரண்டறக் கலந்து தூய
தானந்த சொரூபமாய் விளங்கமுடியும் என்பது
அது. இந்தக் கொள்கையை யாராலும் மறுக்க முடி
ஏனென்றால், இது நேரான அநுபவத்தினால் உண
தர்க்க நியாய வாதமெல்லாம் இங்கே செல்லா.

இந்தியாவில் சமாதி நிலையை அடையும் ஆ
வாய்ந்த பலர் (ஞானிகள்) இருப்பது உலகப
உண்மை. அதாவது, அனந்தமான பொருளில் ஆ
விடக் கூடியவர்கள் இவர்கள். இது சொல்லொணு
நிலை. இவர்கள் சொல்வது உண்மைதான் என
கொள்வோம். அதோடு, மனித அறிவு, சித்தம்,
எல்லாவற்றையும் உணர்ந்து தன்னுள்ளே கொண்
நித்திய ஜீவனிடம் தீவிரமாக இணைந்து பிரேமை அ
பேரன்பில் ஈடுபட்டவர் (பக்தர்கள்) சொல்வ
நாம் ஏற்க வேண்டும். அந்த நித்திய ஜீவனே க
வெறும் அநுபவ உண்மைகள் சேர்ந்து வி
சத்திய சொரூபி மட்டும் இல்லை அவன். அவனே
காலம், நிகழ்காலம் எல்லாவற்றுக்கும் அப்பால்
யிருக்கும் லட்சியமாகவும் விளங்குகிறான்.

1930-ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மகாகவி ரவீ
திரர் ஆக்ஸ்போர்டில் நிகழ்த்திய ஹிப்பர்ட் பிரச
கங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இது. லண்ட
ஜார்ஜ் ஆலன் அண்டு அன்வின் லிமிடெட் வெளியிட்
பதிப்பிலிருந்து ஓரளவு சுருக்கியது.

இளவயது அநுபவ மூலம் தாம் கண்டறிந்த ஆத்
மிக உண்மைகளைப் பகுத்தறிவுக்குப் பொருந்திய முை
யில் ரவீந்திரர் விளக்கும்போது உபநிடத காலத்
முனிவர்கள் உபதேசித்த தத்துவங்களின் உயர்ை
நாம் நன்கு அறியலாம். மனித சமூகத்திடம் அன்
செலுத்துவதிலேயே பரம்பொருள் உண்மையை
காண்கிறோம் என இதில் மகாகவி உணர்த்துகிறார்.

**தென் மொழிகளின் புத்தக டிரஸ்டு ஆதரவில்**
**பதிப்பிக்கப்பெற்றது.**

